932

...திங்கள்

தமிழரசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 AUG 1939
MADRAS

டி. எம். பட்டம்மா (நாட்டியம்)

தமிழரசு

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியும் வெளி வரும்.

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, சிலோன் உள்நாட்டிற்கு	1—0—0
	பர்மா, பினங்கு சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
	ஜீவிய சந்தா	20—0—0
	தனிப் பிரதி விலை	0—1—0
	மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது	0---2---0

சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகை முன் பணமாகவே மணியாடர் செய்ய வேண்டும். வீண் செலவு அதிகமாகிறபடியால் வி. பி. யில் அனுப்ப முடியாது.

2. விலாசம் மாறும் சந்தாதாரர்கள் புதிய விலாசத்தையும் சந்தா நம்பரையும் பத்திரிகை வெளியாவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே எழுத வேண்டும்.

3. பதிலுக்கு ரிப்ளை கார்டோ, தபால் தலையோ அனுப்ப வேண்டும்.

கட்டுரை எழுதுவோருக்கு

1. கருத்தமைந்த கட்டுரைகள், ஹாஸ்ய வியாசங்கள், சிறு கதைகள் எளிய - இனிய நடையிலுள்ள பழைய - புதிய கவிதைகள், கலைகள் சம்பந்தமான கட்டுரைகள், நல்ல மொழி பெயர்ப்புகள், ஏற்றுக் கொள்ளப்படும்.

2. விஷயங்கள், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். சுருக்கமான விஷயங்கள் முன்னர் கவனிக்கப்படும்.

3. அனுப்பும் எல்லா விஷயங்களுக்கும் காப்பி வைத்துக் கொண்டே அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத விஷயங்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமானால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

4. மதிப்புரைக்கு நூல்களும், மாற்றுப் பத்திரிகைகளும், வெளியிட வியாசங்களும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JAN 193
MADRAS

சென்னை

டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்களுக்கு சிவப்பிரகாச சுவாமிகளால் அருளப் பெற்ற வரப்பிரசாதங்கள்.

பர்மாவில் சகலராலும் புகழ்ந்து
கொண்டாடப்படும் நவரத்தினங்கள்.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றிக் கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல், சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியை பலிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வர வழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும் போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டு வரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு, இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திரசந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும், சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

ஓர் அரிய சஞ்சீவி

14 வயதுள்ள பெண் குழந்தைக்குச் சன்னிபாத சுரமும், கபவாத சுரமும், அதிகரித்து அபாய நிலைமையில் இருக்கும்போது டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடத்தில் காண்பித்ததில் அபாயகரமான நிலையாயினும் இன்பசார மாத்திரையால் குணமடையும் என்று மூன்று மாத்திரை கொடுத்தார். முதல் மாத்திரை கொடுத்த அரைமணி நேரத்திற்கெல்லாம் 105 டிக்கிரி இருந்த சுரம் 102-க்கு இறங்கி விட்டது. மற்ற இரண்டு மாத்திரை கொடுத்ததும் 99-டிக்கிரிக்கு இறங்கி விட்டது. மீண்டும் சுரம் அதிகரிக்கவில்லை. பிறகு டாக்டர் காஞ்சிபுரம் உற்சவத்திற்குச் சென்றார். இப்போது குழந்தை சௌக்கியமாய் இருக்கின்றது. இன்பசாரம் என்னும் மாத்திரை ஓர் அரிய சஞ்சீவி எனவே சொல்லலாம்.

சாமி. வெங்கடேச பெருமாள் செட்டி.

பலம் பெற்றேன்

ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

எனக்கு வயது 75. நான் வயிற்றுப் புண்ணுலும், வாய்ப் புண்ணுலும், ஜுரத்தாலும் சொல்ல முடியாதபடி கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். இதோடு நில்லாது பேதியும் ஆகிக்கொண் டிருந்தது. வாயிலிருந்து நீர் விழுந்து கொண்டே இருந்தது. எழுந்து நடமாட முடியாது எத்தனையோ இங்கிலீஷ் டாக்டர்களிடம் மருந்து சாப்பிட்டேன். சிறிதும் குணம் தெரியவில்லை. எல்லோரும் என்னைக் கைவிட்டு விட்டார்கள். அச்சமயம் இன்பசார மாத்திரையில் ஒரு புட்டி வாங்கிச் சாப்பிட்டேன். எனக்குள்ள நோயெல்லாம் பறந்தோடி விட்டது. ஜுரம் நின்று விட்டது. புண்களெல்லாம் ஆறி விட்டன. தற்சமயம் டாக்டர் வீட்டுக்கு நடந்துவர சக்தி ஏற்பட்டு விட்டது. நான் சிறு பிள்ளையைப் போல் இப்போது வேலை செய்ய பலம் வந்துவிட்டது. நான் இன்று ஸ்ரீரங்கம் சுவாமி தரிசனத்திற்குப் போவதால், கையில் இன்னும் ஒரு புட்டி இருக்க வேண்டு மென நினைக்கிறேன். இது கடிதம் கொண்டுவரும் ஆள்வசம் ரூபாய் 5 பெற்றுக்கொண்டு ஒரு புட்டி அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

பசுமர்த்தி. தேபெருமாள் செட்டி,
நாராயண முதலி வீதி, சென்னை.

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று, பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானுல் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானுல் கிருஷ்ணு அண்டு கம்பெனியாரையும், கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,
தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்துகொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்கும் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,

7—5—32. கார்ட்டன் வூட்ராம் கம்பெனி, மதராஸ்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் சில மாத்திரம் இங்குக் குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக் கூடிய

30 மாத்திரைகள் அடங்கிய புட்டி விலை ரூபா 5.

சிவப்பிரகாச ஜன்னித் தைலம்

நம் தேசத்தில் பாலியத்தில் மோகத்தினாலும், தேகவலிமையினாலும், நாள் கிழமை பாராமல் ஸ்நானம் செய்து புணரும் ஸ்திரி புருஷர்களுக்கு உண்டாகும் ஒருத் தலைநோய், கழுத்து நரம்பு முதலிய வியாதிகளுக்கு இந்தத் தைலம் மிகவும் உபயோகமானது.

உபயோகிக்கும் விதம்:—இந்தத் தைலத்தைத் தலையில் தடவி இரண்டுநாளைக் கொருதரம் ஸ்நானம் செய்து வரவும். ஸ்நானம் செய்தவுடன் ரசம் சாதம் சாப்பிடவேண்டும். இப்படி 2, 3 ஸ்நானம் செய்வதற்குள் தலைவலி நின்றுவிடும். வேறு பத்தியம் கிடையாது.

5 பலம் கொண்ட எண்ணெய் விலை ரூபா 5—0—0.

தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவை போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பயமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு ஆழாக்கு பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்பு வலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன் படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக்கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரி லுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணுவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒண்ணுக்குப் போகும்போது நீர்துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகலமேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம்பெற்றேன்.

இப்படிக்கு,
இராஜரத்தினம் செட்டி.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்கள் முன்னம் அனுப்பிய சகல மேக சித்தாதி எண்ணெயைச் சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனு யிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் நோட்டீசும் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,
கிருஷ்ணசாமி நாயகர்,
2—7—34. பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்
சேலம் ஜில்லா.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற
சகல மேக சித்தாதி எண்ணெய் **புட்டி 1-க்கு விலை ரூ. 5.**

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம்செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5-பலம் கொண்ட டின் விலை ரூபா 1.

இணையற்ற அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வ மெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பாலயர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இரு பாலர்களும்

எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம். மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.

அபிப்பிராயம்

அன்புள்ள உண்மை வைத்தியரே!

நான் அடைந்த சுகத்திற்கு என் ஆயுளுள்ளவரை உங்களை மறப்பது நீதியாகாது. என் உடல் மிகவும் மெலிந்திருந்தது; இரத்தம் வற்றியிருந்தது; சோம்பல் அதிகரித்திருந்தது; மயக்கம், அசதி, தூக்கம், செமியாகுணம் இவைகள் என்னை அடக்கியாண்டன. பல வைத்தியர்கள் என்னைக் கைவிட்டு விட்டனர். ஒரு பிரபல டாக்டர் இது உனக்கு முற்றிவிட்டது. இனி இதை நிவர்த்திப்பது மிகவும் கடினம்; ஆண்டவன் பிராப்திபடி நடப்பதே இனி ஆகக் கூடியது. நீ வைத்தியம், வைத்தியம் என்று ஏங்காதே! மனம் நாடிய சகல வஸ்துக்களையும் தின்று உன் ஜீவிய காலத்தை முடி. ஒருகால் இவ்வித வழியில் நீ சுகம் பெறலாம்; வைத்தியத்தினுல் பெற முடியாது!' என உபதேசித்தார். என் வாழ்க்கையே சமாப்தி அடைந்ததாக நான் அப்பொழுது எண்ணினேன்.

நிற்க, உங்கள் 'தமிழரசு' பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து, உங்கள் 'அயத்தங்க திராவகத்'திற்கு 3 பாட்டில்களுக்குச் சென்ற 1933-ம் வருடம் நவம்பர் மாதம் ஆர்டர் கொடுத்தேன். அதை தாங்கள் உடனே அனுப்பினீர்கள். அந்த மருந்தை இந்த 1934-ம் வருடம் டிசம்பர் 6வ வரை சாப்பிட்டேன். அது எனக்குப் புத்துயிர் அளித்தது! புனர்ஜன்மம் கொடுத்தது' என்னை ஒரு வீரபுருடனுக ஆக்கியது. இப்போது நான் சரீர சுகஜீவியாய் இருந்து வருகிறேன். சரீர சம்பந்தப்பட்டமட்டில் உள்ள சுக அம்சங்கள் யாவும் எனக்கு உண்டாகி இருக்கிறது. நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் குடும்பமும், மருந்தும் ஓங்குவதற்குக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எனது இந்திய சோதர சோதரிகள் இதை உட்கொண்டு நன்மை அடைவார்களாக!

G. M. அலிஹூஸையன் M. H. A.

கௌரவ காரியதரிசி, 'ஹூஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிபெட் நாகூர் 26–12–34.

எமது விலாசம்:

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

பொருள் அடக்கம்

தை பிறந்தது!	....	3
பக்தியும் காதலும் (பாட்டு)	....	4
வாழிய தமிழர்! (பாட்டு)	....	5
பொங்கல் நன்மொழி (பாட்டு)	....	6
ஆசிரியர் குறிப்புகள்	....	7
மாதர்பகுதி—பெண்களைப்பற்றிப் பர்னட்ஷா (பாட்டு)		12
அபலை யிழந்த அனுதைக் காதலன்	....	13
மதிப்புரை	....	16
தமிழ் நாடு (பாட்டு)	....	17
புதைந்த மணி	....	18
ரமணிப் பாப்பா	....	21
சினிமாப் பகுதி—சினிமாக் கலை சார்ந்த சிற்றுரை		23
பொங்கல் பரிசு	....	29
சிறுவர் பகுதி—நன்மதி (பாட்டு)	....	33
நகைச் சுவை	....	35
ஆங்கில மாதும் ராட்டினமும்	....	39
சொப்பன உலகம்	....	43
கூடா நட்பால் நாடுங் கேடு	....	47
மனிதப் பிறவியின் மாண்பு	....	54
ஆ! என்ன? நீ பாகீரதியா?	....	58
சங்கீதப் பகுதி—சங்கீத வித்வானேடு	....	66
சங்கீதத்தைத் தமிழரே கண்டு பிடித்தனர்	....	69
மான் வேட்டையும் மனமாற்றமும்	....	71
வனிதா அல்லது கொலை யுண்ட காரிகை	....	77

குறிப்பு:—'தமிழர'சில் வெளி வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டனவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

சௌம்யன்

ஓர் இனிய

சினிமாக் கதை

207673

ஆசிரியர் :

பாரதிதாசன்

(காபிரைட்)

ஹிம்ஸையா ?—அஹிம்ஸையா எது உபயோகமுள்ளது ? உலகின் நிலே என்ன ? அக்ரமம் ஜயிக்குமா ?—இவைபற்றிச் சினிமா முறையில் இயன்ற ஓர் இனிய நாடகம்.—விலே அணு 6.

நூற்றுக்கணக்கில் வேண்டியவர்கள் விலே விவரம் எழுதித் தெரிந்து கொள்க.

விலாசம் :—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னே.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

(மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர் 10	வெகுதான்ய௵ தை௴ 1939௵ ஜனவரி௴ 15௳	இதழ் 1

தை பிறந்தது !

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது பழமொழி. விளைச்சல் அறுத்துச் செந்நெல்லைத் தீட்டிய தூய அரிசியுடன், பாலும் நறுஞ்சுவைப் பண்டமும், மணம் கமழப் பொங்கலோ பொங்கல் என்ற மங்கல ஒலிக்கிடையில், புதிய ஞாயிறு போற்றிப் புதுப் பொங்கல் படைத்து வாழ்த்தினர் தமிழர் அனைவரும்.

தமிழன் தமிழ் பேசுக! தமிழன் தமிழ் எழுதுக! தமிழ் ஓங்க வேண்டும். தமிழ்க்கலை பல்க வேண்டும். இவை தமிழனின் பேரவா!

கவிதையும் தமிழால்! பண்ணெலாம் தமிழால்! தமிழன்றிப் பிற மொழித் தீட்டுப் போயொழிதல் வேண்டும். சங்கத் தமிழால் தமிழ் நாட்டவர் சிங்கத் தமிழராதல் வேண்டும்.

தமிழ் நாட்டைத் தமிழன் ஆட்சி செய்க. தமிழன் புத்துணர்ச்சி பெற வேண்டும் — இவை தமிழரின் பேரவா! தை பிறந்தது வழி பிறக்கும்!

புது ஞாயிறு பொற்கதிர் வீசி எழுந்தனன் கிழக்கில்! தமிழர் தமிழ் வெல்க தமிழ் வெல்க என்றெழுந்தனர் தமிழ் நாடெங்கும்!

வந்த தூற்றலும் நடுக்கமும் தீர்த்தது புதுவெயில்! தமிழர், வந்த இன்னலைப் புறங்கண்டனர் ஊக்கத்தால்!

எங்கணும் தமிழர் எழுச்சி. எங்கணும் தமிழர் ஆரவாரம். பேருக்கம்! தலை சிறந்த முயற்சி தமிழரசிக்குப் பட்டங் கட்ட! தை பிறந்தது வழி பிறந்தது!

செல்லாது பகைவர் பொய்ம்மை! செல்லாது சுயநலத்தார் அதிகாரம்! தமிழரின் நூறுயிரம் தோள்கள், இருநூறுயிரம் சுடர் விழிகள் தம் உத்தேசத்தை நோக்கிவிட்டன. வானிடை தமிழ் தமிழ் என்பதன்றி மற்றோர் ஒலி காணோம். தமிழர் படை எழுச்சி யால் எள் விழ இடமில்லை புவியில்! தை பிறந்தது வழி பிறந்து விட்டது!

குலத்துக் கொருநீதியா?—தொலைந்து போகட்டும். தமிழர்பால் வன்னெஞ்சு காட்டுதல்—ஒழிந்து போகட்டும்.

எல்லாரும் சமானத்தர்! எவர்க்கும் நலன்! எவர்க்கும் இன்பம்! வழி பிறந்தது! வாழிய செந்தமிழ்! வாழிய தமிழ் நாடு!! வாழ்க தமிழராட்சி!!!

பக்தியும் காதலும்

[பாரதி தாசன்.]

தைபிறக்கத் தண்கடல்மேல் தான்பிறந்தான் பொற்பரிதி!
மெய்புளகித் தோர்செம்மல் மேல்நோக்கி வாழ்த்திநின்றான்!
ஆளன் புதுமனைவி ஆங்கேதன் நாதனின்
தோளின் அழகைச் சுவைத்திருந்தாள் தன்விழியால்!

* * *

வல்லிருள் போயிற்று; நல்லறிவு வார்த்துவிட்டாய்;
சொல்லிற் புதுமை தொழிற்புதுமை சேர்த்துவிட்டாய்!
இன்மை தவிர்த்து, வளமை எழஎழுந்த
பொன்னம் பரிதி புதுப்பரிதி வாழிநீ
என்று தான்வாழ்த்தி எழில்மனைவி யைப்பார்த்துப்,
'பொன்னே, புதுப்பரிதி வாழ்த்தேடி' என்றுரைத்தான்.
ஏந்திழையாள் நெஞ்சும் இருவிழியும் தன்னருமைக்
காந்தனிடத்தே கலந்திருந்த காரணத்தால்
'இன்பந் தருகின்ற இருதோளும் வாழி'எனத்
தன்கணவ னைவாழ்த்திப் பொன்னுடம்பு பூரித்தாள்

* * *

பாயும்நறுங் காதலொடு பாற்பொங்கல் தாம்புசித்தார்
நேய இரவை நினைந்து.

வாழிய தமிழர்!

[பாரதிதாசன்]

பொங்கிற்றுப் பொங்கல் நன்றே!
பொலிந்தது தமிழர் நாடு!
சிங்கத்தின் பிடர் சிலிர்த்துத்
தோன்றுதல் போல வானில்
செங்கதிர் விரித்துத் தோன்றும்
ஞாயிறு தெரியக் கண்டு
தங்கள்தோள் உயர்த்து கின்றார்;
தமிழினல் பாடு கின்றார்!
தமிழர்கள் செங்க ரும்பின்
சாற்றோடு தேன் கலந்த
தமிழ்நிகர் பாற்பொங் கற்கண்
தனிச்சுவை அனைத்தும் கண்டார்;
தமதினங் கண்டார்; தங்கள்
தோள்கண்டார்; தறுக்குக் கண்டார்;
தமிழ்நாடு தமிழர்க் கொன்ற
சத்தியங் கண்டார் யாண்டும்;
சுடுபனிக் கொடுமை யில்லை
ஆரியக் கறைபோ யிற்று
விடுதலை தமிழர் கண்டார்;
வீழ்ந்தது பகையின் கூட்டம்;
கொடியுயர்த் திட்டா என்ற
குதூகல ஆர்ப்பி னோடு
படிமிசைத் தமிழர் யாரும்
பல்லாண்டு வாழி வாழி!

பொங்கல் நன்மொழி

[த. உலகநாதன், கரந்தைத் தமிழ்க் கல்லூரி, தஞ்சை]

பொங்கற் புதுநாள் புலர்ந்தது, புலர்ந்தது,
பொங்குக பாலே! பொங்குக பாலே!
இறைவ னருள்நமக் கென்றும் பொங்குக
மன்னவன் செங்கோல் மன்னி யோங்குக
எங்கணும் இயற்கையின் இன்னொளி தழைக்க
அன்பு பொங்குக அருளும் பொங்குக,
சாந்தம் பொங்குக, சமரசம் பொங்குக,
சத்தியம் பொங்குக, தருமம் ஓங்குக,
வீரம் பொங்குக, வெற்றி மிகுக,
பொங்குக பாலே! பொங்குக பாலே!!
தமிழர்கள் வாழ்வு தழைத்தினி தோங்குக
தமிழ்க்கலை யோங்குக தமிழ்நெறி தழைக்க,
தமிழர செழுக தமிழ்நிலம் செழிக்க
ஒற்றுமை நெறியே ஊன்றுக நாட்டில்,
மடியும் மிடியும் குடியும் ஒழிக
ஒழுக்கமும் ஊக்கமும் ஓங்குக யாண்டும்
எங்கும் இணையிலா இன்பமே பொங்குக,
பொங்குக பொங்கல்! பொங்குக பொங்கலென்
றெங்கும் முழக்கம் எதிரொலி செய்யப்
பொங்குக பாலே! பொங்குக பாலே!

வாழ்த்து

வாழிபல ஊழி வளமார் தமிழரசு
வாழி தமிழ்வளர்க்கும் வள்ளல்கள்—வாழியரோ
பொங்குதமிழ்ச் சங்கங்கள் போற்று தமிழ்க்கலைகள்
தங்குகபல் லின்பந் தழைத்து.

நலன்! நலன்! நலன்!

எஸ். சீனிவாச ஐயங்கார் வெளி வருவாரா ?

1939-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாள் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கனம் எஸ். சீனிவாச ஐயங்கார் அவர்கள் சமஷ்டியை ஏற்கக்கூடாது என்ற அபிப்பிராயத்தை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அவர் பேசியதில் அநேக நியாயங்கள் அடங்கியிருந்தன. அதுசமயம் கனம் பிரதம மந்திரியவர்களும் அங்கே இருந்தாரல்லவா? அவரும் சமஷ்டியை எதிர்க்க வேண்டும் என்ற பாவனையிலேயே பேசினார்.

கனம் சீனிவாச ஐயங்கார் ஒரு பெரிய அறிவாளி, தென்னாட்டின் மதிப்புக்குரியவர், எல்லா மக்களாலும் போற்றக்கூடியவராய் விளங்கியவர், பொதுவாக ஜாதிமத பேதமற்றவர் என்று சொல்லக் கூடியவர், வேண்டும்போது பூணூலையும் ஐயங்கார் பட்டத்தையும் உதறித் தள்ளி, சமவாழ்க்கையைக் கோரும் மக்களோடு கூடிவாழ்ந்து வரக்கூடியவர், என்ற எண்ணம் வெகு பேர்கள் மனதில் இருந்ததுண்டு.

ஆனால், அதற்கு இடமில்லாத வகையில் கடற்கரையில் பேசிவிட்டார். ஏனெனில், சமஷ்டியை எதிர்ப்பதாகக் கூடிய கூட்டத்தில் இந்தி எதிர்ப்பு இயக்கத்தைப்பற்றிப் பேசினார். பேசினாலும் பரவாயில்லை என்றால் திராவிடர் ஆரியர் என்று கிளர்ச்சி செய்வதைக் கண்டித்தார். தாமறிந்த காரணத்தையும் கூறினார். தாம் ஜாதியை விரும்பவில்லை என்றும், 'எல்லோரும் திராவிடரானால் நானும் திராவிடன், அல்லது எல்லோரும் ஆரியரானால் நானும் ஆரியன், அல்லது வேறு என்னவென்றாலும் நானும் அதனுடன் கலந்தவன்' என்றும் சொன்னார்.

அப்படிப் பேசிய பொது வுடைமைக்காரராகிய இவர் அம் மேடையிலேயே பூணூலை எடுத்தெறிந்திருப்பாரேயானால், மகாத்மா பட்டத்திற்கு மேற்படியான 'பொதுஜன ரக்ஷகன்' என்ற பேரால் இவரை மக்கள் அழைத்திருப்பார்கள். அதற்கு இடமில்லாமல் போய்விட்டது. அதுவும் போனால் போகட்டும் என்றால்; இந்தி எதிர்ப்பாளர்களுக்கு, 'ஆரியன் தமிழன் என்ற கிளர்ச்சியை விட்டுவிட வேண்டும்' என்ற புத்திமதியைக்கூறி

வணங்கிக் கேட்டுக் கொள்வதாய்ச் சொன்னார். அவர் சொன்னது பெருந்தன்மை வாய்ந்ததாகவே காணப்பட்டது.

ஆனால், அதே சமயத்தில் தம்முடைய பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிரதம மந்திரியாருக்கும், இவ்வளவு பெரிய கிளர்ச்சிக்குக் காரணமாயுள்ள கட்டாய இந்தியை இஷ்ட இந்தியாகச் செய்ய வேண்டியது, என்று இத்தகைய நெருக்கடியான சமயத்தில் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் இவரை மக்கள் பொது நோக்குடையவர் என்று நினைத்திருப்பார்கள். நியாயாதிபதியாக இருந்து பேசவேண்டிய அன்றைய மேடையில், கட்சிக்காரராகிய பிரதம மந்திரியிடம் வக்காலத்து வாங்கிய வக்கீலாக ஒரு கட்சிக்காகப் பேசினாரே என்ற எண்ணம் எல்லோருடைய மனத்தையும் வாட்டியது.

இப்போதாவது பிராமணர் அல்லாதாரும் மற்றவரும் இவரைப் பின்பற்றி, இவர் தலைமையில் நடக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வேலை செய்ய நினைத்தால், பிரதம மந்திரிக்கு எச்சரிக்கை மூலமோ அல்லது வேண்டுகோளாகவோ மேற்சொன்னதுபோல் செய்துவிட்டு, பூணூலை எடுத்தெறிந்துவிட்டு ஐயங்கார் பட்டத்தையும் தூரத் தள்ளிச் சமஷ்டி எதிர்ப்புத் தலைவரா யிருக்கலாம். அதனால் வேறு கட்சிக்கு இடமிராது என்பது மாத்திரமன்றி, இவரை வெல்லக் கூடியவரும் இவர் கொள்கையைக் கண்டிக்கக் கூடியவரும், இந் நாட்டிலேயே இருக்க மாட்டார் என உறுதி கூறுவோம். அப்போது மகாத்மா காந்தியும் இவர்க் கொப்பாக மாட்டார் என்பது நிச்சயம். இந் நோக்கத்தோடு ஐயங்கார் வெளி வருவாரா ?

காட்டிலாக்கா வருமானம்

காட்டிலாக்காவில் அரசாங்கத்திற்கு வரும் வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்ப்பதென்பது ஒவ்வோர் ஆண்டின் பட் ஜட்டிலும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அத்தகைய வரவு செலவுக் கணக்குகளை வெளியிடும் பட்ஜட் கணக்கிலுள்ள காட்டிலாக்கா வரவானது தெளிவாகக் காட்டப்பட வேண்டுமானால், காட்டிலாக்காவின் வரும்படிக் கணக்கை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதாவது, ரிசர்வ்காடு, ரிசர் வில்லாத காடு என்று. ரிசர்வ் காட்டில் வரும் வருமானத்தை மாத்திரம் காட்டிலாக்காக் கணக்கில் வைக்க வேண்டும். ரிசர்வ் செய்யாத காட்டில் வரும் வருமானத்தைக் கலெக்டர் வசம் ஒப்படைக்க வேண்டும்.

இந்த வரும்படி ரெவினியூ கணக்கில் வைக்க வேண்டும். அதன்படி கணக்கு ஏற்பாடு செய்து, பார்த்துக் காட்டிலாக்காவில்

வருமானம் இருக்கும் பக்ஷத்தில் அந்த இலாக்காவை வைத்துக் கொள்ளலாம். இல்லாவிடில் காட்டிலாக்காவைக் கலெக்டர் வசம் ஒப்படைத்து விட்டு, D. F. Oக்களை எடுத்துவிட்டு, ரேஞ்சர்களுக்கு, சப் மாஜிஸ்டிரேட் பவரையும் கொடுத்து நடத்தும் பக்ஷத்தில், ஒழுங்காகவும் லாபகரமாகவும் பணம் மிச்சப்படும்படி ஷை இலாக்கா நடைபெறும். தவிர, தற்கால D. F. Oக்கள் பொது மக்களுக்கு இழைத்து வரும் துன்பங்கள் ஒழியும். காங்கிரஸ் கவர்ன்மெண்ட் வந்தும் காட்டிலாக்காவில் D. F. Oக்கள் செய்யும் அனுவசிய புறக் கணிப்புக்களைக் கவனிக்க வில்லையானல் என்னென்று சொல்லுவது. ஆதலால் கனம் காட்டிலாக்கா மந்திரியவர்கள் இதில் கவனம் செலுத்துவாரா?

14-வது ஜஸ்டிஸ் மகாநாடு

1938 டிசம்பர் 29, 30, 31ல் சென்னை ஜலன்டு கிரௌண்டு மைதானத்தில் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு நடந்தது. இம்மகா நாட்டைப் பற்றிப் பக்கம் பக்கமாய் எழுத இடம் இருந்தாலும், அவற்றை விடுத்துப் பொதுவாகச் சிலவற்றை மாத்திரம் சொல்கிறேன். இதற்கு முன், பதின்மூன்று ஜஸ்டிஸ் மகாநாடுகள் நடந்திருக்கின்றன. அவற்றில் பெண்கள் கலந்துகொண்டனர் என்ருல் இரண்டொருவரே! இந்த மகாநாட்டிலோ பதினயிரக் கணக்கான பெண்மக்கள் கூடியிருந்ததுமன்றி, இரவு 10 மணி வரையில் எழுந்திராமல் ஊக்கத்தோடு இருந்ததை நோக்க, அக்கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கும், கட்சியின் பலத்திற்கும் அத்தாட்சியாக இருந்தது.

கடைசி நாள் கூட்டத்தில் சிறையிலிருந்து வெளிவந்த ஸ்ரீமதி அருணகிரி நாதர் உள்படப் பெண்களை மகா நாட்டுக்கு அழைத்துவந்த காட்சி மலையை யொத்த மனதையும் கறைத்து விட்டது, இரும்பை யொத்த இருதயத்தையும் உருக்கி விட்டது என்ருல், இதைக்காட்டிலும் வேறு என்ன சொல்லுவது என்பது தெரியவில்லை.

ஆண்மக்கள் சுமார் 20000 பேர் கூடி இருந்தனர். ஒலி பெருக்கி இருந்த காரணத்தால் கொட்டகைக்கு வெளியிலும் மக்கள் கூடியிருந்தனர். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் இதுவரையில் இத்தகைய கூட்டத்தைப் பார்த்திராத வகையில் இக்கூட்டமானது அபரிமிதமான உணர்ச்சியோடு விளங்கியது.

இப் பெரிய கூட்டமானது இந்தி எதிர்ப்பால் ஏற்பட்ட கிளர்ச்சி, பெண் மக்கள் சிறை சென்றதால் ஏற்பட்ட ஊக்கம், சோமசுந்தர பாரதியார் உள்பட்ட தமிழ்ப் பண்டிதர்களால் உண்டாக்கப்பட்ட உணர்ச்சி இவற்றின் வடிவம் என்றே சொல்ல

லாம். இத்தகைய உணர்ச்சி வடிவமான கூட்டத்தில் கலந்து, தங்கள் கட்சியை இதில் நுழைத்துக் கொண்டதால் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு என்று ஒன்று நடக்க இடமிருந்தது.

அது எப்படி இருந்ததென்றால், ஒரு குரங்கானது மொழியுரிமை என்ற நவரத்தின மாலையை எடுத்துக்கொண்டு தென்னமரத்தில் ஏறிக்கொண்டது. விவசாயக் கடன் மசோதா வெறுப்பாளர், ஜவுளிக்கடை வரி வெறுப்பாளர், மதுவிலக்கு வெறுப்பாளர், இந்தி எதிர்ப்பாளர், ரிஜிஸ்டரேஷன் வரி எதிர்ப்பாளர், ஆலயப் பிரவேசப் பூச்சாண்டியில் நம்பிக்கையில்லா ஆதித்திராவிடர், ஷை மசோதாவை வெறுக்கும் வைதீகர்கள் ஆகிய இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும்போது, ஜஸ்டிஸ் என்னும் ஏணிவந்து மரத்தில் சாய்ந்து, என் மூலமாக மரத்தின்மேல் ஏறி நவரத்தின மாலையை மீட்க வேண்டும் என்று சொல்லுவதுபோல் தோன்றிற்று.

1912-ம் ஆண்டில் செல்லமையர் என்ற (திருவல்லிக்கேணி) முனிசிபல் ஓவர்சியர், டாக்டர் நஞ்சுண்ட ராவ் அவர்களின் மூலமாக முனிசிபல் ஊழல்களைச் சந்திக்கிழுத்து வைத்துக் கொண்டேயிருந்தார். அந்த நஞ்சுண்ட ராவ் அதன் பிறகு டாக்டர் நாயர் முதலியவர்களை எலெக்ஷனில் நிற்கவைத்தார். ஆயினும் நஞ்சுண்டராவ், திரு. சிவஞான முதலியாரால் தோற்கடிக்கப் பட்டார். அதிலிருந்து நஞ்சுண்ட ராவ் முனிசிபல் ஊழல்களைத் தாமே முனிசிபல் கூட்டங்களில் பிரஸ்தாபிக்க முடியாமற் போயிற்று. அதனால் அவர் முனிசிபலில் வெற்றி பெற்ற நாயர் மூலம் பிரஸ்தாபத்துக்குக் கொண்டுவர வேண்டியதாயிற்று.

டி. ஆர். ராமச்சந்திர ஐயரால் ஏற்பட்ட அவமதிப்பால், தியாகராஜ செட்டியார் நஞ்சுண்டராவிடம் சென்று அவர் மூலம் டாக்டர் நாயருடன் கலந்து கொண்டார். அதன் பிறகுதான் ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. அந்த ஜஸ்டிஸ் கட்சி இப்போது அதைவிட நூறு பங்கு பலத்தை யடைந்ததற்குக் காரணம் C. R. அவர்களாதலால் அவரை ஜஸ்டிஸ் கட்சி என்றும் மறக்கலாகாதல்லவா?

ஈ. வே. ரா. அவர்கள் ஜஸ்டிஸ் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். சிலர் பெரியார் சிறையிலிருக்க, மகாநாட்டில் எப்படித் தலைமை வகிக்க முடியும் என்று நினைக்கலாம். அதுதானே இங்கு ஆச்சரியம்! அதுதானே கனம் பிரதம மந்திரியின் சாமர்த்தியம் அதுதானே ஈ. வே. ரா × C. R.—காதலன் காதலியின் தத்துவம்!

ஈ. வே. ரா. அவர்களின் சூட்சும உடலைப் படங்களிலும் உருவச் சிலைகளிலும் அமைக்கவும், அவற்றை லக்ஷக்கணக்கான

மக்கள் சூழ்ந்து வரத் தேரில் வைத்து இழுக்கவும், துதிக்கவும், கற்பூர தீபாராதனைகள் செய்யவும், கோடிக்கணக்கான மக்கள் கடவுள் என்றே பாராட்டவும் ஆகிய இப்படிப்பட்ட கௌரவத்தை ஏற்படுத்தத் தானே C. R. ஆச்சாரியார் ஈ. வே. ரா. அவர்களின் தூல உடம்பைச் சிறையில் அடைத்தது.

இல்லாவிடில் இப்படி யெல்லாம் நடக்குமா? இப்படிப்பட்ட கௌரவத்தை உண்டாக்கிய C. R. ஐ. எவராலும் மறக்கவே முடியாது.

ஆனால், இன்றே ஜஸ்டிஸ் கட்சி அழிந்து போகவேண்டும் என்று C. R. நினைப்பாரேயானால், அதையும் அவர் ஒரே நிமிஷத்தில் செய்துவிடலாம். ஆனால் C. R. எண்ணம் அப்படியில்லை. ஏனெனில், ஜஸ்டிஸ் கட்சியை அவர் ஒழித்துவிட நினைப்பவராயிருந்தால், கோடிக்கணக்கான மக்களின் எதிர்ப்பு இருப்பது தெரிந்தும், ஈ. வே. ரா. அவர்களைத் தெய்வமாகக் கொண்டாடுவதைப் பார்த்தும், 'இந்தியைக் கைவிடமாட்டேன்' 'அடக்குமுறை நிறுத்தமாட்டேன்' என்று சொல்லிவருவாரா?

எனவே, ஜஸ்டிஸ் கட்சியை இனியும் பன்மடங்கு பலம் பொருந்தும் வகையில் C. R. எதிர்மறையில் வேலை செய்து வருகிறார்.

தருமம்

தனதுயிர் போலவே பிறவுயிர் தன்னையும்
நினைத்து மனமொழி மெய்களால் உதவி
செய்தலே தருமமாம் அவ்விதஞ் செய்தலே
ஒருவன் பெற்ற உயரிலக் கணமாம்
கருணை பக்தி என்ற குணங்கள்
விருத்தி யடைந்தால் மேன்மை யறத்தின்
அருமை விளங்கும். ஈதனு பவமே
ஒருவனுக் கியற்கையி லுள்ள தேதான்
தரும சிந்தை சேர்க்கை யன்று
'தருமம் தலையைக் காக்கும்' என்று
விருப்புடன் ஔவை விளம்பினள் அன்றோ
தருமம் துன்பம் நீக்கிச் சமுகப்
பெருமையைப் பெரிதும் காக்க வல்லதாம்
ஆதலால் தருமம் போற்றுவீர்
சோதரரே நாம் சுகித்து வாழவே!

—புதுவை ப. சுந்தரவேலு



பெண்களைப் பற்றிப் பர்னாட் ஷா

புவிப்பெரியான் ஜார்ஜ்பெர்னார்ட் ஷாவுரைத்த
பொன்மொழியைக் கேளுங்கள் நாட்டிலுள்ளீர்!
'உவந்தொருவன் வாழ்க்கைசரி யாய்நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவிஆவாள்!
அவளாலே மணவாளன் ஒழுங்குபெற்றான்!
அவளாலே மணவாளன் சுத்திபெற்றான்!'
குவியுமெழிற் பெண்களுக்கே ஊறுசெய்யும்
குள்ளர்களே கேட்டீரோ ஷாவின்பேச்சை!
அவனியிலே ஒருவனுக்கு மனைவியின்றேல்
அவனடையும் தீமையையார் அறியக்கூடும்?
கவலையுற ஆடவர்கள் நாளும்செய்யும்
கணக்கற்ற ஊழல்களை யெல்லாம்அந்த
நவையற்ற பெண்களன்றோ விலக்குகின்றார்!
நானிலத்தில் மார்தட்டும் ஆடவர்கள்
சுவைவாழ்விற் கடைத்தேறத் தக்கதான
சூக்ஷுமமும் பெண்களிடம் அமைந்ததன்றோ!
கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்!
புல்லென்றே நினைக்கின்றீர் மனைவிமாரைப்
புருஷர்களின் உபயோகம் பெரிதென்கின்றீர்!
வல்லவன்பே ரறிஞன்ஷா வார்த்தைகேட்டீர்
மனோபாவம் இனியேனும் திருந்தவேண்டும்.
இல்லையெனில் எதுசெயலாம்! பெண்ஆண்என்ற
இரண்டுருளை யால்நடக்கும் இன்பவாழ்க்கை.

—பாரதிதாசன் கவிதைகள்

அபலை யிழந்த அனாதைக் காதலன்

[குன்னூர் டி. பி. பரிமணம்]

அன்றலர்ந்த தாமரையா அவள்? ஆம்! உண்மையில் அவளொரு அழகிதான். அவளது பார்வை களங்க மற்றது. இனிய செந்தாமரை வதனம். கருத்த நீண்ட கூந்தல், இளகிய நெஞ்சம், இனிய குரல். இத்துடன் அவளுக்குப் பாடவும் தெரியும். ஆனால் ஆடத் தெரியாது. இவ்வழகி இந்திய நாட்டின் இணையற்ற எழுத்தாளர்களின் கற்பனைக்கும் எட்டாதவளா யிருந்தாள்.

கொள்ளிடக்கரையிலே அடர்ந்த நாணற் புதர்களின் மத்தியி லமைந்துள்ள, அச்சம பாரையிலே இவளது தோற்றம் எத்தகைய வனப்பு வாய்ந்தது! அகண்ட கொள்ளிடத்தின் நீரோடும் காட்சி! மீன் கொத்திகள் தாவித் தாவிக் குதிக்கும் காட்சி! பனை தென்னை இவைகளின் தலைமையில் நாணற் குவியல்கள் பரந்து வளர்ந்து நிற்கும் பசுமைக் காட்சி. இளந்தென்றலில், அந்த நாணல் அசைந் தாடுகிறதல்லவா? ஆனால் அவளது வாழ்விலே அவள் அசைய மாட் டாள். விதி யவளை அசைத்து விட்டால்?

கதிரவனின் ஆட்சி யடங்கும் நேரம். ரகுநாதனும் ரஞ்சினி யைத் தேடி வந்துவிட்டான். அவனும் அந்தப் பாரையைத்தான் நோக்கிச் செல்லுகின்றான். இணையற்ற இயற்கை யன்னையின் கொலு மண்டபத்திலே, அவ்விளங் காதலர்களின் நெஞ்சத்திலே இன்ப வெள்ளம் ஓடுகின்றது. அவர்களது கவிதையும் பேச்சும் காற்றில் கலந்து செல்லுகின்றது. இதுதான் அவர்கள் கண்ட இன்ப உலகத்தின் ஆனந்தம். இவர்களென்ன, இயற்கை யன்னை யின் செல்வ மக்களா? உலகமே! அவள் என் காதலி என்கின்றான் அவன்; அவள் தன் காதலனைப் பிரியாளாம். இது விந்தையன்று! மேதாவிகள் கூறும் விதியானது அவர்களைப் பிணைத்தது. தெய்வீக சக்தியின் வலிமை பாக்கிய சக்கரத்திலே திகழும் காதற் பறவை கள்! கடவுளே, உனதருள் அவர்களுக்கு என்று மிருக்காதா?

காலச் சக்கரம் சுழன்றது. ரஞ்சினிக்கு ஏகபோகமான ஆஸ்தி அவளது தாயொருத்திதான். அதுவும், தனது அருமருந்தன்ன செல்வியின் சுதந்திரத்தில் தலையிடாத தாய், தன் புதல்விக்காக வாழ் நாளை ஒப்படைத்த தாய்—படுகுழியில் வீழ்த்தப்பட்ட தாய்— அவள் அவளுக்குத் தாய் தான். இருப்பினும் இவ்வுலகையும், தன் ஏக புதல்வியையும் தனியே விட்டுக் காலனுக்கு இறையாவாள் என்பதை ரஞ்சினி எவ்வாறு அறிவாள். அவள் இறைவனடியை

நாடிச் சென்றாள். இறக்கும் தருவாயில் மட்டும், 'கண்ணே! கடவுள் உன்னைக் காப்பான்' என்று மட்டும் கூறினாள். ஆனாலும் ரஞ்சனி அனாதைதான்! இருக்கும்போது செய்யாத சடங்கும் இறந்தபின் செய்யப்பட்டது தாய்க்கு.

அன்றைய தினம் இரவு; காரிருள், அத்துடன் வாழ்க்கையின் இருளும் தொடர்ந்தது. இரண்டு உருவங்கள் ரகுநாதன் வீட்டை நாடிச் செல்லுகின்றது. அவர்கள் அக்காதற் பறவைகள்தான்! துக்கத்தால் அவைகள் பறந்து செல்லவில்லை; தளர்ந்த நடைதான். கதவும் தட்டப்பட்டது. ரகுவின் தாயார்—செல்வச் சீமாட்டி—அந்தத் தனிப் பிறவி—அவனை வெறிக்க நோக்கி, 'இவள் என் இங்கு வரவேண்டும்' என்றாள். ஆனால் அவன், 'அம்மா! அவள் அனாதை' என்றான் துக்கத்துடன். என்ன சொல்லி யாது பயன். ரஞ்சினியைக் கூர்ந்து நோக்கினாள் அவள். அவளது பாணம் கிளம்பியது. செல்லச் சீமாட்டியின் உதடுகள் துடித்தன. அடுத்த வினாடி, 'அடி தாசி! வெளியே சென்றுவிடு' என்றாள். இச் சொற்கள் அக்களங்கமற்ற தாசியின் உயிரை யுண்டுவிடும்போல் காணப்பட்டது. தாசி வயிற்றில் பிறந்த குற்றம்! உயிர்களைப் படைத்ததும் பிரமனே! இதுதான் அவளது விதியின் பயனா?

மீண்டும் அதே நடுநிசி'. திண்ணையின் மறுகோடியில் அயர்ந்து கிடக்கும் தன் காதலனை உற்று நோக்குகிறது அவளது பரந்த விழிகள். கற்பனைக் கெட்டாதது அவளது துயரம். விழிகளிலே கரைந்தோடும் நீரைத் தாங்க, பூமிதேவியைத் தவிர யாருமங்கில்லை. அவள் அனாதை! அதுவும் தன்னுயிர் போன்ற காதலனிருக்கும் போதே. காதலன்! ஆம்! அவனுக்கொரு வணக்கம்'; அவளுடைய கடவுளாம் அவன்! என்ன மடமை.

உதய சூரியனை இன்னும் காணவில்லை. வீராவேசங்கொண்ட காளியைப்போல் செல்லுகிறாள் அவள். அதே சமபாரையிலே, எந்த இன்பத்தைக் கண்டாளோ அதே கொலுமண்டபத்திலே, அவள் அமர்ந்திருக்கும் காட்சி பயங்கரமானது. அதோ அந்தக் காற்றிலே அவளது ஒலி கலந்து வருகிறது. இவ்வகண்ட உலகிலே அவளுக்குத் தங்க விடமில்லையாம்! உயிரைக் கொள்ளை கொள்ளும் அக்கொள்ளிடத்திலே இடமுண்டாம். அனாதைகளைக் கங்கை ஆர்வமுடன் ஏற்றுக் கொள்வாளாம்! இது உண்மைதானா? அவள் காதலனைப் போற்றுகின்றது அவ்வொலி; மீண்டும் இந்து சமூகத்தைச் சபிக்கின்றது. அந்தோ! அவ்வொலியுடன் அக்காற்றுமன்றோ சபிக்கின்றது. கதிரவன் உதயமாகுமுன்னே, அதோ அவள் மறைந்து விட்டாள். கொள்ளிடத் தேவியும் அவளை அணைத்துக் கொண்

டாள். துச்சமான இவ்வுலகினின்றும் அவ்வனுதையை மீட்டுக்கொண்டாள். அந்த இயற்கையின் கொலுமண்டபத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த அக் காதற் பறவைகளில் ஒன்று சென்று மறைந்தது. மற்றது ; சோகப் பறவைதான்!

அதே மாலைதான் ; அவன் அந்தச் சமபாறையிலே அமர்ந்திருக்கின்றுன். அவனைச் சுற்றிலும் நாணற் பரப்புகள் தலைகுனிந்த வண்ணமிருக்கிறது. எந்த இயற்கையின் ஆனந்தத்திலே இன்பமும் அன்பும் ததும்பியதோ, அதேயிடத்தில் இன்று சோகரசம் கலந்த ஒலி யெழுகின்றது. அடிக்கடி, 'அவள் என் காதலி! அவள் அனுதை!' என்ற ஒலி அக் காற்றுடன் கலந்து வருகின்றது. இது தான் இன்ப வாழ்க்கையின் இறுதி நாள்.

இந்து சமூகமே! இன்றும் நீங்கள் அவனைக் காணலாம். அந்தப் பாரையிலே அல்லது அந்த நாணற் புதர்களினிடையே அவன் சுற்றிக் கொண்டிருப்பான். அவன் காதலி சென்றவிடத்தைத் தேடிக் கொண்டிருப்பான். இனி யவன் வீரன்—தடையற்றவன்—உலகை வெறுத்தவன்—ஆனுல், துக்கத்தின் பேரொலிமட்டும் அவனை விட்டகலவில்லை. அக் கொள்ளிடக் கரையும், அப்பாறையும் தான் அவனது இருப்பிடம். அந்தப் பாறையிலே அவனது காதலியின் பெயரைச் செதுக்கிக் கொண்டிருப்பான். அவனது வேலை இன்னும் முடிவுபெறவில்லை. ஆனுல், அதைப் பார்த்தும் உலகம் அவனைப் பைத்தியம் அல்லது சித்தப் பிரமை என்றுகூறி நகையாடுகின்றது! இதுதான் உலகின் இயற்கை ; இந்து சமூகமே! உன்னை நீ சீர்படுத்த மாட்டாயா?

(சுப்பன் கள்ளைக் குடித்துவிட்டு பள்ளிக்கூடத்தில் வந்து கூத்தாடிக்கொண்டு உபாத்தியாயரைப் பார்த்து) ஸார் என்னை யாராவது 'மனிதன்' என்று ஒருமையில் சொன்னுல் அவர்களை நையப் புடைப்பேன்.

உபாத்தியாயர்:—என்னடா சுப்பா, வாயில் வந்தபடி உளருகிருய் விஷயம் என்ன?

சுப்பன்:—நேற்று 'மனிதன்' என்ற ஒருமைச் சொல்லை பன்மையாக்கும்போது 'கள்' ஐத்தானே சேர்த்தோம். அதே மாதிரி நானும் இப்போது வயிறு நிறையக் கள்ளை குடித்திருக்கும் போது, சேர்த்திருக்கும்போது என்னைமட்டும் ஒருமையில் சொல்லுவானேன்?

—கே. பாலசுப்பிரமணியன்

‘கடற்கரையின் எதிரொலி அல்லது தமிழ்நாடு தமிழருக்கே’

என்ற சிறுநூல் வரப்பெற்ளேம். இது ஐயம்பேட்டை தென் இந்திய இளைஞர் நலவுரிமைக் கழகத்தார் வெளியிட்டது. தமிழின் தொன்மை, பிறரால் தமிழடைந்த கேடு, பின்னரும் தமிழ் மொழிக்குப் பிறர் தேடும் சூழ்ச்சி, தமிழின் உயர்வு, தமிழர் கடன் முதலிய பலவற்றையும் இனிய தமிழ் நடையால் திறம்பட ஆக்கப் பட்ட இந் நூலைத் தமிழர் அனைவரும் வாங்கி வாசித்தல் வேண்டும். இந் நூல் விற்பனையால் வரும் ஊதியம் தோழர் ராமசாமிப் பெரியாரின் 60-ம் ஆண்டு நினைவு மலர் வெளியிடுவதற்கு உதவப்படும் என வெளியிட்டோர் உரைத்துள்ளார்கள். கிடைக்குமிடம் :— அமைச்சர், தமிழர் கழகம், ஐயம்பேட்டை, தஞ்சாவூர் ஜில்லா. விலை 2 அணு.

தமிழ்க் கலை

தமிழ்க் கலை என்னும் பெயரிய மாதப் பத்திரிகையின் 5-வது இதழ் வரப்பெற்ளேம். இனிய தமிழ்க் கட்டுரைகள், கவிதைகள், சித்திரம் இவற்ருல் இதழ், சிறந்திருக்கிறது. தமிழ்ச் செல்வம் வேண்டுவோர்க்குத் தமிழ்க் கலையையும் வாங்கிப் பயன் எய்துமாறு நாம் கூறவிரும்புகிறோம். இதன் ஆசிரியர் தோழர் பரமசிவாநந்தம். நல்ல தமிழறிஞர்; தமிழர்பால் அன்புடையார்.

வருடச் சந்தா உள்ளூர் அணு 6. வெளியூர் அணு 8.

விலாசம் :—மானேஜர், தமிழ்க் கலை, காஞ்சிபுரம்.

காலண்டர் வரவு

திருச்சி, நகை வியாபாரி S. அருணசலம் செட்டியாரால் அனுப்பப்பட்ட 1939-ம் வருஷத்துக் காலண்டர் ஒன்று வரப்பெற்ளேம்.

டைரி வரவு

மாடல் பிரஸ்காரரால் அனுப்பப்பட்ட ‘மாடல் பிரபந்த டைரி’ ஒன்று வரப்பெற்ளேம். ஒவ்வோர் பக்கத்திலும் ஆழ்வார்களின் பாசுரமும் சேர்க்கப் பட்டிருக்கிறது. விலை அணு 0–12–0 கிடைக்குமிடம்:—மாடல் பிரஸ், கிடங்குத் தெரு, ஜி. டி. சென்னை.

தமிழ் நாடு

[பாரதிதாஸன்]

செந்தமிழ் நாடென்றன் அன்னை—தொண்டு
செய்திடுமாறு பணித்தனள் என்னை.

கொந்த வரும்பகை நீக்கென் றதிர்த்தாள்
கோணல் வழக்கத்தை எண்ணிக் கொதித்தாள்.
சொந்த மறக்குல மாட்சியும் ஆட்சியும்
சோர்வுற்றதோ என்று கூவிக் குதித்தாள் (செந்)

அன்புநல் வாய்மை, அறம், வளர்த் திட்டாள்
ஆர்க்கும் நலம் என்று முரசறைந் திட்டாள்
வன்புகள் செய்ய வரும்பகைக் கூட்டத்தை
மாய்த்திடவே வடிவேலினைத் தொட்டாள். (செந்)

வைகையும் தீம்புனற் காவிரி ஆறும்,
வாழை பலா செழும் கன்னலின் சாறும்,
பெய்யும் சுவை மொழி மாதர்தம் கற்பும்
பேசப்பேச நெஞ்சில் இன்பம்வந் தேறும் (செந்)

பாலைப் பொழிந்து தரும் பசுக் குலமும்
பைம்பொழில் தேன்மலர் செழுநன்செய் நலமும்
காலமெல்லாம் தென்றல் ஈந்திடு பொதிகையும்
காணில் இதற்கீடில் லைஎந்த நிலமும் (செந்)

உலகு தொடங்கிய நாளினில் அன்னாள்
ஊக்க மிகுத்தற மார்க்கங்கள் சொன்னாள்
நிலையினில் அன்பு நிலைபெரி தென்னவே
நேர்மை எலாம்வகுத் தாளவள் முன்னாள் (செந்)

வேங்கடத்தின் தெற்கில் அலைகடல் மூன்றும்
வெல்க வெல்கஎன ஆர்த்திட ஆங்கே
ஓங்கு தமிழ்தனில் ஓம் என்று பாடிய
உவகைப் பெருக்கினில் கூத்திடு கின்றாள் (செந்)

புதைந்த மணி

[பாரதி தாசன்.]

அவள் என்னை ஏன் கோபிக்கிறாள்! அவள் யாரைத்தான் காதலிக்கிறாள்!—ஒன்றுமே புரியவில்லை சேரனுக்கு. குயிலின் குரல் கேட்குந்தோறும் அங்கயற் கண்ணியின் குரல் அவன் காதில் விழும். முல்லையைப் பார்ப்பான்; அங்கயற்கண்ணி எதிர் நின்று சிரிக்கும் காட்சி தோன்றும். அவளை அவன் மறந்திருக்க வழியில்லை, இயற்கைச் சித்திரம் இல்லாத இடம் இல்லை ஆதலால்.

சேரன் துயரம் பொங்கி வழிந்தது. சேனைபதியின் மகன்மேல் அவள் நெஞ்சம் சென்றதா—இதை நினைப்பான். கத்தியை உருவுவான். நன்றாய் அறியவேண்டும். பழயபடி கத்தியை உறையிற் போடுவான். அவள் என்னைவிட உயர் நிலையுடையவளா? செல்வமா; தலைமையா? தோள் வலியுள்ள வீராங்கனையா அவள். அப்படி ஒன்றுமில்லை. என்னை அவள் கோபிக்கிறாள். வெறுப்பான வார்த்தைகளால் அதட்டுகிறாள்—சேரன் நெஞ்சம் கலங்கினான். அவன் உட்கார்ந்திருந்த சோலை அங்குள்ள பறவைகள், வளர்ப்பு மான், சும்மா இருந்தன. அவன் பேசாதிருந்தான். உள்ளம் கேள்விகள் கிளப்பின. அதுவே தப்பான விடைகளைத் தந்தன. சேரனுக்கு அமைதியில்லை. அச்சமயம் அவன் கண்ணெதிரில் அங்கயற்கண்ணி தோன்றினாள் வெகு தூரத்தில். சேரனுக்கு நெஞ்சு படும்பாடு ஆலைவாய்ப் பஞ்சுபடாது.

அவளிடம் ஓடும் அவன் உள்ளம். பயந்து திரும்பும் அதே உள்ளம்! நெருப்பிற் குதித்துத் தன் பசிக்கு உணவு கைக் கொள்ளத் தடையில்லை. நெருப்பிற் குதித்தும் அந்நெருப்பு உணவு தர மறுக்குமானால் என்ன பண்ணுவது? எத்தனை முறை உதாசீனம் செய்வாள். பொருட் படுத்தாமல் எத்தனை முறை சென்றேன். கெஞ்சினேன். தணிந்த சொல் ஒன்றுக்கு வழியில்லை. அவள் தந்தை 'திரை கொண்டான்' என்னையும் தன் பெண்ணையும் மணமக்கள் என்று வாழ்த்தி விட்டான். அவனால் தடையில்லை. தாயால் தடையில்லை.

சேரன் நான்! சக்ரவர்த்தி! நாடாளும் பேறு பெற்றேன். அவளும் நானும் ஒரு தேரில் வீற்றிருந்து வசந்த மண்டபம் நோக்கிப் போகும் ஓர் பெரும் பேற்றை நான் எதிர் பார்க்கவில்லை. 'வருக அத்தான்' இந்த ஒரு வார்த்தை. நெருப்பை நீக்கிய ஒரு சிறு வரவேற்பு—வழியில்லை. ஐயையோ அவள் உடல் அனைத்தும், உறுப்பனைத்தும், அழகுக் கூட்டம். உரையனைத்தும் சீறும் பாம்பின்

விஷம், என்று சேரன் செயலற்றிருந்தான். அவன் உள்ளம் சோரும், ஏதாவது செய்யச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

கண்ணுக் கெட்டிய இடத்தில் இருந்த அங்கயற் கண்ணியின் எதிரில் சேனபதி மகன் வந்து சேர்ந்ததையும் அவள் அவனுக்கு இருக்கை காட்டி உபசரித்ததையும் சேரன் கண்டான். அவன் உயிர் உணர்வு அனைத்தையும் தன் செவியில் சேர்த்து அங்கு நடக்கும் பேச்சை உற்றுக் கேட்டான். நீரோட்டத்தில் துரும்பு மிதந் தோடுவதுபோல் அவன் தன்னையும் அறியாமல் அவ்விடத்தை நோக்கி நடந்தான் மறைவாக! அவர்கட்குச் சமீபத்தில் ஒரு மாமரத்தின் பின் ஒளிந்து நின்றான்.

சேரன் பல நாட்களாக எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் இது தான். சேனபதியின் மகன் இடையில் நீண்ட வாள் தொங்கிற்று. நிராயுதபாணியாக அவன் வந்திருந்தால் அவனை எதிர்க்க முடியாது. சேரன் அந்த வகையில் மகிழ்ச்சி யடைந்தான் பச்சைத் தமிழனுதலால்.

அவன் என்ன சொல்லுவான்! அவள் எப்படிப் பேசுகிறுள்— என்று உற்றுக் கவனித்திருந்தான்.

சேனபதி மகன், அங்கயற்கண்ணியைப் பார்த்தபடி இருந் தான். அங்கயற்கண்ணி நெஞ்சம் ஏதோ வேலை செய்துகொண் டிருந்தது. ஒரு மங்கையின் எதிரில் ஒரு வாலிபன் ஒரு காரண மின்றிக் குந்தியிருப்பானுனல் அந்த மங்கைதான் என்ன நினைப் பாள்— இந்த யோசனை சேனபதி மகனுக்கு இல்லை. இந்த யோசனைக்கு ஆதாரமான அறிவு அவளின் அங்க அழகில் இடை விடாது சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

இச்சமயம் அங்கயற்கண்ணி, சேரன் முன்னிருந்த இடத்தை நோக்குவதும் அங்கு அவன் இல்லை யென்று தேர்ந்து அதன் அண்டை அயலில் நோக்குவதையும் சேரன் கண்டான்.

சேரன் உள்ளம் முணுமுணுத்தது: ஓகோ நான் வந்திருப்பது அவளுக்குத் தெரியும் போலிருக்கிறது. அதனுல் தன் காதலனை சேனபதியிடம் சகஜ வார்த்தை பேச மயங்குகிறுள் என்று நினைத்தாள்!

அங்கயற்கண்ணி சேனபதி மகனிடம் கூறுவாள்: நண்பரே, அந்த அரசனைத் தேடுக இந்தச் சோலையில்.

சேனபதி மகன்:—ஏன்!

அங்கய:—என் நாக்குச் சோர்ந்து போகுமட்டும் அவனைத் திட்டவேண்டும். அதோ அந்தப் புன்னை மரத்தின் மேடையின் மேல் இருந்தான் இப்போது.

சேனபதி மகன்:—நம்மிருவரையும் அவன் பார்த்திருக்கக் கூடுமா?

அங்கய:—பார்த்திருக்கலாம்.

சேனபதி மகன்:—நம்மிருவரின் ஒற்றுமை அவனை ஓட்ட மெடுக்க வைத்துவிட்டது.

அங்கயல்:—அப்படியானல், நான் என் வேலையாளிடம் பேசியிருப்பதை அவன் எத்தனையோ முறை பார்த்திருக்கிறன். அவன் ஓட்ட மெடுக்கவில்லையே!

சேனபதி மகன் திடுக்கிட்டுப் போனன். சேரன் மகிழ்ச்சிக் கடலில் வீழ்ந்தான். ஆயினும் அவள் என்னைக் காதலிக்கிருள் என்பதற்கு அத்தாட்சி வேண்டும் என்று இருந்தான்.

இச்சமயம் சேனபதி மகன், தலை குனிந்தபடி தன்னிருப்பிடம் நோக்கி நழுவினன். அங்கயற்கண்ணி சோலையில் வேருெருபக்கம் ஓடினள். ஓடிய மங்கை மரத்தின்பின் நின்ற சேரனைக் கண்டு நின்ருள். சேரன் அவளைக் கண்டு தவித்து நின்ருன். எதிரில் நிற்கும் இருவிக்ரகங்களைத் திரும்பிப் பார்த்த சேனபதி மகன் பின்புறம் வந்து ஒரு மரத்தில் மறைந்து நடப்பதைக் கவனித்திருந்தான்.

அங்கய:—செயலற்ற தோளும் தீவிரமில்லாத நெஞ்சும் உள்ளவன் ஆடவனல்ல! மங்கை யொருத்தி தனியிருக்க நீ வந்ததென்ன? மரம்போல் நிற்பதென்ன? விழியைப் பார் நொள்ளை மாதிரி! உதட்டைப் பார் இருட்டு மாதிரி!

சேரனுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. அவனுக்கு உலகம் பயனற்றுத் தோன்றிவிட்டது. அவளை மாய்த்தபின் தான் மாண்டொழியலாம் என நிச்சயித்தான். சிலசமயம் இனிமேல் நல்ல வார்த்தை சொல்லக் கூடும் என்று பொறுந்திருந்தான்.

அங்கயற்கண்ணி முன்விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து—தோளைப் பார் வற்றிய சருகுமாதிரி—சேரன் அவள் தப்பி ஓடாதிருக்க அவளை இறுகப் பிடித்தான். தரையில் மோதத் தூக்கினன்.

அவள்:—ஆஹா இத்தனை நாள் இந்த உணர்வு எங்கே போயிற்று அத்தான்!

அவன்:—என்மேல் வெறுப்பென்று நினைத்தேனடி. நீ என் மேல் வைத்த காதல் உன் உள்ளத்தில் புதைந்த மணி! அதை நான் அறியவில்லை.

ரமணிப் பாப்பா

[பாரதிதாசன்]

ஒரு நாடகம் நடத்துவதென்றால் எவ்வளவு கஷ்டப்பட வேண்டிய திருக்கிறது. நாடகம் எழுத ஓர் ஆசிரியரைத் தேட வேண்டுமா? வேண்டாமா? வேண்டும். அந்த ஆசிரியர் மூக்குக்கண்ணாடியைத் துடைப்பதற்கு ஒரு நாழிகை செல்லும், இறகு எடுக்கப் பொழுது போகும். இன்னும் மூக்குப் பொடி, அதைத் துடைக்கும் சிரமம், சொல்லி முடியாது. கதையை முடிக்க எத்தனையோ மாதங்கள். கதை முடிந்ததா என்று விசாரிக்க வருபவர்க்கு எத்தனையோ செருப்புத் தேயக் கூடும்.

கதை முடிகிறதோ, முடிவதற்குள் நாடகத் தலைவர் அது வேண்டாம், ராமர் பட்டாபிஷேகத்தை எழுதுங்கள் என்று சொல்லி விடுகிறாரோ ஆர் கண்டார்?

சரி கதை முடிந்து தொலைந்தது. அதன்மேல் பாட்டுக்கள், பாட்டுக்கு முன் வர்ண மெட்டுக்கள், வர்ண மெட்டுக்களின் முன்னாலேயே நடிகரின் குரல் சரி பார்த்தல், சரி பார்க்கும்போது நடிகர் கனைக்கும் கனைப்பு, நினைப்பு, பல!

பிறகு இன்னாருக்கு இன்ன படினம் என்று நிச்சயம் செய்தாக வேண்டும். இதில் ஏராளமான தொல்லை. தொண்டை நன்றாயிருப்பதால் அவன் குரூபியா யிருந்தாலும் ராஜா வேஷம் கேட்பான். நான் மீசையை அடித்துக் கொள்ள முடியாது பெண் வேஷம் கூடவே கூடாது என்று கூச்சல் போடுவான் மற்றொரு மனிதன். ஏணி மாதிரி இருக்கும் 43 வயதுள்ள ஒருவன் ராஜகுமாரன் வேஷங் கேட்பதும் உண்டு. அந்த வேஷத்தை அவனுக்குக் கொடாவிடில் அவனுக்குள்ள செல்வாக்கால் கம்பெனியையே கலைத்து விடவும் கூடும்.

எங்கள் நாடகம் துவக்கி இந்தச் சித்திரை வந்தால் சரியாக இரண்டு வருஷம் ஆயின என்று நாடகத் தலைவர்கள் சொல்லுவதை நாம் கேட்டதில்லையா?

இந்த ஆபாசம், காலதாமதம், ஆக்ஷேபணை, சமாதானம் ஒன்றும் இல்லை. ஒன்று கேளுங்கள் :—

என் குழந்தை பேர் ரமணி! வயது நான்கு! இன்னொரு குழந்தை வசந்தா, ஐந்தரை வயது! எதிர்த்த வீட்டு மங்கலக்ஷ்மி அடுத்த வீட்டுக் குழந்தை, இப்படி ஐந்தாறு குழந்தைகள் சேர்ந்தார்கள்.

என்ன நடந்தது தெரியுமா?

ரமணி மற்றக் குழந்தைகளை நோக்கி :—

நான்தான் ராஜாவாம்! நீதான் மந்திரியாம்! மங்கலக்ஷிமி சேவகனும். குப்பு திருடனும். தனத்தின் வீட்டில் திருடன் முறுக்கைத் திருடி விட்டானும். சேவகன் பிடித்துக்கொண்டு வருவானும். ராஜா என்ன பண்றது மந்திரி இன்னு கேட்பானும். மந்திரி சாவடியில் போடச் சொல்றுனும். என்ன வரயா ?

மற்றவர்கள் சரி என்றார்கள்.

கதை எழுதியாயிற்று. நடிகர்கள் பொறுக்கி ஆய்விட்டதா இல்லையா? படினம் வரப்படுத்தியும் ஆய்விட்டது. நாடகம் துவக்கும் சமயம்.

திருடன் திருடுகிறுன். சேவகன் பிடித்துக் கொண்டான். திருடன் ஐயையோ என்று கதறுகிறுன் சேவகன் அடிப்பதால். சரித்திரத்தில் நீதி பெறப்படுகிறதா இல்லையா? துயர பாகம் எப்படி? தத்ரூப மல்லவா ?

திருடன் ஒரு நாற்காலியில் அடைக்கப்படுகிறுன் மந்திரியின் ஆலோசனைப்படி ராஜாவின் ஆக்ஞையால்.

திருடன் சிறைச்சாலையில் துன்புறுத்தப்படுகிறுன். திருடனுக்குத் துன்பம் சகிக்க முடியவில்லை. அவன் சொல்லுகிறுன் :— இப்படித்தான் அடிப்பாங்களா சாவடியிலே ?

சேவகன் :—ஓ கேட்டுப் பாரேன் ஆரையாவது ?

திருடன் :—நான் கேக்க மாட்டேன். இனிமே அடிச்சா இந்தக் கல்லாலே மண்டையை ஒடச்சிபுடுவேன்.

கதை முடிந்தது. அழகிய துன்பியல் நாடகம். பெரியவர்கட்கு இது தெரியவில்லையே !

நண்பர்:—நீர் ஏன் உண்ணுவிரதம் அனுஷ்டிக்கிறீர்?

உ-விரதி:—சாப்பாட்டுக் கஷ்டமா யிருப்பதால் நான் சாகும் வரைக்கும் உண்ணு விரதமிருப்பேன்.

நண்பர்:—சாவும் முடிய இல்லையா ? அப்படியானுல் சாகும் நேரம் வந்தால் உண்ணுவிரதம் நிறுத்தப்படுமோ. —பரமானந்தன்

ரோட்டில் மண்ணைத் தூவிக்கொண் டிருந்த பையனைப் பார்த்த ஒருவர்:—என்ன 'குறும்பாடா' செய்றே.

பையன்:—இல்லை 'செம்மறி யாடு' செய்றேன்.

—M. தாமோதரன்

சினிமாக் கலை சார்ந்த சிற்றுரை

[கலானந்தம்]

சென்ற இதழில் சினிமாக் கலையின் சிறப்புப்பற்றிக் கூறினோம். பேசும் படத்தில், வடநாட்டுப் படங்களைவிட, நம் நாட்டுப் படங்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

1-வது கதை யமைப்பு :—வட நாட்டார் தங்களிடமுள்ள நடிகர் ஒவ்வொருவரின் போக்குக்கேற்ற முறையில் அவரவர்கட்குரிய பாத்திரங்களை அமைத்து, நடிகர்கள் கஷ்டமின்றி நடிப்பதற்கும், நடிப்பில் ஊக்கமூட்டு முறையிலும் புதிதாகக் கதைகளையமைத்துப் படம் எடுக்க முற்படுகிறார்கள். நம் பட முதலாளிகளோ ஏதாவது ஒரு கதையை எடுத்துக்கொண்டு, புராணப் படத்தில் நடித்தற்குரியோனைச் சமூகப் படத்திலும், சமூகப் படத்தில் நடித்தற்குரியோனைச் சரித்திரப் படத்திலும் கதாநாயகனாக நடிப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். நடிகனின் பெயரைக் கருதியோ, அல்லது அவர் நடித்த படங்களின் எண்ணிக்கை காரணமாகவோ, அல்லது பட முதலாளியின் அபிமானத்திற்காகவோ தகாத முறையில் திட்டம் செய்கிறார்கள். நாட்டின் கால நிலைக்கேற்கவும், கலை அபிவிர்த்தியின் பொருட்டும் பொது மக்களின் அபிப்பிராயத்திற்கிணங்கவும், கதைகளைத் தேர்ந்தெடுக்கும் முறை கையாளப் படுவதேயில்லை. ஒருவர் எடுத்த படத்தையே சிறிது மாற்றியோ, அல்லது மாறு பெயர் கொடுத்தோ, அல்லது அதே பெயருடனே போட்டியிட்டு எடுக்க எண்ணும் பெரிய தவறு நம்மிடையே மலிந்து கிடக்கிறது. 'அவர் படத்திற்கு முன்னதாக நம் படம் வெளி வரவேண்டும். நம் படத்திற்கு முன்னதாக அவர்கள் படம் வரப் போகின்றதே' என்ற அவசரத்தால் காலவரையறைகளையும் குறுக்கிச், சரியான முறையில் படம் கவனிக்கப்படாமல், எப்படியோ திரைக்கு வந்துவிடுகிறது. கதைக்குத் தக்க நடிகரும், நடிகர்க்குத் தக்க கதையும் பொருத்தமாக அமையச் செய்வதோடு; அவசரப் படாமல் நிதானமாகப் படம் எடுக்கப் படவேண்டும்.

2-வது வசன மெழுதல் :— முக்கியமாக நம் தமிழ்ப் படங்களில் பார்ப்பனத் தமிழ் நடையே பழக்கப்பட்டு வருகிறது. வசனம் எழுதுவோர் அவ்வப் பாத்திரத்தின் குலாச்சார வழக்கச் சொற்படி எழுத வேண்டும். ஒரே தமிழை நெல்லை, மதுரை, தஞ்சை, சென்னை ஆகிய ஒவ்வோரிடத்திலும் பலமாதிரியாகப் பேசுவார்கள்.

அந்தந்தப் பிரிவில் உள்ளவனாக நடிக்கும் நடிகனுக்கு, அந் நாட்டு வழக்கப்படியே பேசும்படி வசனம் அமையப் பெறவேண்டும். இம் முறையில் பெரும்பாலும் சில படங்களே வெற்றி பெற்றுள்ளன. ஆகவே வசனம் எழுதுவோர் எல்லாப் பிரிவினரின் பழக்க வழக்கங்களும் தெரிந்தவராய் அமைக்கப்பட வேண்டியதோடு, வசனம் பாமரமக்கட்கும் புரியும்படியான நிலையில் எழுதப் பட வேண்டும்.

3-வது பாட்டு அமைப்பது :—தற்காலம் படக் காட்சிகளில் நாடகம் போன்று எண்ணற்ற பாடல்களிருப்பது வெறுக்கத் தக்கதா யிருக்கிறது. இந்த வகையில் வட நாட்டுப் படங்கள் பூரண



'தாயுமானவ'ரில்

வெற்றி பெற்றிருக்கின்றன எனச் சொல்லலாம். முக்கியமாக காதல், சோகம், விகடம், நடனம், வீரம் இந்தக் கட்டங்களில் ஒவ்வொரு பாட்டு அமைத்துக் கூடியவரையில் பாட்டுகளைக் குறைப்பதே மேல். தற்காலம் 50, 60 என்ற எண்ணிக்கைகள் இல்லாமல் நம் படங்களில் பாட்டுகள் குறைந்திருப்பினும் இன்னும் குறைக்கப்பட வேண்டிய தவசியம். அன்றியும் பாட்டுகளின் கருத்துக்கள்

உயர்ந்த நோக்கங் கொண்டவையா யிருக்கவேண்டும். ஆபாசமான கொச்சைத் தமிழில் எழுதும் முறை நீக்கப்படல் வேண்டும். பாட்டிற்குரிய சீர், தளை, மோனை, எதுகை, அணி முதலிய இலக்கணங்கள் பெரும்பாலும் கவனிக்கப்படுவதே கிடையாது. இது எப்படி யிருக்கிறதென்றால் ஒரு பொம்மைக்கு கையிருக்கும் இடத்தில் காலையும், காலிருக்கும் இடத்தில் தலையையும் வைத்துச் செய்து அழகு பார்த்து ஆனந்திப்பது போலிருக்கிறது. இதன்றி நம் நாட்டிற்குரிய வர்ண மெட்டுகள் எவ்வளவோ மலிந்து கிடக்க வட நாட்டார் பாட்டுகளைப்போல், தம்ழ்ப் பாட்டுகளை யமைக்கப் படுகிறது. நடிகருக்கு விளங்காமல் கஷ்டப்பட்டுப் பாடும்படி யிருக்கி

'சந்தனத் தேவ'னில்

றது. அப்படிப் பாடினாலும் அருவருக்கும்படியாகவும், அன்ன நடை நடக்கப்போய்க் காக்கைக்கு உள்ள நடையும் போன மாதிரியும் இருக்க வில்லையா? அதுவும் வராமல் இதையும் மறந்து, திரிசங்கு சொர்க்கமாக இசைக் கலைக்கு இழைக்கப்படும் தீங்கு எடுபடல் வேண்டும். இது நீங்கப்பெற்று, இசைக் கலைக்குப் பெருமையும் கொடுத்துப் போற்றப்பட முதலாளிகளும் தொழிலாளிகளும் சேர்ந்துழைக்க முன்வரல் வேண்டும்.

4-வது ஸ்டூடியோ:—நம் படங்களை வடநாட்டில் எடுப்பதால் நம் நாட்டில் உபயோகப் படுத்தப்படும் தட்டு முட்டுச் சாமான்கள் அந் நாட்டு ஸ்டூடியோக்களில் பெரும்பாலும் கிடைப்பதரிது, உதாரணமாக நம் நாட்டுப் பெண்களால் உபயோகப் படுத்தபடும் தண்ணீர்க் குடம் வேண்டுமென்றால் கிடைக்காது. அவர்கள் நாகரீகப்படியே எல்லா சாமான்களும் நமக்குக் கொடுப்பார்கள். இதற்காக நமக்கு அவசியமான சாமான்களை, ஸ்டூடியோவிற்குப் பணத்தையும் கொட்டிக் கொடுத்துவிட்டு; இங்கிருந்து நமது சொந்தப் பணத்தைக்கொண்டு வாங்கி, ரயில்வேக் கம்பெனிக்கும் கட்டணம் கட்டி எடுத்துக் கொண்டுபோய், திரும்பி வரும்பொழுது தன் படம் சினிமாக் கலையின் சிகரத்தை எட்டிவிட்டதாக, ஏற்படும் இறுமாப்பினால் ஸ்டூடியோக்காரர்களுக்குக் கொண்டு போன சாமான்களையும் தட்சணையாகக் கொடுத்துவிட்டு அவசரத்தில் திரும்பி விடுகின்றனர். ஏன் இந்த வீண்செலவெல்லாம் நமக்கு? ஆயிரக் கணக்கில் நம் பணத்தை அன்னியர் சாப்பிடுவதைவிட நம் நாட்டு மக்களுக்குக் கொடுத்து ஆதரிக்கக் கூடாதா? சென்னையில் எத்தனை ஸ்டூடியோக்களிருக்கின்றன! பட முதலாளிகள் சென்னையிலுள்ள ஸ்டூடியோக்களில் பெரிய செட்டிங்குகள் ஏராளமான தட்டு முட்டு சாமான்கள் நல்ல தொழிலாளிகள் இவை யெல்லாம் இல்லை யென்று சொல்லலாம். உண்மைதான். என் மனைவி என் கண்ணுக்கு அழகாயில்லை. என் ஆசை நேசத் தாசிதான் ரூபலாவண்யத்தோடு காட்சி யளிக்கிறாள் என்றால் என் இருக்க மாட்டாள்! நீ தேடும் பணமும் சொத்து சுகமும் தேவடியாள் அனுபவிக்கும்போது, உன் மனைவி சோற்றுக்கின்றிக், கட்டத்துணியின்றி, நிற்க நிழலின்றி, சோபையற்றிருப்பது சகஜந்தானே. தமிழ்ப் படங்களை நம் நாட்டிலே எடுப்பது என்று தீர்மானம் செய்தால் பணம் நம் நாட்டிலே தங்கும். ஸ்டூடியோச் சொந்தக்காரர்களும் போதிய வரும்படி கிடைப்பதால், தற்காலம் வறுமையால் வாடுவதைப் போலில்லாமல் ஏராளமான சாமான்களும் நல்ல தொழிலாளிகளும் உயர்ந்த உடை முதலிய தட்டுமுட்டு சாமான்களும் சேகரித்தும் வைப்பார்கள். ஆகலின் வடநாடு சென்று அங்குள்ள ஸ்டூடியோத் தொழிலாளிகள் உட்கார் என்றால் எழுந்திருக்கவும், வா என்றால் போகவும், நம்முடைய அபிப்பிராயம் அவர்களுக்குத் தெரியாமலும், நம் படத்தைப்பற்றிய வரலாறு கொஞ்சமாவது அவர்களறியாமலும், ஒன்றுக்கொன்று முரண் பட்டுப் படம் நாசமாய்ப் போகும் பெருத்த நஷ்டம் நம்மைவிட்டு ஒழியும் நாள்வரை நம்படங்கள் உருப்படப் போவதில்லை.

5-வது ஒலிப்பதிவு:—ஒலிப்பதிவுக் கருவி (மைக்ராபோன்) தன் வேலையைச் செய்து ஒலி சரியான முறையில் பதிவு செய்யப்படு

கிறதா என்பதை, ஒலிப்பதிவாளரன்றி மற்றையோரும் ஒத்திக்கை காலங்களில் அடிக்கடி கவனிக்கவோ அல்லது தீர்மானமாகப் படம் எடுக்கப்படும் காலத்திலே 'கவனிக்கவே முடியாது. ஒலிப்



'ராதா கிருஷ்ண'வில் ஓர் காட்சி

பதிவால் வருங்குற்றம் முழுதும் ஒலிப்பதிவாளரைச் சேர்ந்ததே யன்றி, மற்றையோரைச் சிறிதும் பற்ருது. நடிகர்களிற் சிலர் சிரித்தால் அழுவதுபோலவும், அழுதால் சிரிப்பதுபோலவும் இருக்கும். ஆதலின் ஒலிப்பதிவாளர்க்குக் கதை முழுதும் தெரிவிக்கப் படுவதோடு, அன்றைய படப்பிடிப்பில் எந்தப்பகுதி எடுக்கப்படும் என்னென்ன காட்சிகள் என்பனபற்றியும் தெளிவாக அறிவிக்கப் படவேண்டும். இல்லையேல் காதல் கட்டத்தில் நடிகன் சிரிப்பது அழுவதுபோலிருந்தால் ஒலிப்பதிவாளர் என்ன செய்வார் பாவம். ஒலி தெளிவாக இருந்தால் 'ஒகே' என்று சொல்லிவிட்டு இயந்திரத்தை ஓட்டிவிடுவார். ஆகையால் இவ்வித விபரீதங்கள் இல்லாது ஒலிப்பதிவு கவனிக்கப்படுவதில் முதலாளிகளும் டைரக்டரும் சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டிய தவசியம்.

6-வது படப்பிடிப்பு:—படப்பிடிப்பு முதலாவதாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம். இதில் முக்கியமாக ஒளிப்பிரயோகம் (லைட்ஸ்) சரியாயிருத்தல்வேண்டும். பெரும்பாலும் அநேக படங்களில் லைட்டின் வெளிச்சத்தால் வரும் கிரணப்போக்கு மறைவுபடாமலே தெளிவாகத் தெரிகிறது அன்றியும் இரவு 1 மணிக்குப் படுக்கையறை அளிக்கும் காட்சியானது, பகலில் அது எப்படி யிருந்ததோ அதேமாதிரிதானிருக்கிறது. இக்காட்சிக்கு முன்னல் 'இரவு ஒரு மணி' என்ற எழுத்துக்களைக் காட்டிச் சமாதானமடையக் கூடாது. மேலும் ஒரு நடிகனுக்கு முன்பார்வையும் இன்னொருவனுக்குப் பக்கப்பார்வையும் படத்தில் அழகைக் கொடுக்கும். இது இயற்கை. ஆதலின் அவரவர்கள் முகவாட்டத்திற்குத் தக்கபடி படப் பிடிப்பிருக்க வேண்டும். ஓர் அறையை ஒரே பக்கமாகக் காட்டுவதைவிட அந்த அறை பலமுறை காட்சியளித்தால், பல பக்கப் பார்வை கொடுத்தால் பார்ப்பதற்கு நன்ருயிருக்கும். படப் பிடிப்பின் முழுப் பொறுப்பும் படம் பிடிப்போரைச் சேர்ந்ததே. இதிலும் தொழிலாளியின் முழுக்கவனமும் மற்றையோரின் சிரத்தையும் வேண்டும்.

மலையாளி—ஒருவர், தமிழ் இலக்கண இலக்கியம் படித்த தன்னிடமுள்ள வேலைக்காரனைக் கூப்பிட்டு அவசரமாக 'தாக்கோல் (திறவுகோல்) எடுத்துக்கொண்டு வா' என்ருர்.

வேலையாள்—எஜமானனின் கைத்தடியை எடுத்துக்கொண்டு போக அவர் ஒன்றும் விளங்காமல்;

எஜமான்:—இது எதற்காக? யாரடா கேட்டது?

வேலைக்காரன்:—நீங்கள்தானே தாக்கோல் கொண்டு வரச் சொன்னீர்கள். கையில் தாங்கும் கோல் தாக்கோல் என்று கொண்டு வந்தேன்.

பொங்கல் பரிசு

[G. R. ராஜன். குகை]

செல்வம் பொருந்திய சேலமா நகரில் நமது வீரண்ணனை அறியாதவர்கள் மிகச் சிலரே. கட்டு மஸ்தான தேகமும், கம்பீரமான தோற்றமுமுள்ள அவன், மிகவும் சாந்தமான குணத்துடன் தன் வாழ் நாட்களைப் போலீஸ் உத்தியோகத்தில் கழித்து வந்தான்.

குபேரப் பட்டணமென விளங்கும் குகைமாநகரில் தமிழபிமானிகள் ஓர் பொதுக்கூட்டம் நடத்தினார்கள். அக்கூட்டத்திற்கு ஆயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும், வந்திருந்ததுமின்றி நமது வீரண்ணனும் வந்திருந்தான். தலைவர்கள் 'என்றுமுள தென்றமிழ்' என்பதைப் பற்றிப் பிரசங்கம் செய்தார்கள். கூட்டமும் சரியாக 9-30 மணிக்கு முடிவடைந்தது. ஜனங்கள் தமிழின் பெருமையைப்பற்றி அவரவர்களுக்குத் தோன்றியபடி பேசிக்கொண்டே வீட்டிற்குப் போய்க்கொண் டிருந்தார்கள். நமது வீரண்ணனும் நேராக போலீஸ் ஸ்டேஷனை நோக்கி மணிமுத்தா நதிக்கரையில் போய்க் கொண்டிருந்தான். இருள் சூழ்ந்திருந்தாலும், ஆற்றில் ஜலமானது இருகரையிலும் புரண்டு ஓடும் ஓசையாலும், நமது வீரண்ணன் சற்றுத் தயங்கிப் பக்கத்திலுள்ள பள்ளத்தாக்கின் வழியே வந்து ஓர் ஒற்றையடிப் பாதை வழியே நடந்தான். அப்போது அவன் மனதில் பல எண்ணங்கள் உதித்தன. தான் 8 வருஷ காலம் போலீஸ் வேலையிலிருந்தும், உயர்பதவிக்குப் போகாமல் தனக்குப் பின் பலர் உயர் பதவி பெற்றது அவரவர்களுடைய அதிஷ்டமே. பூர்வத்தில் நாம் என்ன செய்தோமோ இந்த 18 ரூபாய் சம்பளத்திலேயே காலத்தைத் தள்ளுகிறோமென்று பலவாறு சிந்தித்தான். அவன் மனமானது காற்றினும் கடு வேகமாய்ச் சென்று ஓர் நிலையில் நின்றது. பிறகு அவன் ஆம், உண்மைதான் B. A. M. A படித்த பட்டதாரிகள் மாதம் 10, 12 ரூபாய் கிடைத்தால் போதும் என்று சொல்லும் இக்காலத்தில் எனக்கு இதுவே போதுமென்று மனதில் நினைத்தவாறே ஒற்றையடிப் பாதையை விட்டு ஆற்றுப்பாலத்தை அடைந்தான்.

அன்றுமாலை சேர்வராயன் மலையில் பெய்த கனத்த மழையின் காரணத்தால், ஆற்றில் ஜலமானது செல்வோம் செல்வோம் என்ற ஜெயகோஷத்துடன் ஓரே மூர்க்கமாகப் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுப் பாலத்தைக் கடந்து அருகாமையிலுள்ள வசந்த விலாஸ் கட்டிடத்தின் மதில் சுவர்ப்பக்கம் போய்க்கொண்டிருக்கும் சமயம், சுவரின் அந்தப் புறத்தில் யாரோ சிலர் பேசும்

சப்தம் கேட்டு இந்த இரவில் இங்குப் பேசுபவர் யார்? அதை நாம் அறிய வேண்டுமென்று சுவரின் பக்கம் நின்று கவனித்தான்.

முதல் குரல்:—நாகராஜ் 'சபாஷ்' இன்றைய தினம் சதியாலோசனை வெகு ஜோர். இதுபோல் எப்பொழுதும் ஒவ்வொருவரும் உற்சாகத்துடனிருந்தால் எடுத்த காரியத்தை வெற்றியுடன் பூர்த்தி செய்து விடலாம். எல்லா சௌகரியங்களையும் நமது தலைவர் கொடுக்கும்போது நமக்கென்ன அதிலும் நீ இன்றைய தினம் பேசிய வார்த்தைகளை நான் இதற்கு முன் கேட்டதேயில்லை. அது உனக்கு யாரால் உபதேசிக்கப்பட்ட வார்த்தை அதை நீ எனக்குச் சொல்ல முடியுமா?

நாகராஜ்:—என்ன ராஜசேகரா! இதையெல்லாம் நீ அறியாததைப் பார்த்தால் மாதந்தோறும் வெளிவரும் தமிழ் அரசு என்ற புத்தகத்தைப் படிப்பதில்லை போல் தோன்றுகிறதே.

ராஜசேகர்:—நான் அநேக புஸ்தகங்களைப் படித்துக்கொண்டு தானிருக்கிறேன். ஆனால் நீ குறிப்பிட்ட தமிழரசைப் படித்ததில்லை.

நாகராஜ்:—அதுதான் நீ இதுவரையில் செய்து வந்த பெருங் குற்றம். இனி யாகிலும் அப்புத்தகத்தைத் தவறாமல் வாசிப்பாயென்று நினைக்கிறேன். தவிரவும் நான் பேசியது அடிக்கடி தமிழரசைப் படித்து அதனால் எனக்கேற்பட்ட தமிழ்ப்பாஷை யபிவிருத்தியினாலேதான் அன்றியும் தமிழன் என்பவரால் எழுதப் பட்டு இம்மாதம் வெளிவந்துள்ள ஓர் வியாசத்தை அப்படியே பாடம் செய்து பேசினேன்.

ராஜசேகர்:—நாகராஜ்! உன் மனப் பிரகாரமே இனிமேல் மாதம் தவறாமல் ஷை புத்தகத்தைப் படிக்கிறேன். தவிரவும் நான் இப்போது சொல்லும் விஷயத்தை மட்டும் மறக்கக்கூடாது. இன்றைய தினம் சதியாலோசனை எப்படியோ அதைப்போல நாளை யிரவு நீ செய்ய வேண்டிய முக்கிய காரியமாகிய ஆநந்த விலாஸிலிருக்கும் ஞானலக்ஷ்மியை வெகு சாமர்த்தியமாய்க்கொலை........ என்றதும் சுவரின் பக்கத்திலிருந்த கழுதை கத்திற்று. அதனால் கொலை என்ற வார்த்தைக்குப் பின் வந்த வார்த்தைகளை வீரண்ணன் அறிந்து கொள்ள முடியாதவனாய்க் கழுதையைத் தன் வாய்க் குள்ளே திட்டிவிட்டு மறுபடியும் கவனித்தான்.

ராஜசேகர்:—எல்லோரும் ஆச்சரியப்படதக்க அம்சம் உன்னுடையதே! ஆதலால் வெகு தைரியமாய் உன் காரியத்தைச் செய்! நாளை யிரவில்தான், நான் உன் திறமையைப் பார்க்கப் போகிறேன்.

நாகராஜ்:—ராஜசேகரா இன்றைய தினம் எப்படியோ அதைப் போலவே நாளை அந்தக் கொலைச்...............'ச்' என்ற

வார்த்தைகளுக்கு மேல் வரக் கூடிய வார்த்தைகளை வீரண்ணனுக் குக் கேட்கும்படி விடக் கூடாதென்ற எண்ணமோ? என்னமோ? மறுபடியும் கழுதை கத்திற்று.

அதைக்கண்ட வீரண்ணன் அடக்க முடியாத கோபத்துடன் கல்லினால் கழுதையை அடித்து விரட்டி விட்டு மறுபடியும் சுவரின் பக்கம் வந்து கவனித்தான்.

ராஜசேகர்:—நாகராஜ் நான் சென்று வருகிறேன் என்று விடைபெற்றுக் கொண்டதை அறிந்தார் நமது வீரண்ணன். பிறகு அவன் மனதில் பலவகையான எண்ணங்கள் உதித்தன. நாளை யிரவு இந்த, பங்களாவில் கொலை செய்யப் போகிறார்களாம் இவர்களுடைய சதிகளை ஒருவரும் அறியமாட்டார்களென்று எவ்வளவு சந்தோஷமாகக் கொலையைப்பற்றிப் பேசினார்கள். நான் கேட்டுக் கொண்டதை அவர்கள் எப்படி அறிவார்கள். 'பாவம்' போலீஸ் சிங்கமாகிய என்னிடம் நீங்கள் அகப்பட்டுக் கொண்டீர் கள். ஆனால் உங்கள் சம்பாஷணையில் நான் கலந்து கொண்டதைப் போல் அந்தப் பாழும் கழுதையும் கலந்து சில வார்த்தைகளை எனக்குக் கேட்க விடாததினால் தான் நீங்களும் இப்போது உங்கள் வீட்டிற்குப் போக நேர்ந்தது. இல்லையேல் இதுசமயமே உங்களைக் கைதி செய்திருப்பேன். போகட்டும் நீங்கள் நாளை மறுநாள் பொங்கல் பண்டிகை கொண்டாட முடியாமல், எனக்குப் பொங்கல் பரிசு வருவது நிச்சயம் என்று முடிவான அபிப்ராயத்துடன் ஸ்டேஷனுக்குப் போய்விட்டான்.

மறுநாள் பகலைக் கழிப்பது ஒரு யுகம்போல் தோன்றியது. அவன் சதா தான் ஏதோ ஒரு பெரிய காரியத்தை அன்றிரவு செய்வதாக சந்தோஷமும், மறுபடியும் ஆழ்ந்த யோசனையும் உடையவனாய்க் காணப்பட்டான். சரியாக மணி 9-30 ஆனதும். தனக்குத் துணையாகச் சில கான்ஸ்டேபிள்களுடன் மணி முத்தா நதிக் கரையிலுள்ள வசந்த விலாஸ் மண்டபத்தை அடைந்து ஓர் மறைவான அறையில் மறைந்து கொண்டான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மண்டபத்தில் சிலர் பேசும் குரலும், விளக்கின் வெளிச்சமும் தோன்றின. அதுசமயம் ஓர் ஊதுகுழல் சப்தம் விழவே நிசப்தம் நிலவியது.

ஒருவர்:—சரி! காரியமாகட்டும்.

மற்றொருவர்:—நண்பா! நான் எத்தனையோ முறை சந்தித்துப் பேசியும் அவள் என்னை அலக்ஷியம் செய்கிறாள். தவிர, பரம ஏழை ஒருவனைக் காதலிக்கிறாள். அவன் தேச ஊழியனாம் சிறைச் சாலையே கதியென்று இருக்கும் அற்ப நாய் எப்படித்தான் இவளை

மலைப்பான். நான் இவளைக் கொலை செய்வதுதான் மேல். அவளும் அதோ! 'நிசப்தம்'

சிறிது நேரத்தில் 'ஐயோ என்னை ஆதரிப்பவர்கள் ஒருவருமில்லையா' ஹா 'கொலை கொலை கொலை'

என்றதும் தன்னுடன் வந்த போலீஸ் வீரருடன் அக்கூட்டத்தை வளைத்துக் கொண்டான் வீரண்ணன். இதைக் கண்ட அனைவரும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவண்ணமே பேசாமடந்தைகள் போலிருந்தார்கள். சுந்திரேச னென்பவன் தன் கையிலுள்ள கத்தியைக் கீழே வைத்துவிட்டு, வீரண்ணன் முன்வந்து தாங்கள் எதற்காக எங்களை வளைத்துக்கொண்டிருக்கிறீர்களென்று வெகு கம்பீரமாகக் கேட்டதும்; வீரண்ணன் மிக்க கோபத்துடன் அடா, துரோகி, நீ ஒரு பெண்ணைக் கொலை செய்யப் போனதற்காக உன்னைக் கைதி செய்கிறேனென்றார். அப்போதுதான் சுந்திரேசனுக்கு வீரண்ணன் வந்த காரியம் தெரிந்தது. சரி, சரி பாவம்! என்ன? சார்! தங்களுக்கு புத்தி பேதகமா என்ன, நாடக ஒத்திகையும், கொலைக் களமும் எப்படியிருக்கு மென்பதே தங்களுக்குத் தெரியாது போனது சிரிப்பிற்கிடமானது. வந்ததும் வந்தீர் பூரா ஒத்திகையும் பார்த்துப் போங்களென்று சொன்னான். இவை யெல்லாம் கேள்விப்பட்ட மற்ற போலீஸ் வீரர்கள் ஒன்றும் தெரிவிக்காமல், தத்தம் வீட்டிற்குப் போய்விட்டார்கள். நமது வீரண்ணனும் அன்றையதினம் முதற்கொண்டு தான் அவர்களைக் கைதி செய்து, பொங்கல் பரிசாகச் சிறையிலடைக்க வேண்டுமென்று தீர்மானித்து; ஓர் நாடக ஒத்திகையில் பிரவேசித்த அவமான மடைந்ததை நினைத்து நினைத்துக் காலமெல்லாம் வருந்தினான்.

விளம்பர விகிதம்

தடவை 1-க்கு ஒரு பக்கத்திற்கு	ரூ. 20.
,, ,, ½ பக்கத்திற்கு	ரூ. 12.

நீண்டகால விளம்பரங்களுக்கும், அட்டை விளம்பரத்திற்கும் மானேஜருக்கு எழுதவும். விளம்பரத் தொகையை முன் பணமாகவே அனுப்ப வேண்டும்.

மானேஜர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

நன்மதி

மாதவனே—என்ற மெட்டு.

பாலகனே—புத்தி—கேள்மகனே—சிறு (பாலகனே)

காலையில் நீவிரை வாயெழுந்திடு—நின்
கால்முகம் கைசுத்த மேபுரிந்திடு—புஸ்த
கந் திறந்திடு—படித்
தே யறிந்திடு—கணக்
குந் தெரிந்திடு—எழுத்
தே திருந்திடு (பாலகனே)

வீரனய் வாழுநம் தாய்மொழிகற்பாய்—புது
விஞ்ஞான மெய்வான சாஸ்திரம் நட்பாய்—பொருள்
ஆதாரமெய்ப்பாய்—தெரி
நூலெலாங்கற்பாய்—கற்ற
நேர்வழிநிற்பாய் (பாலகனே)

தாய்சொல்லை நீமறுக் காதே துணிவாய்—நின்
தந்தைசொன் மந்திரம் என்றுதணிவாய்—குரு
தன்னைப்பணிவாய்—சொல்லில்
உண்மைஅணிவாய்—பிறர்
நன்மை எண்ணுவாய் (பாலகனே)

உன்னுடல், பொன்னென ஓங்கிவளர—நிதம்
ஓயாது நீயுழை தேகமயர—பல
சாலியாய்வர—விளை
யாடுவாய்உர—முட
ஞேடியே நட (பாலகனே)

ஜாதியி னுளில்லை ஏழை யடிமை—நாம்
சகலரும் சமமெனில் ஏதுமிடிமை?—பிரித்
தாளுங்கொடுமை—யாலே
நாடும்அடிமை!—யானும்
நாமும்மடிமை! (பாலகனே)

யாவரும்ஓர் குலம் ஓரினமென்று—நீ
ஆதரி சோதர பாசமே கொண்டு—அது
தான்மிக நன்று—பொய்
ஜாதிஏதென்று—புரி
வாயிதே—தொண்டு (பாலகனே)

தாயின மாதர்கள் சுதந்திரமே—பெறில்
தனிச்சுய ராஜியம் வரும் நிஜமே—இது
தானவஸ்யமே—சரி
யானஜோஸ்யமே—அடை
வோமேஜயமே! (பாலகனே)

(ஸ்ரீசுப்ரமண்யபாரதி கவிதாமண்டலம்)

இனும்! இனும்!! இனும்!!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் எழுதிய

அனுபவ வைத்திய நூல்

பழைய இரண்டாம் பாகம் இனும்

வேண்டுவோர் 4 அணு தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினல் புத்தகம் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

'தமிழரசு' பைண்டு வால்யம்

4-வது மலர்

12 மாத சஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து மிக அழகாக பைண்டு செய்திருக்கிறது. வேண்டுவோர் 12 அணு தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினல் 1 புஸ்தகம் அனுப்பி வைக்கப்படும். வெளி நாடுகளுக்கு மாத்திரம் 1 ரூபாய் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

நகைச் சுவை

வீட்டுக்காரர்:—(பிச்சைக்காரனைப் பார்த்து) கொஞ்சகாலமாகப் பிச்சை யெடுப்பவனுக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனை விதிக்கச் சட்டம் ஏற்பட்டுள்ளது. இனி எங்காவது வேலை செய்து பிழை போ.

பிச்சைக்காரன்:—ஐயா, ரொம்ப நல்லது. நான் 20 வருடமாகப் பிச்சை யெடுக்கிறேன் அப்போ சீக்கிரம் ஒரு போலீசைக் கூப்பிடுங்கோ என்னை அரஸ்ட் செய்வதற்கு. —பரமானந்தம்

'பாதுகா பட்டாபிஷேகம்' என்ற நாடகத்தில் பரதனாக நடித்தவன் இராமனைக் காட்டிலே கண்டு: அண்ணா! தாங்கள் நாட்டிற்குவந்து இவ்வரசாட்சியை யேற்றுக்கொள்ள வேண்டும். தமயனிருக்கத் தம்பி ஆள்வது தருமமாகுமா?

இராமன்:—தம்பி! 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' யென்பார்களே! நீ கேட்டதில்லையா? நான் பதினான்கு வருஷங்களையும் பதினான்கு நாட்களாகக் கழித்து நாடுவந்து சேருகிறேன் நீபோ.

(என்ன சொன்னாலும் இராமன் இணங்காததைக் கண்ட)

பரதன்:—அதெல்லாம் முடியாது. நீர் எப்படியும் வந்துதானாக வேண்டும் என்று இராமனாக நடித்தவன் கையைப் பிடித்திழுத்து, திரைக்குள்ளே சென்றான். —த. உலகநாதன், கரந்தை

சுப்பையர்:—கலர் வாயில் இருக்கிறதா? காட்டுங்கள் பார்க்கலாம்.

ஜவுளி வியாபாரி:—எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. நீங்கள் டாக்டரா யிருந்தால் என்னை வீட்டில் வந்து பாருங்கள். —பஞ்சு

மனைவி:—அடுத்த வீட்டுக்காரர்களுக்குக் கடன் கொடுத்தீர்களே? அதைப்பற்றி ஏதாவது கேட்டீர்களா?

கணவன்:—கேட்காமலென்ன. அதைக் கொண்டுதான் அவர்கள் கிராமபோன் வாங்கினார்கள். நான் பிரதி தினமும் பாட்டுக் கேட்டுக் கொண்டுதா னிருக்கிறேன். —K. B. துரைசாமி

வைணவர்:—ஏன் என் சமயத்தைப்பற்றிக் குறை கூறுகிறீர்?

சைவர்:—உம்முடைய இந்த வரும்படியில்லாத சமயத்திலும் இவ்வளவு அகம் பாவமாய்ப் பேசுவதால்தான்.

—திருச்சி ஜி. சிங்காரவேலு

போலீஸ் இன்ஸ்பெக்டர்:—என்ன டிரைவர் இந்த ஜனக் கூட்டத்தில் இவ்வளவு வேகமாகக் காரை ஓட்டுகிறாயே மெது வாகப் போ.

கார் டிரைவர்:—நான் என்ன சார் பண்றது. காரின் வேகத் தைக் குறைக்கும்படி கம்பெனிக்கு எழுதுங்கோ.

—கு. ச. கணேசன்

நடந்துவரும் தகப்பனும் பிள்ளையும் வெயிலின் கொடுமை தாங்காமல் தங்கள் கோட்டைக் கழற்றி வேலைக்கார சுப்பன்மேல் போட்டுவிட்டு; சுப்பனைப் பார்த்து வேடிக்கையாக;

கனவான்:—உன் மேலிருப்பது ஒரு கழுதை சுமை யிருக்குமா?

சுப்பன்:—அட பாவமே இல்லை. இரண்டு கழுதைச் சுமையை யல்லவோ சுமக்கின்றேன். —எஸ். வி. கே. சபாபதி

நாட்டான்:—உங்கள் நாட்டில் மக்கள் ஹிட்லரைப் பின்பற்று கிறார்களா?

காட்டான்:—ஆஹா! தாராளமாய் எல்லோரும் மீசை ஹிட் லரைப்போல்தான் வைத்திருக்கிறார்கள். —S. S. ரத்தினம், மதுரை

ஆசிரியர்:—பிள்ளைகளே நீங்கள் விரும்பும் பூச்சிகளில் ஒன்று சொல்லுங்கள்.

ஒரு பையன்:—கண்ணும்பூச்சி சார். —பஞ்சாபகேசன்

குரு:—நாம் மானிட சரீரத்துடன் வீடு பேறடைய முயல் வது முயற்கொம்பு போலாகும். தெரிந்ததா?

சிஷ்யன்:—(தன் பக்கமுள்ள சிஷ்யனைப் பார்த்து) என்ன சுவாமிகளே! முயற்கொம்பு எத்தனை?

மருளானந்தசாமி:—முயற் கொம்பு குதிரைக் கொம்புபோ லிருக்கும். போய்ப் பாருங்கோ சுவாமி. —பரமாநந்தம்

கிராமபோன் வாங்கியவர்:—என் சார் உங்ககிட்ட வாங்கின பெட்டி எல்லாம் அடுத்த வீதியில் உள்ள ரிப்பேர் பண்ணும் கடைக்கு எடுத்துப் போகவேண்டி இருக்கே?

கிராமபோன் கடைக்காரன்:—அதைப்பற்றிக் கவலைப் படா திங்கோ சார் அதுவும் நம்ம கடைதான். —K. V. கிரி

சம்மந்தன்:—டேய் வரதா மாசிலாமணி கள் குடிக்கும்போது ஏன் கண்களை மூடிக்கொள்கிறான்?

வரதன்:—கள்ளை இனிமேல் கண்ணாலே பார்ப்பதேயில்லை என்று சத்தியம் செய்திருக்கிறானே தெரியாதா?

—K. B. துரைசாமி

மகன்:—எம்மா நீ பக்ஷணங்களை அடுத்தாத்து அம்பிக்கெல்லாம் தினந்தினம் கொடுக்கிறயே, நேக்கு மாத்திரம் இல்லை இல்லேன்னு சொல்றயே.

தாய்:—'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளருமென்று' உனக்கு உன் வாத்தியார் இன்னும் சொல்லிக் கொடுக்கவில்லையா? —பஞ்சு.

உதவி டைரக்டர்:—என்ன மிஸ்டர் ஆநந்தம் எங்கள் பட முதலாளி யிருக்காரே! பலே பேர் வழி ஒரு பலம் ஆணி வேண்டு மென்றாலும், தானே காரை எடுத்துக்கொண்டு போய் ஆணி வாங்கிக் கொண்டுதான் வருவார் அவ்வளவு சந்தேகப் பேர் வழி.

நடிகன்:—சார் நீங்கள் தெரியாமல் சொல்லுகிறீர்கள். ஒவ்வொரு சினிமா பத்திரிகைகளும், சினிமாக் கலை முன்னேற்றத்தில் பட முதலாளிகள் ஒரு சிறு காரியத்திலும் தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டுமென்று சொல்லுகின்றதால் அதன்படி நடக்கும் உத்தமர் உங்கள் முதலாளி. —பரமாநந்தம்

கருப்பன்:—என்டா உன்னிடம்தான் பணமிருக்கிறதென்று தாராளமாய்ச் செலவு செய்கிறாயா? இனி இப்படிச் செய்யாதே பின்னர் கஷ்டப்படுவாய்.

சுப்பன்:—தெரியாமற் பேசுகிறாயே. பெரியவர்கள் 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்று சொல்லவில்லையா. அதன்படி நடக்கிறேன். —சாத்தூர் A. கந்தசாமி

உபாத்தியாயர்:—ஏண்டா ராதா லண்டன் அதிக தூரமா அல்லது சந்திரன் அதிக தூரமா?

ராதா:—லண்டன் சார்.

உபா:—ஏன்!

ராதா:—நாம் சந்திரனைப் பார்க்க முடிகிறது. ஆனால், லண்டனைப் பார்க்க முடிவதில்லை சார். —K. V. கிரி

பாடசாலை இன்ஸ்பெக்டர்:—(ஒரு பையனைப் பார்த்து) முக்கனிகள் எவை யெவை?

பையன்:—பலாப்பயம், வாயப்பயம், மாம்பயம்.

(எல்லா மாணவர்களும் இதேமாதிரி பதிலளித்தார்கள்)

இன்ஸ்பெக்டர்:—(ஆசிரியரைப் பார்த்து) பையன்களுக்கு யகர ழகர பேதமே தெரியவில்லையே.

ஆசிரியர்:—ஆமாம் சார்! அவர்கள் எந்தப் பயத்தையும் அப்படித்தான் சொல்லிப் பயக்கம். —த. உலகநாதன், கரந்தை

வண்டிக்காரன்:—(வண்டிக்கு நேராக வந்தவனைப் பார்த்து) ஏய்! கண்ணு தெரியலே. ஒதுங்கிப் போய்யா.

நேராக வந்தவன்:—எனக்குக் கண் தெரிகிறதா இல்லையா என்று உனக்குக் கண் தெரியலே. —K. V. கிரி

போலீஸ் சேவகன்:—(ஓடுகின்ற திருடனைப் பார்த்து) அடே பயலே நிற்கிறாயா இல்லையா?

திருடன்:—மறைமுகமாகப் பேசுபவர்களைக் கண்டால் எனக்கு எப்பொழுதுமே பிடிக்கிறதில்லை (என்று சொல்லிக் கொண்டே ஓட வாரம்பித்தான்.) —திருச்சி ஜி. சிங்காரவேலு

தகப்பனார்:—ஏண்டா என் வயிற்றில் பிறந்த பிள்ளை இப்படியும் செய்யலாமா?

மகன்:—உன் வயிற்றிலே எப்போ அப்பா பிறந்தேன். அம்மா வயிற்றிலே யல்லோ பிறந்தேன். —எஸ். வி. கே. சபாபதி

பட்டிக்காட்டான்:—காரம் ஏதாவது காலணாவுக்குக் கொடுங்கோ சாமி.

மிட்டாய் வியாபாரி:—காரா பூந்திதா னிருக்கு தரட்டுமா?

பட்டிக்காட்டான்:—அப்படின்னா அது காராகருணை மாதிரி தொண்டையிலே காருங்களே வேண்டாஞ்சாமி. —பஞ்சு

நீதிபதி:—உனக்கு எவ்வளவு வயதாயிற்று?

குற்றவாளி:—முப்பது.

நீதிபதி:—உன்னை நான் மூன்று வருஷத்திற்குமுன் தண்டித்த போதும் நீ முப்பது வயதுதானே சொன்னாய்?

குற்றவாளி:—ஆமாம். நான் இன்றைக்கு ஒன்றும் நாளைக்கு ஒன்றும் சொல்லுவது வழக்கமல்ல. —த. உலகநாதன், கரந்தை

புதுமாப்பிள்ளை:—என்னை இப்போது இப்படி ஆட்டிவைக்கிறாயே. கலியாணப் பந்தலில் குனிந்த தலைநிமிராது வணக்கமாயிருந்தாயே. உன்னைப்போல் கபடி எவளுமிருக்கமாட்டாள்.

மனைவி:—நீங்கள் சொல்வது பொய். கலியாணப் பந்தலில் நான் உங்களை எப்படி ஆட்டிவைக்கலாமென்று குனிந்த தலை நிமிராது ஆழ்ந்த யோசனையிலல்லவோ யிருந்தேன்.

—K. B. துரைசாமி

வைத்தியர்:—நீர் மேனாட்டு சிகரெட் குடிப்பீரோ? அதுவே வியாதிக்குக் காரணம்.

நோயாளி:—இல்லையே நான் உள்நாட்டு பீடிதான் குடிப்பது.

—S. A. S. அபூபக்கர்

ஆங்கில மாதும் ராட்டினமும்

[R. Z பொன்னுசாமி வடக்கன்குளம்]

ஆங்கில வீரன் மைல்ஸ் ஸ்டான்டிஷ் (Miles Standish) யுத்தத்தில் வெற்றி யடைந்து வாகை மாலை சூடியதைக் கேள்வியுற்ற பிளிமத் (Plymouth) நகரவாசிகளனைவரும் ஆனந்தக் கூத்தாடினார்கள். இஃது இவ்வாறிருக்க, நம் கதாநாயகியான பிரிஸில்லா (Priscilla)வின் மனோ நிலைமையைச் சற்றுக் கவனிப்போம்.

மன வெறுப்பினால் முகம் கறுத்த இம்மங்கை, யுத்த வெறி கொண்ட துர்க்காதேவியின் அம்சமான அத்தளகர்த்தனை மணம் புரியாதிருந்தமைக்காக இறைவனைப் போற்றினாள். எனினும் அவ் வீரன் வீடு திரும்பியதும் மீண்டு மோர் முறை தன்னை வரிக்க வேண்டுவானோ, தனித்துறையும் ஏழைக்கன்னி ஒரு தானப் பொருளோ என்ற திகில் அவளை நடுங்கச் செய்தது.

மாதங்கள் பல கடந்தன. நகரெங்கும் அமைதி நிலவியது. மாந்தர் வீடு கட்டுதல், மீன் பிடித்தல், மான்வேட்டை யாடுதல், முதலிய தத்தம் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். இது நிற்க, மேற் சொல்லிய வீரனோ மேலும் மேலும் புகழ் எய்தினான். அவனுக்கிணையாவார் ஒருவரும் அந்நகரிலேயே இல்லை என்னலாம்.

ஆல்டன் (Alden) என்ற நண்பனொருவன் இழைத்த தீமையி னிமித்தம் அவன் கோபாவேசத்துட னிருந்தான். ஆனாலும் ஆல்டன் மேலுள்ள பச்சாத்தாபமானது ஆற்றின் வெள்ளத்தை எதிர்த்து, அதன் பிரவாகத்தைத் தடுத்து, அதை உவர்ப்புச் சுவைய தாக்கி மேலெழுகின்ற கடற்பெருக்கைப் போன்று, அவன் மூர்க் கத்தின் உக்கிரத்தைத் தணித்தது.

அதே சமயத்தில் ஆல்டன் தனக்கொரு இலைக்குடிலும், கனி வர்க்கத் தோட்டமும், ராக்கார்ன் (Raghorn) என்ற தனது குதிரைக்கு ஓர் லாயமும் அமைத்து அந்நகரின்கண் தனிமையே துணையாக வாழ்வானாயினன். அவன் வாழ்ந்த வீடு, தோட்டம், கிணறு முதலியவைகளின் அடையாளங்களை இன்றும் காணலாம்.

தன் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு ஆல்டன், தான் முன்னரே காதலித்திருந்த பெண்மணி பிரிஸில்லாவின் வீட்டை நோக்கி ஆவலுடன் நடந்து செல்வான். செல்லும்பொழுது அவனுடைய காதல் மிகுதியினால் தனக்கு முன்னால் எதிர்ப்படுகின் றவைகளைத் தன் மனதிலிருக்கும் இன்னுயிர்க் காதலியின் தோற்ற மாகக் கண்டு மகிழ்ச்சியுற்று இடைத்தூரத்தைக் கழித்தான். இந் நிலைமையில் அகத்தின்கண் நிகழ்ந்த ஆசையைப் புறத்து ஒரு கடமையைச் செய்யப் புகுவான் போலும் காட்டியும் காதலை நட்பினுள் ஒளித்தும் சென்றான்.

இல்லத்தைத் திருத்தும் பொழுதும், மற்றும் இதர வேலைகள் செய்யும் பொழுதும், சதாகாலமும் அம்மெல்லியலின் நினைவாகவே இருந்தான். சிற்சில சமயங்களில், ஞாயிறுதோறும் வாசிக்கப்படும் விவிலியத்திலுள்ள சாலமோன் ஞானியின் நீதிமொழிகள் அவன் ஞாபகத்திற்கு வந்தன. அஃது:—'கணவனின் நெஞ்சம் அவளையே சார்ந்திருக்கும். வாழ்நாள் முழுவதும் அவனுக்கு நன்மையே செய்வாள். மகிழ்வுடனே ராட்டினத்தில் நூல்நூற்றுத் தன் வீட்டாருக்கு வேண்டும் உடைகளைத் தானுகவே தயாரிப்பாள்' என்பது. அச்சமயமெல்லாம் பிரிஸில்லாவை நினைத்து ஆனந்திப்பான்.

இலை யுதிர் காலம் ஆரம்பித்தது. மாலை மயங்கும் வேளை. ஆல்டன் அவள் எதிரே உட்கார்ந்துகொண்டு, திறமை வாய்ந்த அவளது விரல்களை உற்று நோக்கிய வண்ணமிருந்தான். அவள் நூற்கும் நூலானது, தன் ஆயுளும் அதிர்ஷ்டமுமென எண்ணினுன். 'உண்மையாகவே கண்ணே நீ பிரிஸில்லா அல்ல. நூற்பதிற் சிறந்த பெர்த்தா (Bertha) பெண்மணியே' என்ருன். அச்சமயம் அவளது இயந்திரத்தின் சக்கரம் முன்னைக் காட்டிலும் அதிவேகமாகச் சுழன்றது. அதன் கதிர் உறுமுவது போலத் தோன்றியது. விரலினிடையே விரைவாகச் சென்றுகொண்டிருந்த நூலானது படாரென அறுந்தது. இத்தகைய காதலியின் குறும்பைக் கவனியாது காதலன் தொடர்ந்து கூறியதாவது:—'சௌதாம்டன் (Southampton) நகர் வீதிகளிலுள்ள நூல் நிலையம் ஒன்றில் பெர்த்தா இராணியின் வரலாற்றைப் படித்துளேன். அம்மாது தன் குதிரைச் சேணத்தின் மீது வைக்கப்பட்டுள்ள ராட்டினத்தைச் சுற்றிக்கொண்டு மலைப் பிரதேசத்தில் கூடப் பிரயாணம் செய்ததாகக் கூறப்பட்டிருந்தது. தற்போது அவள் பெயர் ஒரு பழமொழியாக வழங்குவதை நீயுமறிவாய். அதுபோலவே, குடியானவனது குடிசையில் இனிமையான சங்கீதத்தைப் பரப்பும் ராட்டினம் ஆடும்பொழுது எதிர்காலத் தாய்மார்கள் பிரிஸில்லாவின் நாட்களைப் புகழ்வார்களாக' என்பதாம்.

இம் மொழிகள் அவளுக்குத் தேனினும் இனிய தேவாமிர்தம் போன்றிருந்தது. உடனே எழுந்தாள் அவ்விடத்தைவிட்டு. 'சரி வறிதே பொழுது போக்க வேண்டாம். மாதர்க்குள் அணிகலமாக என்னைத் தாங்கள் எண்ணுவீர்களாயின், தாங்கள் என் ஆடவர்க்குள் ஒரு திலகமாக விளங்கக் கூடாது? அதற்குரிய காலமும் அணித்ததே' என்று விடை யளித்துவிட்டு அருகிலிருந்த மேசையிலிருந்து பால் போன்ற வெண்மை நிறம் வாய்ந்த நூற்கழி ஒன்றை எடுத்துத் தன் தலைவனிடம் கொடுத்தாள். 'பழைய நாகரிகமும் பழக்க வழக்கங்களும் புதியனவாக மாறும் பிற்காலத்தில்

தந்தையர் தங்கள் பிள்ளைகளோடு ஜான் ஆல்டனின் நாட்களைப் பற்றிப் பெருமையாய்ப் பேசிக் கொள்வார்கள்!' என்று மீண்டும் இன்மொழி மிழற்றினள்.

தன் காதலன் முறையற்ற விதத்தில் நூற்கழியைப் பிடித்த போது அவள் தன் விருப்பத்தையும், சாதுர்யத்தையும், கற்புத் தன்மையையும் காட்டக் கூடியதாக, மெல்லென அசைகின்ற இளம்பூங்கொடி போன்று தலைவணங்கி, அசைந்து நின்று சல்லாப வார்த்தைகளைச் சொல்லி அதைத் திருத்தமுறக் காண்பித்தாள். சிலசமயம் இலேசாகத் தன் இன்னுயிர்த் தோழனைத் கண்சாடையி னால் கடிவாள். எதிர்பாராமல் ஏற்படும் சிக்கல்களை (நூல்)ப் பிரிக்க வேண்டி அவள் அவனது கரங்களைத் தொட நேரிடும். இப்படி யன்றி வேறெவ்விதம் தான் அதைச் சரிப்படுத்த முடியும்? அப் பொழுது ஏதோ ஒரு விசேஷித்த இன்ப மின்சார ஓட்டம் (Edectrical thrills) அவனது நரம்பு ஒவ்வொன்றி னுள்ளும் செல்வதாக உணர்வான். உடனே அவன் தேகமுழுவதும் சிலிர்த்து விடும்.

இவ்வமயம் ஒருவன் பெருமூச்செறிந்து கொண்டு, அம்பு போல் அவ்வீட்டினுள் நுழைந்தான். மைல்ஸ் சேனைத் தலைவன் எதிரியின் விஷக்கணையால் கொல்லப் பட்டான், என்ற செய்தி யைத் தெரிவித்துச் சென்றான். இச்செய்தி, கேட்டவர்களை இடியே றுண்ட நாகம் போலாக்கியது. கற்சிலை போன்று நின்றாள் கன்னி பிரிஸில்லா. நண்பனது இருதய கமலத்தை ஊடுருவிச் சென்ற பாணம் தன்னையே குத்தியதாக ஆல்டனுக்குப் புலப்பட்டது. அந்தோ! மைல்ஸ் வீரனின் மேலுள்ள அவன் நட்பானது ஒழிந் தது. இஃது ஒரு புறமிருக்க, அன்பன் ஆல்டன் மெய்மறந்து, அசைவற்று நின்ற பிரிஸில்லாவைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு, தன் சொந்தம் போல, 'இறைவன் இணைத் ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக', என்றுரைசெய்தான்.

பொழுது விடிந்தது. பொற்கோழி கூவிற்று. காகம் கரைந்தது. காலையுமாயிற்று. காவும் கனியுதிர்த்தது. கதிரவனும் கீழ்த்திசையில் உதித்தனன். அன்று அவன் உதித்தது நம், வதுவரர்களுக்கு இன்பம் ஊட்டுவதற்கே. அவன் கிரீடத்தின் ஒளி உலகத்தையே இராஜரீகம் செய்வதாக எத்திசையிலும் பரவியது. பந்துமித்திரர் திரள் திரளாக வந்து கூடினர். பிரிஸில்லாவும் ஆல்டனும் அக் குழாத்துடன் ஆலயத்திற்குச் சென்றனர். புறத்தில் பூஞ்செடிகள் பொலிந்துள்ள சோலையில் பக்ஷிகள் இன்னிசை இசைத்தன. அகத்தினில் மங்கைகள் மங்களம் பாட, வேதச் சடங்கு முன்னும், வதுவைச் சடங்கு பின்னுமாக மணவினை வெகு சிறப்புடன் நடை பெற்றது. அங்கிருந்த பெரியோர் அவர்களை ஆசீர்வதித்தனர்.

அந்தோ! வாசற்படி யண்டையில் ஓர் உருவம் தோன்றியது. யுத்த உடையுடனும் துக்கமுகத்துடனும் தோன்றிய அந்த ஆவியைக் கண்ணுற்றதும் மணமகன் பிரமித்து நின்றான். மணமகள், மிகவாட்டமுற்றுத் தன் முகத்தைத் தன் தலைவனின் பின்புறமாகத் திருப்பும் திறன் என்னே? இது கனவோ அல்லது நினைவோ? அவர்கள் திருமணத்தை நிறுத்தவந்த பேயோ அது?

சற்றுநேரம் அச் சொரூபம் வாய் திறக்கவில்லை. பின்னர் அது அவ்வாலயத்தினுள் மெதுவாக நகர்ந்தது. கொஞ்சப் போதில் அங்குள்ளவர்களனைவரும், மாண்டு மறைந்த மைல்ஸ் சேனாதிபதி தங்கள் முன் நிற்கக்கண்டு பெருந் திகிலும் வியப்புமடைந்தனர். முன்னொருநாள் தங்களுக்கு அறிவிக்கப் பட்டது பொய் வதந்தி என்பது புலனாயிற்று.

அவ்வீரன், ஆல்டனின் கரத்தைப் பற்றிக்கொண்டு, 'ஆருயிர் நண்ப, என்னை மன்னிப்பாயோ? என் மூதாதையருடைய மூர்க்க குணம் என்னிடமும் இருந்ததால் அல்லவா நான் இதுகாறும் உன்னை வெறுத்திருந்தேன்' என்று தன் இருவிழிகளிலும் நீர் ததும்பப் பேசுலுற்றான். 'மறத்தலும் மன்னித்தலும் மானிடர்பால் மாண்புடைத்து. என் நேசத்தோழா, சென்றனவெல்லாம் சீர்தூக்காது, நின்றனவும் வருவனவும் கொண்டு நம் வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொள்வோமாக' என்று உடனே பதில் வந்தது. இதற்கிடையில் ஆங்குக் குழுமியோர் மைல்ஸினிடத்தில் வினா விடுத்தலும் இறுத்தலுமா யிருந்தனர். இதற்கப்பால் அவ்வீரன், பிரிஸில்லாவை அணுகி, அம்மாதை மனமார வாழ்த்தினான். மேலும் 'காலத்தில் கிடையாததைக் கருதினால் கிட்டுமோ?' என்றுரைத்து மறைந்தனன்.

இது நிற்க, ஆல்டனின் அலங்கரிக்கப் பட்ட குதிரை அவ்விடம் கொண்டு வரப்பட்டது. மணமகள் சேணத்தின் மீது சிரமமில்லாது ஏறத் தன் கரத்தை அவள் கமலபாதத்திற்குப் படியாக ஏந்தி நின்றனன் மணமகன். தவிரவும், 'காதற்கிளியே, எல்லாவித அம்சத்திலும் நீ, பெர்த்தா இளவரசியை ஒத்திருக்கின்றனை. ஆயினும் இப்பொழுது ராட்டினம் ஒன்றே உன் கையிலில்லை', எனக் களிப்புடன் மொழிந்தான்.

தலைவனும் தலைவியும் தங்கள் புதிய இல்லம் ஏகி, ஆங்கு இல்லற வாழ்க்கையை இனிதே நடத்தி, 'குறுகுறு நடந்தும் சிறுகை நீட்டியும் இட்டும் தொட்டும் உண்டு' வளரும் சிறிய ஆல்டனையும் சிறிய பிரிஸில்லாவையும் பெற்றெடுத்துத் தங்கள் மனையை மங்கலமுடைய தாக்கினார்கள்.

இது Longfellow எழுதிய செய்யுளைத் தழுவியது.

சொப்பன உலகம்

['குமாரன்']

நான் பிறந்த லக்னமோ என்னமோ எனக்கு யாருடனும் சிநேகஞ் செய்துகொள்ள விருப்பமிருந்ததில்லை. நான் படித்த போதுகூட பள்ளிக்கூடச் சிநேகன் என்று யாருமே எனக்குக் கிடையாது. பள்ளிக்கு நான் தனியேதான் போய் வருவேன். வீட்டிற்கு வந்தாலும் ஒரு தனியறை எனக்கென்று உண்டு, விளையாட்டு என்பது எனக்குத் தெரியவே தெரியாது. மற்றவர்கள் விளையாடுவதைக்கூட நான் பார்க்க விரும்புவதில்லை. ஒரு 'புத்தகப் புழு' என்றுகூட எனக்குச் சிலர் பேர் வைத்ததாகக் கேள்வி. அப்படித்தான் நான் நடந்துகொண்டேன்.

இப்படி நான் இருந்ததற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரியாமலே ஏதோ ஓர் உணர்ச்சி என்னை யாருடனும் சிநேகஞ் செய்துகொள்ளாதபடி தடுத்துக்கொண்டிருந்தது. அந்த உணர்ச்சி என்னை நல்ல வேளையாகப் 'பயந்தாங்கொள்ளி'யாக ஆக்கி விடவில்லை. ஆனால், அது பெண்களின் வெட்கம்போல என்னைப் பிடுங்கித் தின்றுகொண்டிருந்தது.

படிப்பு முடிந்து உத்தியோக சாலையில் நுழைந்தேன். இதற்குக்கூட, சிபார்சுக்கென்று நான் யாரையும்போய்ப் பார்க்கவில்லை. என் தகப்பனார் ஒரு விண்ணப்பம் எழுதிப் போடச்சொன்னார். நான் தபாலில் போட்டு வந்தேன். அவ்வளவுதான். ஒரு வாரத்தில் உத்திரவு வந்துவிட்டது. இதுவும் என் ஜாதக விசேஷந்தான் என்று நினைக்கிறேன். ஆபீஸில்கூட எனக்குத் தனியறைதான். அங்கே ஆபீஸ் பியூன்கூட அடிக்கடி வரமாட்டான்.

நான் உத்தியோகத்திலமர்ந்த மறுவருஷம் எனக்குக் கலியாணப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. என் தாயார், தமக்கை முதலானவர்கள் நான் சாப்பிடும் போதும், வேலையின்றி உட்கார்ந்திருக்கும் போதும், என்னிடம் என் விவாகத்தைப்பற்றிப் பேசலாயினர். ஒவ்வோர் சமயங்களில் என் தமக்கை என்னைக் கேலி செய்தும் வந்தாள்.

ஒரு நாள் ஆபீஸிலிருந்து வந்ததே சட்டைகளைக் கழற்றிப் போடக்கூட நேரமில்லை. அதற்குள் என் தமக்கை என்னண்டை வந்து 'இந்தாடாப்பா! உனக்கு வந்திருக்கிற யோகத்தை என்னென்று சொல்ல, முந்தி வந்த பொண் தாசில்தார் மகளாம்! இப்போ ஒருத்தர் சோண சைலத்தில் டிப்டிகலெக்டராம் அவர் பொண் தர்ரேன்னு சொல்லி அனுப்பிச்சுருக்கார். ஏண்டாப்பா! கோக்கு எது பிடிச்சிருக்கு? என்றாள்.

எனக்குக் கோபம் ஒரு பக்கம். வெட்கம் ஒரு பக்கம். எல்லாம் சேர்ந்ததே 'எனக்கு ஒண்ணுமே பிடிக்கலே' என்று 'கோட்டை' மூலையில் மாட்டிவிட்டு நாற்காலியி லமர்ந்தேன்.

அவள் ஒரு நாற்காலியைப் பிடித்துக்கொண்டே 'அதுக்கு இல்லேடா தம்பி! இதிலேல்லாம் ரொம்ப முழுப்பா யிருக்கணு முண்டா அப்பா! நீ இப்படிக் கூச்சப்பட்டா என்ன காரியண் டாப்பா நடக்கும்? அப்புறம் நாளைக்கு எங்க மேலே குறை ஒண்ணுஞ் சொல்லப்படாது. எந்தப் பொண் உன் மனசுக்குப் பிடிச்சிருக்கோ, அதை இப்பவே சொல்லிவிடு........' என்று இன்னும் என்னென்னவோ சொல்லிக்கொண்டே போனுள்.

எனக்கு அவள் சொல்லியது ஒன்றுமே சரிவர விளங்கவில்லை. 'என்னை இப்போ என்ன பண்ணச் சொல்றே?' என்று கேட்டேன். அதற்கவள் 'ஐயோ! நீ இந்தக் காலத்துப் பிள்ளை அல்லவேயல்ல. ஒவ்வொரு பிள்ளை என்னமா, கருத்தா—சமத்தா என்னென்ன காரியங்கள் செய்யுது! நீ இப்படி ஒண்ணுந் தெரியாமலிருக்கிறுயே! நாலுபேரோடே பேசிப் பழகிவந்தாலல்லவா எல்லாந் தெரியும். இப்படி நீ தொழுவத்திலே கட்டியிருக்கிற பசுமாதிரி ரூமுக்குள் ளவே அடஞ்சு கெடந்தால் ஒனக்கு என்ன தெரியப்போவுது?'

இன்னும் அவள் என்ன சொல்லப் போகிருள் என்று எனக்கு விளங்கவில்லை. உங்களுக்குத்தான் ஏதாவது விளங்குகிறதா?

'இந்தா அக்கா! இப்போ எனக்குக் கொஞ்சம் வேலை யிருக் கிறது. ராத்திரி சாப்பிடற போது பேசிக்கொண்டால் போச்சு'

'அடே என்னடப்பா அவ்வளவு வேலை! கல்யாணத்தை விட அப்படிப் பிரமாதமான வேலை என்னதானிருக்கு? இல்லே ஒரு சமயம் நான் சொல்றது உனக்குப் பிடிக்காட்டா சொல்லிவிடு. நான் இதோ என் ஊருக்குப் போயிடறேன். நீ பொண்டாட்டி யோடே வாழ நேக்கு என்னத்துக்கடா அப்பா அவ்வளவு சிரமம்!........'என்று அப்போதே தன் புக்ககம் போய்விடுபவள் போல் திரும்பினுள்.

'இது ஏதடா வம்பாயிருக்கு?' என்று எண்ணிக் கொண்டு 'அக்கா! அக்கா! கோவிச்சுக்காதே! ஆபீஸில் கொஞ்சம் வேலை கடுமை. இதோ பார்! சில பேப்பர்களை யெல்லாம்கூட வீட்டுக்கு எடுத்து வந்திருக்கிறேன்' என்று காட்டவே அவள் கோபம் கொஞ்சந் தணிந்தது. மீண்டும் திரும்பிவந்து 'நீ மகாராஜனு அதெல்லாம் எழுது. வேண்டாமுன்னு சொல்லலே. ஆனுல், இது உன் கலியாண சமாச்சாரம் பாரு. இப்போ நீ 'அசட்டுப் பிசட்டு'ன்னு இருந்துட்டா அப்புறம் நாளைக்குக் கஷ்டப்படறவன் நீன்னு! அதற்காகத்தான் சொல்ல வந்தேன்........' என்று மீண்டும்

என்னவோ சொல்லிக்கொண்டு போகவாரம்பித்தாள். நான் 'அட விதியே' என்று எல்லாவற்றிற்கும் தலையசைத்துக் கொண்டிருந்தேன். நல்ல காலமாக என் தாயார் அங்கே வந்தாள். அவள் நான் என்ன செய்யவேண்டும் என்பதை ஒருவாறு தெரியும்படி செய்தாள்.

ஸ்ரீ சைலத்தில் தாஸில்தார் வீடு. சோணசைலத்தில் டிப்டி கலெக்டர் வீடு. இரண்டு இடமும் எங்கள் ஊரிலிருந்து கிட்டதட்ட ஒரே தூரந்தான். ஆரம்பத்தில் எதிர் ஜாமின் தொகை ஒன்றுக்கொன்று சிறிது முரண்பட்டிருந்தாலும் இப்போது எல்லாம் ஒரே லிமிட்டுக்கு வந்துவிட்டது. இருவரும் மற்ற எல்லா வகைகளிலும் உத்தியோகந் தவிர ஏற்றத் தாழ்வில்லாதவர்களாயிருக்கின்றனர். ஊர்ப்பேரில்கூட வேற்றுமையில்லை. இந்த நிலையில் எதைக் கொள்ளுவது, என்று என் பெற்றோர்களுக்கு விளங்காததால் பொறுப்பு என் தலையில் விழுந்தது.

மறுநாள் காலையில் நான் ரயிலுக்குப் புறப்பட வேண்டும். ஸ்ரீ சைலத்திற்கோ, சோணசைலத்திற்கோ நான் டிக்கட்டு வாங்க வேண்டும். அங்கே போய்ப் பெண்களை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். இருவரில் யார் என் மனதிற்குப் பிடித்திருக்கிறதோ அதை நான் என் பெற்றோரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு மேற்பட்ட ஏற்பாடுகளெல்லாம் அவர்களைச் சேர்ந்தது.

அட கடவுளே! இது என்னால் எப்படி முடியும்? ஒரு புது வீட்டிற்குள் முன்பின் பழக்கமில்லாத விடத்தில் நான் எப்படி நுழைவேன்! அதுவும் ஆபீசர் வீடுகள்! அந்த ஆபீசருக்குத்தான் என்னமாயிருக்கும்? அவர் வீட்டுப் பெண்களுக்குத்தான் எப்படியிருக்கும்? இது எல்லாவற்றையும்விட அந்தப் பெண்களையே நான் நேரில் சந்திக்க வேண்டுமென்றால் என்ன வெட்கக்கேடு? அவர்கள் தான் என்னை எப்படிப் பார்ப்பார்கள்? நான்தான் அவர்களை எப்படிப் பார்ப்பது? அட கஷ்டமே! இந்தத் துன்பத்திற்குக் கலியாணமே வேண்டாம் போலிருந்தது! ஆனால், அந்தப் பேச்சை யார் காதில் வாங்கிக் கொள்ளப் போகிறார்கள்?

வேறு வழியில்லை. நான் ஒப்புக் கொண்டேன். லீவு எழுதித் தகப்பனரிடம் கொடுத்துவிட்டுப் பிரயாணத்திற்கு வேண்டிய துணி மணிகளை யெடுத்து 'சூட்கேஸில்' ஒழுங்காக அடுக்கிப் பூட்டினேன், மணி 10 ஆயிற்று. நான் படுக்கைக்குப் போனபோது, என் தமக்கை வந்தாள். என்னருகில் உட்கார்ந்துகொண்டு நான் எப்படியெப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும், பெண்ணைச் சந்திக்கும் போது அவளிடம் என்னென்ன குணங்களிருக்கின்றனவென்று பார்க்க வேண்டுமென்றும் இன்னும் என்னவெல்லாமோ சொல்லிக்

கொண்டிருந்தாள். எனக்கு வெகு நேரம்வரை தூக்கம் வரவில்லை. என்னிடம் ஒப்படைக்கப்பட்ட வேலை எப்படி முடியுமோ என்ற கவலை என்னை வதைத்தது. ஆனால், நடுநிசிக்குப் பிறகு அவள் என்ன சொல்லிக் கொண்டிருந்தாள் என்று எனக்குத் தெரியாது. நான் தூங்கிப் போய்விட்டேன்.

மணி 5 இருக்கலாம். என் தாயார் என்னை எழுப்பினாள். வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தேன். என் தகப்பனார் அதற்குள் எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு காலைக் காப்பிக்காகக் காத்துக் கொண்டிருந்தார். நானும் உடனே பல் துலக்கிவிட்டுச் சமையலறைக்குச் சென்றேன்.

அதிகம் ஏன்? என் தகப்பனார் சொல்லியபடி நான் ஸ்ரீசைலம் போகும் 7 மணி வண்டியில் ஏறிவிட்டேன். பக்கத்தில் என் 'சூட் கேஸை' வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். வழியெல்லாம் என் நினைவே எனக்கில்லை.

(தொடரும்)

ராமன்:—ஐயா தாங்கள் கொடுத்த மருந்து எனக்கு மிகவும் உபயோகமா யிருந்தது.

வைத்தியர்:—அப்படியா! சந்தோஷம்!

ராமன்:—நேற்றைய தினம் என் மாமா மூன்று வேளை ஒரு பாட்டில் மருந்து சாப்பிட்டார் இன்று அவருடைய சொத்துக் களுக்கு நான்தான் வாரசு!

—பஞ்சு.

குரு:—அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்த பொருள் எது?

சீடன்:—மூட்டைப் பூச்சி சுவாமி.

—பஞ்சாபகேசன்

மூடன்:—அவன் தெய்வா தீனமாய் உயிர் தப்பினான் என்றானே தெய்வாதீனம் எந்த ஆதீனத்தைச் சேர்ந்தது?

மட்டி:—தெய்வாதீனம் என்பது, தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், சூரியனார் கோவில் ஆதீனம் இவற்றைச் சேர்ந்த தான்றோன்றி ஆதீனம்.

* * *

நடேசன்:—என்ன சார் கால் வீக்கம் எப்படி யிருக்கு? வலி அதிகமா யிருக்குதா?

ஆநந்தன்:—இப்போ பரவாயில்லை. விரலாலே அமுக்கிப் பார்த்தால்கூட வலி யில்லையே.

நடேசன்:—அப்போ வேறு ஏதாலாவது அமுக்கினால் வலி யிருக்குமோ? என்னமோ? ஆகையினாலே கையினாலே அமுக்கிப் பாருங்கோ?

—பரமாநந்தம்

கூடா நட்பால் நாடுங் கேடு

[தண்டலம் கிருஷ்ணபுரம் G. கண்ணுசாமி கிராமணி]

ஓர் கனவான் தன் இல்லாளான குணவதியுடனும், தன் புத்திரர்களான கஜேந்திரன் ஆறுமுகம் இவ்விருவருடனும் இல்லறத்தை நல்லறமாக நடத்தி இனிதே கழித்து, பொது ஜனங்களுடன் ஒன்று கூடி ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார். அவருடைய இரண்டு பிள்ளைகளுக்கும் விவாகம் நடந்திருந்தது.

கஜேந்திரனுடைய மனைவியும் அவனுடைய தம்பி ஆறுமுகத்தின் மனைவியும் கற்பிற் சிறந்தும் தூயமன நிலைமையில் ஆழ்ந்தும் விளங்கினர். குணவதி தன் இரு மருமக்களையும் அன்புடன் நேசித்து வந்தாள்.

கனவான் உடம்பு அசௌக்கிய முற்று இறந்து போகவே அவருடைய குடும்பத்தில் ஒளி குன்றியது. கனவான் இறந்த மறு மாதத்தில் ஆறுமுகம் தன் தந்தையின் சொத்துக்களை இருபாகமாக உடனே பங்கிட வேணுமென்று தன் அண்ணனைக் கேட்டான். பாகம் வேண்டுமென்று கேட்ட ஆறுமுகத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஆஸ்தி கிடைத்தது. துஷ்ட சிநேகிதர்கள் வெல்லத்தில் எறும்புகள் வந்து சூழ்ந்து கொள்வதுபோல் ஆறுமுகத்தினிடம் வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

துஷ்ட சிநேகிதர்களை வணங்குவதும் அவர்களை அழைத்துக் கொண்டு ஓட்டலுக்குப் போவதும், தினம் சினிமா பார்ப்பதும், சூது ஆடுவதும், மதுபானங்களைக் குடிப்பதும், வேசியர் நட்புக் கொள்வதும், கற்புடைய மங்கையர்கள்மேல் காதல் கொள்வதும், இரவில் பதினேருமணிக்கு வீட்டுக்கு வருவதுமாக ஆறுமுகம் தன் வாழ்நாளை வீணாகக் கழித்து வந்தான்.

நாட்கள் பறந்து கொண்டே யிருக்க ஆறுமுகத்தின் ஆஸ்தி குறைந்து கொண்டே வந்தது. பேராசை, அகங்காரம், பொறாமை என்னும் கெட்ட குணங்கள் அவனுடைய இருதயத்தில் குடி கொண்டன; அவனுடைய அண்ணியைக் கெடுக்க அவன் ஆவல் கொண்டான். அவன் தன் அண்ணனிடத்தில் அடிக்கடி சண்டை போடுவான்.

துர்ஆசை என்னும் பாசவலையில் விழுந்து தலை கால் தெரியாத ஆறுமுகம் தன் நண்பர்களின் ஏவலால் தன் அண்ணனைக் கொலை செய்யும்படி கட்டளை யிட்டான்.

'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்னும் பழமொழி போல் கஜேந்திரன் ஆறுமுகத்தின் நண்பர்களால் அடிக்கப்பட்டு காவிரி ஆற்றில் எறியப்பட்டான். காவிரி யாற்றில் வெள்ளம் நிறைய

ஓடிக் கொண்டிருந்தமையால் கஜேந்திரனை வெகு வேகமாகத் தூக்கித் தூக்கி அமிழ்த்தியது வெள்ளம்.

அறத்தை விட்டு மறத்தைக் கைப்பிடித்த மகா படுபாவியான ஈவு, இரக்கமில்லாத சகோதரத் துரோகியான ஆறுமுகம் தன் அண்ணன் காவிரி ஆற்றில் இறந்து விட்டான் என்ற செய்தியைத் தன் நண்பர்களின் மூலமாக அறிந்த பிறகு, உடனே அவன் ஊரார் மெச்சுவதற்கு அதிக துக்கத்துடன் தன் அண்ணன் இறந்ததற்குக் காரியம் செய்தான்.

கஜேந்திரனுடைய சொத்து சுதந்திரங்களெல்லாம் ஆறுமுகத்திற்கு வந்தன; வேசியர் வீட்டில் உண்டு உறங்குவதே அவனுடைய முதல் வேலை; துஷ்ட சகாக்களுடன் சேர்ந்து ஊர் ஊராய்ச் சுற்றி வருவது இரண்டாவது வேலை அவனுக்கு.

கஜேந்திரனுடைய தாயாரும் அவனுடைய மனைவி கமலாம்பாளும் துக்க சாகரத்தில் மூழ்கினார்கள். கணவனை யிழந்த கமலாம்பாள் கதி கலங்கித் தனக்கு நேரும் இன்னல்களைக் குறித்துக் கடவுளைத் தியானித்து வந்தாள்.

ஓர் இரவு, மணி பன்னிரண்டிருக்கும் ஆறுமுகத்தின் மனைவி நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

அறையின் கதவு தாளிடப்பட்டிருந்தது! எப்படி உள்ளே போவது?' என்று யோசித்தான். ஓர் யோசனை அவனுடைய மூளையில் உதித்தது. 'அண்ணி! அண்ணி! நமது மீனாவிற்குத் தேள் கொட்டி விட்டதே! சீக்கிரம் வாயேன்!' என்று சிறு குரலில் கூவினான் ஆறுமுகம்.

கமலத்தால் கதவு திறக்கப்பட்டது. அதமக் காதலில் ஈடுபட்ட ஆறுமுகம் உள்ளே சென்று தன் அண்ணியைத் தன் இச்சைக்குச் சம்மதிக்கும்படி மன்றாடிக் கேட்டான்; கமலாம்பாளின் கால்களின் எதிரே குப்புற விழுந்து கெஞ்சினான். ஒன்றும் பலிக்கவில்லை.

'கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே' மைத்துனரே வேண்டாம் 'தாய்க்குச் சமமாகிய என்னை நீர் கெடுக்க முயன்றால் பின்னால்வரும் கேடுகளை நீரே யனுபவிப்பீர், என்று விம்மி விம்மி அழுதுகொண்டே சொன்னாள் கமலாம்பாள்.

'கமலாம்பா, என் ஆஸ்தி முழுமையும் நாளைக்கே உன் பெயருக்கு எழுதி நான் ரிஜிஸ்டர் (Register) செய்கிறேன்; இனிமேல் என் மனைவியைச் சேர்க்க மாட்டேன்; நீயும் நானும் ஒன்றுதான்; நான் உன் பேரில் கொண்டிருக்கும் காதல் வெள்ளத்தில் நீர் மூழ்கலாகாதா!' என்று ஆறுமுகம் கெஞ்சிக் கேட்டான்.

கற்பிற் சிறந்த கமலாம்பாளின் உள்ளம் கொதித்தது. கோபம் மூண்டது. காம வெள்ளத்தைக் கோபமுள்ள புயல் காற்று வீசி மோதியது. 'அடே காம இச்சையில் மயங்கி யிருக்கிற கசடனே பணத்தைக் கொடுத்துக் கற்பைக் கெடுக்கும் பாதகா! 'உன்னுடைய சொத்துக்கள் மாயமாய் மறையக் கூடியவை, ஆனால் என்னுடைய கற்போ என்றும் நிலைத்திருக்கும் பேசாமல் போய் உன் மனைவியுடன் கூடி வாழ்' என்று கமலாம்பாள் ஆறுமுகத்திற்குக் கூறினாள்.

ஆறுமுகம் திடீரென்று கமலாம்பாளுடைய வாயைக் கைக் குட்டையால் அடைக்கும்போது ஓர் பாம்பு அவனுடைய பாத விரலொன்றைக் கடித்து ஒடி மறைந்தது.

ஓவென்றலறி நொப்பும் நுரையும் தள்ளக் கீழே வீழ்ந்தான் ஆறுமுகம். அச்சமயத்தில் அக்கூக்குரலைக் கேட்ட ஆறுமுகத்தின் மனைவி மீனம்பாள் விழித்தெழுந்து விளக்கேற்றிக்கொண்டு தன் கணவன் வீழ்ந்திருக்கிற அறைக்கு வந்தாள்.

தலைவிரி கோலத்துடனும், புடவையைச் சரிவரக் கட்டிக் கொண்டும் கமலாம்பாள் நிற்பதைக் கண்ட மீனம்பாள், கமலாம் பாள் மேல் கெட்ட அபிப்பிராயம் கொண்டாள். வேறு அறையில் தூங்கிக்கொண் டிருந்த தன் மாமியாரை அழைத்துக் கொண்டுவந்து உடனே புருஷனைத் தூக்கினாள் மீனம்பாள். ஆறுமுகத்தின் காமப் பித்தம் விஷப் பித்தமாக மாறியது.

கமலாம்பாள்தான் தன் புருஷனைக் கெடுத்திருப்பாளென்று சந்தேகங் கொண்டு கமலாம்பாளைத் தீரவிசாரித்தாள் மீனம்பாள். குணவதியும் கமலாம்பாளை விசாரித்தாள்.

மீனம்பாளைத் தேள் கொட்டிவிட்டதற்குத் தன்னை ஆறுமுகம் கூப்பிட்டதும், உடனே தான் கதவைத் திறந்ததும் தன்னைக் கெடுக்க முயன்றதும், தான் சம்மதிக்காமையால் ஆறுமுகம் தன் கைக்குட்டையால் (Handkerchief) தன் வாயை அடைக்கும் போது, அவர் திடீரென்று கூக்குரலிட்டுக் கீழே வீழ்ந்ததையும் கமலாம்பாள் தன் மாமியாருக்கும் மீனம்பாளுக்கும் கூறினாள்.

ஆதித்தன் உதிக்கு முன், வைத்தியன் உதவியால் ஆறுமுகம் விஷத்தினின்றும் குணமானான். கமலாம்பாள்தான் தன்னைக் கூப்பிட்டதாகத் தன் தாயாருக்கும் தன் மனைவிக்கும் கூறினான் ஆறுமுகம். அன்று முதல் கமலாம்பாள்மீது ஆறுமுகம் கோபங் கொண்டான். கணவனை யிழந்த கமலாம்பாள் சொத்து சுதந்திரங் களை இழந்து கஷ்ட ஸ்திதிக்குள்ளானாள். கமலாம்பாள் தன் உயிருக்கும் கற்புக்கும் அழிவு வருமென்று நினைக்கத் தன் மாமி

யாரைக் கேட்டுக்கொண்டு தாய் வீடுபோய்ச் சேர்ந்தாள். மாமியார் வீட்டில் நடந்த செய்திகளைத் தன் தந்தைக்குக் கூறினள். அவளுடைய தந்தை அதிக விசனமுற்றார்.

கமலாம்பாள் வந்த மறுநாளில் அவளுடைய தகப்பனருடைய சொத்துக்களெல்லாம் கடனால் ஜப்தி செய்து கடன்காரனால் ஏலம் போடப்பட்டது.

வீடு வாசல்களைத் துறந்த, வறுமையில் வாடின, கமலாம்பாளுடைய தகப்பனரும், கமலாம்பாளும் கப்பலேறி இரங்கூனை அடைந்தார்கள். வாடகை வீடொன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள். கமலாம்பாளுடைய தந்தை ஒரு ஜவுளிக் கடையில் மாதம் இருபது ரூபாய் சம்பளத்தில் அமர்ந்து கொண்டார்.

காவிரியாற்றில் எறியப்பட்ட கஜேந்திரன் நீஞ்சலின் (Swimming) உதவியால் கரை ஏறிச் சந்தன மரங்கள் நிறைந்த அடவியை அடைந்தான். சந்தன மரங்களை வெட்டுவதற்காக கஜேந்திரன் வந்திருப்பான் என்று அவன்மீது சந்தேகங்கொண்ட காட்டிலாக்கா அதிகாரி அவனைத் திருடன் என்று பிடித்துக் கொண்டார். கஜேந்திரன் நடந்த வரலாற்றைக் காட்டிலாக்கா அதிகாரியிடம் கூறினன். ஆறு மாதங்கள்வரை தன்னிடத்தில் ஓர் சேவகனக கஜேந்திரன் இருக்க வேண்டுமென்று அதிகாரி நியமித்துக் கொண்டார்.

ஆறு மாதங்கள் கழிந்த பிறகு கஜேந்திரன் காட்டிலாக்கா அதிகாரியிடமிருந்து உத்திரவு பெற்றுத் தன் சொந்த ஊரை அடைந்தான். அப்போது மணி ஏழு இருக்கும். கருக்கல் இருட்டு. கஜேந்திரன் ஒரு பெரியவரிடம் வந்து, 'கஜேந்திரன் எங்கே இருக்கிறான்? என்று கேட்டான். அவன் இறந்து ஆறுமாதங்களுக்கு மேலிருக்கும்! அவனுடைய மனைவி தாய்வீட்டுக்குப் போய் விட்டாள்!' என்று பதிலுரைத்தார் பெரியவர்.

அவ்வூரை விட்டுவிட்டு தன் மாமியார் வீட்டுக்குத் தன் மனைவியைக் காண ஆவலுடன் வந்தான் கஜேந்திரன். மாமனரும், மனைவி கமலாம்பாளும் ஆஸ்தியை விடுத்து இரங்கூனுக்குப் போய்விட்டதாக அவ்வூரி லிருப்பவர்களால் அறிந்தவுடனே இரங்கூனுக்குப் பிரயாணமானன். ஒரு பாவத்தையும் அறியாத கஜேந்திரனுக்குத் துன்பத்திற்குமேல் துன்பம் வந்துகொண்டேயிருந்தது.

காமப் பேய் பிடித்த அறிவில்லாத ஆறுமுகம், இரண்டாவது கலியாணம் செய்துகொள்ள விருப்பங்கொண்டு தன் மனைவியின் தங்கையை மணக்க வேண்டுமென்று, தன் மனைவியிடம் விடை பெற்றுக்கொண்டு, தன் மாமியார் வீட்டுக்குப் போவதற்கு ரயில்வே

ஸ்டேஷனன்டை வந்தான். அவன் டிக்கட் (Ticket) வாங்கிக் கொண்டு ரயில் ஏறுவதற்கு அவசரமாக ஓடி வரும்போது வாழைப் பழத் தோலை மிதித்தான். மிதித்தவுடனே, கீழே குப்புற விழுந்த தால் முன்பல் இரண்டும் உடைந்து போயிற்று; இரத்தம் வாயி லிருந்து பீறிட்டது. உடனே எழுந்து ரயிலில் ஏறிஉட்கார்ந்து கொண்டான். ரயில் புறப்பட்டு அவன் இறங்கும் ஸ்டேஷனண்டை வந்து நின்றது. ரயிலிலிருந்து இறங்கி இருட்டில் ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து வந்தான். வழி காட்டியாக யிருந்த கைவிளக்கும் தூங்கிவிட்டது. வழி நடக்கையில் திடீரென்று விசனமுற்றான். டிரங்கு பெட்டியில் ஐந்து ஆயிரம் ரூபாயுள்ள நோட்டுக்களை யும், நகைகளையும் ரயிலில் விட்டு விட்டதைப்பற்றி அதிகத் துக்கமடைந்தான். அவன் சோர்ந்து வழி நடக்கையில் மழை பல மாகப் பொழிந்தது. மழையில் அதிகமாக நனைந்தான். குடையும், பாதரக்ஷையும் டிக்கட் வாங்கின இடத்தில் வைத்து விட்டதைக் குறித்து விசனமுற்று வழிநடந்தான்.

ஆறுமுகம் தன் மாமியார் வீட்டண்டை இரவு ஒரு மணிக்கு வந்து தெருக் கதவைக் கையினால் தட்டினான். ஆறுமுகத்தின் மாமியார் வீட்டைச் சில திருடர்கள் அவன் வந்த முன் இரவில் கன்னம் வைத்து நகைகளைத் திருடி யிருந்தார்கள்.

ஆறுமுகம் கதவைத் தட்டவே உள்ளே தூங்கிக்கொண் டிருந்த மாமியார் விழித்தெழுந்து திருடன், திருடன் என்று கூக்குரலிடவே கிராம ஜனங்கள் ஓடிவந்து ஆறுமுகத்தை இறுகப் பிடித்து நையப் புடைத்தார்கள். 'நான் திருடனல்ல, நான் திருட னல்ல' என்று ஆறுமுகம் கூவினான். அவனுடைய மாமி மாமனார் கதவைத் திறந்து வெளியே வந்து ஆறுமுகத்தைப் பார்த்தபோது அதிகத் துக்கமுற்று அவனை அவர்கள் உள்ளே அழைத்துக் கொண்டுபோய்ச் சமாதானப் படுத்தினார்கள். இரவு இரண்டு மணிக் குப் பாலில்லாத காபியைச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கை யறைக்குச் சென்றான். படுக்கையில் படுத்தான். உறக்கம் வரவில்லை. மூட்டுப் பூச்சிகள் (Bugs) அவனைக் கடித்துக்கொண்டே யிருந்தன. தான் இரண்டாவது கலியாணம் செய்து கொள்வதற்காக வந்த பலனைப் பற்றி யோசித்து அதிக விசனமடைந்தான். அன்றிரவு அவன் தூங்கவே யில்லை.

ஞாயிறு உதித்தது. ஞாயிற்றுக்கிழமை பிறந்தது. ஆறுமுகம் தான் பெண்ணுக்கு வந்ததாக ஒருவருக்கும் சொல்லாமல் சென்னைக்குப் போவதாக மாமி, மாமனாரிடம் விடை பெற்றுக் கொண்டு தன் வீட்டுக்கு வந்தான்.

207673

ஒரு நாள் ஆறுமுகம் நான்கு நண்பர்களைக் கூட்டிக்கொண்டு சொந்த மோட்டாரில் ஏறிக்கொண்டு கிண்டி ரேசுக்காக (Guindy-

race) சென்னையை நோக்கியவண்ணம் வந்துகொண் டிருந்தான். பத்தாயிரம் ரூபாயுள்ள நோட்டுக்களைக் குதிரைப் பந்தயத்திற் காகத்தான் எடுத்துக்கொண்டு வந்திருப்பதாகத் தன் நண்பர் களிடம் கூறினன்.

கார் வெகு வேகமாக வந்து கொண்டிருந்தது. திடீரென்று கார் நின்றுவிட்டது. எல்லோரும் இறங்கினர்கள். பெட்ரோல் (Petrol) இல்லாததால் கார் நின்றுவிட்டது என்பதை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். கார் நின்றுவிட்ட யிடத்திற்கும் சென் னைக்கும் சுமார் இருபது மைல் தூரமிருக்கும். பகல் ஒரு மணி வேளை ஆறுமுகம் தன் இரு நண்பர்களிடத்தில் சாப்பாடு வாங்கி வரும்படி பணம் கொடுத்துச் சமீபத்திலுள்ள ஓர் ஊருக்கு அனுப் பினன்.

சாப்பாடு வாங்கி வரப் போன இருவரும் ஆறுமுகத்தையும் அவனுடன் இருக்கிற இரண்டு பேர்களையும் விஷமிட்டுக் கொல்ல வேணுமென்று ஓர் சதியாலோசனை செய்துகொண்டே ஓர் ஊரை அடைந்தார்கள். அவ்விருவரும் சாப்பாடும் அதற்கு வேண்டிய பதார்த்த வகைகளும் வாங்கிக் கொண்டு அதில் பாஷாணத்தைக் கலந்து எடுத்துக்கொண்டு திரும்பி வழியில் நடந்துகொண்டே வந்தார்கள்.

பெட்ரோல் வாங்குவதற்கு ஆறுமுகம் தன்னிடத்திலிருக்கிற இரண்டு பேர்களிடத்தில் பணம் கொடுத்தனுப்பினன். பெட்ரோல் வாங்குவதற்குப் போன இருவரும் சாப்பாடு கொண்டு வருகிற இரண்டு பேர்களையும் வழி மடக்கி அடித்துக் கொன்றுவிட்டு, சாப் பாட்டைத் தூக்கிக் கொண்டு ஆறுமுகம் இருக்கிற இடத்தை நோக்கி வழி நடந்தார்கள். ஆறுமுகத்தையும் கொலை செய்துவிட்டு அவன் வைத்திருக்கிற பணத்தைச் சரி பாகமாகப் பங்கிட்டுக் கொள்ள வேணுமென்று இருவரும் பேசிக்கொண்டே வந்தார்கள். இருவரும் சாப்பாட்டைக் கொண்டுவந்து ஆறுமுகம் உட்கார்ந் திருந்த இடத்தில் வைத்தார்கள்.

'நீங்கள் ஏன் பெட்ரோல் வாங்காமல் சாப்பாடு மூட்டையைத் தூக்கிக் கொண்டு வந்தீர்கள்? சாப்பாடு வாங்கப் போனவர்கள் எங்கே! என்று ஆறுமுகம் அவ்விருவரையும் கேட்டான்.

பதிலொன்றும் கூருமல் இரண்டு நண்பர்களும் திடீரென்று ஆறுமுகம் மேல் பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டார்கள். கிண்டிப் பந்தயம் மரணப் பந்தயமாக மாறிவிட்டது.

விஷம் கலந்த சாப்பாட்டைச் சாப்பிட இருவரும் உட்கார்ந் தார்கள். சாப்பாட்டில் விஷம் கலந்திருப்பது இவ்விருவருக்கும் தெரியாது. இருவரும் திருப்தியாக உண்டார்கள். போஜனம் முடிந்த பிறகு இருவரும் பணத்தைச் சரி பாகமாகப் பங்கிட்டுக்

கொண்டார்கள். இருவருக்கும் மயக்கம் தலைக்கேறியது. பாழும் பணத்தை இழந்து இருவரும் பரகதி யடைந்தனர்! 'கெடுவான் கெடு நினைப்பான்' என்ற நீதி மொழிக்குள்ளானுர்கள்.

ஆறுமுகமும் அவனுடைய நண்பர் நால்வரும் உயிர் நீத்திருப்பதைப் போலீசார் விலாசம் தெரிந்து மீனும்பாளுக்குத் தந்தி கொடுத்தார்கள். தத்தம் உறவினர்களால் ஐந்து பேர்களுடைய தகனக் கிரிகைகளும் நடந்தேறின.

இரங்கூனுக்குச் சென்ற கஜேந்திரன் தன் மாமனுரையும் மனைவியையும் கண்டான். அவனைக் கண்டவுடனே ஆநந்தங் கொண்டார்கள். தனக்கு நேர்ந்த கஷ்டங்களைக் கூறினுன். அவர்களும் அவர்களுக்கு நேர்ந்த துன்பங்களை எடுத்தோதினர். கஜேந்திரன் வேறு தாலி ஒன்றைத் தன் மனைவிக்குக் கட்டினுன்! இரங்கூனை மூவரும் விட்டு, ஆறுமுகம் இல்லத்திற்கு வந்தார்கள்.

ஆறுமுகம் அனியாயமாக இறந்ததைப்பற்றி மூன்று பேர்களும் விசனமுற்றனர். கஜேந்திரன் உயிரோடிருப்பதைப் பார்த்த குணவதி மனமகிழ்ச்சி யடைந்தாள். ஊரில் உள்ள ஜனங்கள் கஜேந்திரனை அன்புடன் போற்றினுர்கள். சர்வ அதிகாரமும், சொத்துக்களும் கஜேந்திரனுக்குக் கிடைத்தன. கமலாம்பாள் தனக்கு நேர்ந்த பிராண கஷ்டத்தையும் விவரமாக, தன் மாமிக்குக் கூறினுள். அமங்கலிய ஸ்திரீயான ஆறுமுகத்தின் மனைவியும், குணவதியும், கமலாம்பாளும் கஷ்டங்களை வென்ற கஜேந்திரனும் ஒற்றுமையுடன் இனிதே வாழ்ந்து வந்தனர்.

கைம்மையை நீக்குவீர்

பணமே பெரிதெனப் பலபே ரெண்ணியே
குணமுடைச் சிறுமியைக் கிழவர்க்குக் கொடுத்துப்
பொருத்த மிலாது மணஞ்செயும் பெற்ருேர்
வருந்திடு மகள்தன் வாழ்வு காண்பரோ?
மணமகன் பிறகு பிணமக ஞயின்
அந்தோ! அந்தோ! அந்நாள் தொட்டே
உலக சுகத்தை இழந்தவ ளாகிப்
பலபல துன்பமுங் கொடுமையு மேற்றுக்
கைம்மக ளாகிக் காலங் கழிக்கையில்
பைம்பெண் ணுகிப் பரதவித் திங்கே
தற்கொலை புரிவதை யறிந்தும்
அற்பச் செயலதை யகற்ரு திருப்பீரோ.

—புதுவை - டி. ஏ. சாமி

மனிதப் பிறவியின் மாண்பு

ஸ்ரீ. ஆர். எம். எஸ். எம். கதிரேசன் இலங்கையில் ரேடியோவில் நிகழ்த்திய சொற்பொழிவின் பெரும் பகுதி வருமாறு :

வாழ்க்கையின் இலட்சியத்துக்கு உரிமையானவர் எவர்? அவர் மனிதர் என்று சொல்ல வேண்டுவதில்லை. பெறுதற்கரிய மனித உடல் பெற்றவரே, இவ்வுலக வாழ்க்கையில் உறும் எத்தகைய இலட்சியம் நிறைந்த நிகழ்ச்சிகளையும் முழுமையும் அநுபவிக்கும் தகுதி வாய்ந்தவராவர். 'எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி தான் யாதினும் அரிதரிது' எனத் தாயுமான சுவாமிகள் சொல்கிறார். மனிதப் பிறவி அத்துணை அருமை வாய்ந்தது என்றே நானும் நவில்கின்றேன். மனிதர் மிகவும் இனியர். ஆண் நன்று : பெண் இனிது என்று மகா கவி பாரதியும் பகருகிறார்.

மனிதன் பகுத்துணர்வு உள்ளவன். உலகிற்றோன்றிய ஜீவன்கட்கெல்லாம் சிறந்த பிறப்பினன். ஆன்ம சக்தி பெற்றவன். அறிவு நிறைந்தவன். ஆற்றல் மிக்கவன். ஆண்மைக் குரியவன். மனிதனின் தன்மைபற்றி இப்படியே வர்ணித்துக்கொண்டு போகலாம். சொற்பொழிவு விரியும். சுருங்கச் சொல்லின் இம்மை யுலகிற் பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழும் மதியூகம் மிக்கவர் மனிதர் என்றே வழுத்த வேண்டும்.

அன்பர்களே! வாழ்க்கையின் இலட்சியத்தை நிறைவேற்ற வல்லாரும், அதற்கு உரியாரும் மனிதர் என்று முன்னே சொன்னேன். அத்தகைய மனிதப் பிறவியினர் எத்தகையவராய் இருத்தல் வேண்டும். மனிதர்க் குரிய தன்மை எவை? என்பதை முதலில் கூற வேண்டுவதே கடமை. அதுபற்றி அறிஞர் கலியாண சுந்தரர் அழகுற வர்ணிக்கிறார் 'மனித வாழ்க்கையும் காந்தி யடிகளும்' என்ற நூலில். சொல்லுகிறேன் கேளுங்கள்.

மனிதன் எவன்? மனித உடல் தாங்கினோர் அனைவரும் மனிதராவரோ? பின்னை எவர் மனிதர்?

உலகத்திலே உயிர்கள் எடுக்கும் பிறவிகள் பல. அவைகளுள் சிறந்தது மனிதப் பிறவி. மனிதப் பிறவி விழுப்பமுடையதெனக் கூறாத அறிஞரில்லை! பாரிடைத்தோன்றிய அறிஞர்பலரும் 'மனிதப் பிறவி விழுமியது' என்று ஒரு முகமாக உரைத்துப் போந்தார்.

உலகில் ஒன்றைப்பற்றி ஒருமைக் கருத்து எழல் அரிது, அரிதில் ஒன்றேழுமேல் அஃது எத்தகைமை யுடையதா யிருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? அஃது எவரும் ஏற்கத்தக்க உண்மை யுடையதா யிருந்தே தீரல் வேண்டும்.

மனிதப் பிறவியின் விழுப்பத்தைக் குறித்து யாண்டும் ஒரே கருத்து உலவுதல் வெள்ளிடைமலை. இஃதொன்றே மனிதப் பிறவியின் விழுப்பத்தை உறுதி செய்தற்குப் போதிய சான்றாகும்.

ஆறாவது அறிவு (அதாவது பகுத்தறிவு) விளங்கப்பெற்று அதன்வழி நிற்கும் மனிதன் தன்னுயிர்போல் மன்னுயிரைப் பார்ப்பன். இரக்கமே அவன் உள்ளத்தில் குடிகொண்டு நிலவும், அவன் தனக்கென்று உலகத்தில் வாழான். தன் வாழ்க்கை மற்றவர்க்கே என்று அவன் கருதுவன். அவன் கொலை களவு கள் காமம் பொய் என்னும் ஐம்பெரும் பாவங்களுக்கு அஞ்சுவன், அவன் காரணங்களெல்லாம் அன்பு மயமாகப் பொலியும். விலங்கியல்பு அவனிடத்தில் தோன்றுதலருமை. அன்னான் பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கொள்வன். இன்னோரன்ன இயல்பு வாய்ந்த ஒருவனையே மனிதன் என்று கூறலாம்.

சகோதரர்களே! உலகிடைத் தோன்றும் பற்பல பிறவிகளுள் மனிதப் பிறவி மட்டும் சிறந்து விளங்குதற்குக் காரணம் என்னை என்பது இப்போது புலப்படும். கடவுள் படைப்பில் எண்ணிறந்த உயிர்கள், எண்ணிறந்த உடல்கள் தாங்கி வாழுகின்றன. உயிரும் உடலும் ஒன்றுபட்டுத் தோன்றும் பிறவிகளிலெல்லாம், தலைசிறந்த அறிவு விளக்கத்தைப் பெறும் மனிதன் தற்போதைய உலகில் எப்படி வாழுகிறான் என்பதே இப்போதைய கேள்வி.

விலங்கினின்றும் மனிதன் தோன்றினான் என்று ஆராய்ச்சியாளர் முடிபு கட்டுகிறார்கள். மனித சமூகத்தின் ஆரம்ப காலத் தோற்றம் எத்தன்மையதோ, என்னவோ அதுபற்றி இதுபோழ்து நமக்குக் கவலை இல்லை. ஆராயவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் மனிதன் மனிதனாக, மனிதப் பிறவியின் மாண்புக்குரியனாக, வாழவேண்டு மென்பதே அறிஞரானையார் கருத்து. ஜீவன்களிலேயே முழுமை பெற்ற மனிதப் பிறவி (உடல்) தாங்கினோர், இதுகால் அப்பிறவியின் அருமை இழந்து, விலங்குணர்வு பெற்றவராயிருத்தல் மனிதத் தன்மைக்குரிய பெற்றியன்று. விழுமிய பிறப்பாளனான மனிதன் தெய்வநிலை பெறவேண்டும். மனிதன் தன்பாலுள்ள தெய்விகத்தை உணர்ந்து அதை உடைமையாக்கிக் கொள்ளுதலே கடமை. மக்கள் தெய்வ உணர் விழந்து விலங்கு நீர்மைபெற்று, உலகில் வாழ்ந்தால் உலகு காடாக வன்றோ முடியும், உலகு நாடாக விளங்க மக்கள் உள்ளம் தெய்வ இயல்பில் ஒளிர்தல் வேண்டும்.

உலகத்தில் மனிதன் எதற்காகப் பிறக்கிறான்? அவன் வாழ்வின் நோக்க மென்னை? என்பதை ஆராய வேண்டுவது அவசியம். ஆராய்ந்து உண்மை காணின், உலகில் மனிதன் கல்வி பயிலலும், தொழில் புரிதலும், மனைவி மணத்தலும், புதல்வர்ப் பெறுதலும்,

ஒழுக்கங் காத்தலும், இன்னபிற கோடலும் எற்றுக்கு என்பது இனிது புலனாகும். மனிதப் பிறவி தாங்கினோர் மனவுணர்வென்னும் பகுத்தறிவுப் பேறுபெற்ற காரணத்தாலே, அவர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் பெருநிலை எய்தற் குரியராவர். குறள் வகுத்த வள்ளுவனார்,

'அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்'

என்று மனிதனுக்குரிய அறவாழ்வு வழியினை அறிவுறுத்திப் போந்துளார்.

மக்களின் பெரும் பேற்றிற்கென வாழ்வு நல்கப்பட்டதெனினும், வாழ்வுக்கு நிலைக்களனாகவுள்ள தற்கால உலகமோ நெறியல்லா நெறியில் உழல்கிறது. 'பாரதத் தாயின் புதல்வர்களுக்கு தர்ம மார்க்கத்தில் ஒரு மகத்தான கடமை ஏற்பட்டிருக்கிறது. மனித வாழ்க்கையின் இலட்சியங்களையும் கடமைகளையும்பற்றி உலகிற்கு அறிவு புகட்டும் ஊழியம்புரிய அவர்கள் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டு'மென சுவாமி விவேகாநந்தர் மொழிவதை நோக்குங்கள்.

சகோதரர்களே! இந்நாள் வாழ்வைப்பற்றி நினைக்கவும் மனம் நடுக்குறுகிறது. அருளாளராக அறம் வளர்க்க வேண்டிய மக்களின் உள்ளம் தூய்மை இன்றி மாசுபடிந்து சிறுமை வாழ்வில் படிந்திருக்கின்றது. இற்றைய மனித சமூகத்தார் பெரும் பகுதியினரிடையே வாழ்க்கையின் இலட்சியமில்லை. குறிக்கோளான உயரிய கருத்தும் கிடையாது. உலகத்திலே ஒரு பகுதியார் உலகை நாகரிகப்படுத்துவதாகக் கூறி மனித உயிரை மாய்க்கின்றார். மற்றொரு பகுதியார் உரிமைக்குப் போராடிக் கொல்லா விரதங் கொண்டு அஹிம்சை வழி நிற்கின்றார். மனிதப் பிறவி விழுமியது என உலகறிஞர் ஓதுகிறார். ஆனால் அப்பிறவி இதுபோழ்து போர்க்களத்தில் கணக்கின்றி மாளுகிறது. காரணம் என்ன? உலக நிலை கலக நிலையானமைதான்.

தன்னலம் விடுத்துப் பிறர் நலம் பேணும் பெருந்தகைமையே வாழ்க்கை இலட்சியத்தின் முதற்படி அன்பொடு நடக்கும் பண்பினனான சான்றோன் பொதுநலமே விரும்புவன். ஆனால் இன்றைய உலகமும், அதில் வாழும் மனிதனும் எத்தன்மைய நிலை உற்றிருக்கிறதென்று கூற நாண மேற்படுகிறது. உலகம் தன்னலத்துக்கும், பேராசைக்கும் இரையாகி வருந்தினால் மக்கள் வாழ்வு பாழாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இதுபோது உலகம் சாத்தான் வயப்பட்டு வருந்துகிறது. மனிதர் வாழ்வில் மகிழ்ச்சி மலரவில்லை. அவர்களிடத்து இன்பத்தைக் காணோம். வாழ்வு சீர்குலைகிறது. அறம் தலைசாய்ந்துவிட்டது. அமைதி அவமருகிறது. ஒழுக்கம், ஒப்புரவு, குன்றிவிட்டது. உலகத்தில் இயற்கை வாழ்வு ஒடுங்கி, செயற்கை வாழ்வு மல்கிவிட்டது. மனித வாழ்வு தெய்வ வாழ்வாக வேண்டு

மாயின், இறைகளோடு இசைந்து நிற்கும் இன்ப வாழ்வு பெற வேண்டுமாயின் மக்கட் டோகுதியினர் மாசறு மனத்தினராய் இருத்தல் வேண்டும். உலகத்தவர்க்கு தொண்டு செய்தலே தங்களின் இலக்ஷியம் என்று மக்கள் உள்ளத்தில் உதிக்க ஆரம்பித்தால், அவர் வாழ்வில் இயற்கையாகவே இன்பம் பொங்கும். தாயுமான சுவாமிகள் அருளிப் போந்த,

'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே'

என்னும் கருத்தும் ஈண்டு நோக்கத் தக்கது.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முத்துவிநாயகர் ஸ்டோர்,
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா.)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொளும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல் வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி, வலையபட்டி,
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETTIYAR,
Lalji Mansing Building, 1st Floor Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

ஆ! என்ன? நீ பாகீரதியா?

[‘நந்தகோபன்’—மணல்மேடு]

ராமனுதன் தன் வைத்திய சாலையுடன் மாயவரத்திற்கு ஜாகை வந்து 2 மாதங்கள்தா னிருக்கும். அவன் வைத்தியசாலைக்கு எதிரில் பிரம்மாண்டமான மாடி வீடு. யாரோ ஒரு கைம்பெண்ணும் அவளது ஒரே மகளும் அவ்வீட்டில் குடி யிருப்பதாக மட்டும் கேள்விப்பட்டிருந்தான் ராமனுதன்.

ராமனுதன் ஒருநாள் வைத்தியசாலையில் ஜன்னல் ஓரம் உட்கார்ந்து ஏதோ வாசித்துக்கொண் டிருந்தான். அந்த ஜன்னலிலிருந்து பார்த்தால் எதிர்வீட்டு மாடி முதல் தெரு ஹால் வரை சுத்தமாகத் தெரியும். ஐப்பசி மாதமாகையால் அப்பொழுது அதிக மழை பெய்து ஓய்ந்து சிறு தூறலாகத் தூற்றல் போட்டுக்கொண்டிருந்தது. தெருவெல்லாம் சேறும் ஜலமுமாக இருந்தது. அச்சமயம் எதிர்வீட்டு மாடியினின்று குலுக்கென்ற நகைப்புடன் ‘ஐயோ பாவம்’ என்ற இனிய சொற்கள் எழுந்தன. ராமனுதன் திகைத்து சப்தம் உண்டான இடத்தை நோக்கினுன்.

அக்கணம் அவன் உண்மையிலேயே உன்மத்தங் கொண்டவன் போல் மாடியையே நோக்கினுன். அவன் மனம் இதுவரை ஒரு பொருளுக்கும் இதுபோல் அடிமையானதில்லை.

மாடியில் நவநாகரீக நங்கை யொருத்தி நின்றுகொண்டிருந்தாள். வயது 19 இருக்கலாம். நல்ல அழகு ஆனுல் உடல் இளைத்திருந்தது. அவள் அப்பொழுதுதான் தெருவில் கால் சருக்கி விழுந்து கிடந்த பருத்த பரங்கிப் பழம் போன்ற ஒரு மனிதரைப் பார்த்துத் தன் முத்துப்பற்கள் வெளித்தோன்ற நகைத்துக்கொண்டிருந்தாள். அந்தப் பெரிய மனிதர் தாம் விழுந்த இடத்தினின்று எழுந்திருக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தார். அவர் காலில் பலத்த காயம்பட்டிருந்தது. இதைக்கண்ட ராமனுதனுக்கு முதலில் தன்னை யறியாமலேயே நகைப்பு உண்டாயிற்று. மறுகணம் சட்டென்றுதான் இருந்த இடத்தினின்றும் தெருவில் ஓடிவந்து மெள்ள அப்பெரியாரைத் தூக்கி நிறுத்தினுன். வைத்தியசாலையினுள் அழைத்து வந்தான். அப்பொழுது ராமனுதன் மாடியை நோக்கினுன். இரண்டு ஜதைக் கண்கள் ஒன்றை ஒன்று சந்தித்தன. ராமனுதனது மனம் சஞ்சலமடைந்தது. அந்தக் குலுக்கென்ற நகைப்பின் சப்தமும், புன்சிரிப்பும், முத்துப்பற்களும் அவனை எங்கோ இழுத்துச் சென்றன. பழைய நினைவுகள் அவன் மனத்தில் பாய்ந்தெழுந்தன.

* * *

ராமனுதன் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். அவன் 4 வயதுக் குழந்தையா யிருக்கும் போதே தாயை இழந்தான். தந்தை தன் தாயற்ற குழந்தையுடன் கண் கலங்கித் தவித்தார்.

ராமனுதனது (தந்தையின் கூடப் பிறந்த) அத்தை லட்சுமி அம்மாள் மதராசில் ஒரு பெரிய உத்தியோகஸ்தருக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவள் புருஷனுக்கு மாதம் 300 ரூ. சம்பளம். அப்பொழுது அவர்களுக்குக் குழந்தையே இல்லை. அவர்கள் ராமனுதனை மதராசுக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். அவன் மேல் உயிரா யிருந்தார்கள். மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டான். வயது வந்ததும் பள்ளியில் சேர்க்கப்பட்டான். நன்ருய்ப் படித்தான். கவலையின்றிப் படிப்பதும் உண்பதும் விளையாடுவது மாக இருந்தான்.

ராமனுதன் வந்த 3 வருடங்களுக்கெல்லாம் அத்தைக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை ரொம்ப அழகா யிருந்தது. ராமனுதன் அந்தக் குழந்தையின்மேல் உயிராயிருந்தான். பள்ளிக் குப் போகும் வேளை தவிர்த்து மீதி வேளைகளில் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுவான். அவன் அத்தை 'ராமனுதா உன் பெண்டாட்டி இவள்தான். உனக்குத்தான் இவளைத் தரப் போகிறேன்' என்பாள். ராமனுதனுக்கு ஒரு பக்கம் வெட்கமும், ஒருபுறம் ஆனந்தமும் உண்டாகும். நாளடைவில் குழந்தைக்குப் பாகீரதி என்று பெயரிட்டனர். ராமனுதன் எங்கே எந்த வேடிக்கையா யிருந்தாலும் பாகீரதியை அழைத்துக்கொண்டு போய்க் காட்டுவான். பாகீரதியும் ராமனுதனை 'அத்தான்' என்று கூப்பிட்டாள்.

வயது வந்ததும் பாகீரதி பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டாள். ராமனுதன் அவளுக்கு நன்ருய்ச் சொல்லிக் கொடுத்தான். அவளும் உற்சாகத்துடன் படித்தாள். ராமனுதன் படிப்படியாக வாசித்து 20 வது வயதில் பி. ஏ. (B. A.) பாஸ் செய்துவிட்டான். அப்பொழுது பாகீரதிக்கு வயது 15.

ராமனுதன் தான் B. A. பாஸ் செய்து விட்டதைத் தன் அத்தைக்கும் மாமாவுக்கும் தெரிவித்தான். அவர்கள் ஆனந்த மடைந்தனர். ராமனுதன் யாருக்காக இவ்வளவு கஷ்டப்பட்டு வாசித்தானே அந்த நபரிடம் இப்பொழுது இந்த சந்தோஷ சமா சாரத்தைத் தெரிவிக்க முடியாமல் போய்விட்டது. அவன் மனம் பதைத்தது.

பாகீரதி இப்பொழுது அவன் கண்களில் அதிகமாகப்படுவ தில்லை. ஜன்னல் இடுக்கிலும் கதவிடுக்கிலும்தான் காட்சி தந்தாள். மாலை வேளைகளில் ராமனுதன் உலாவிவிட்டு வரும்போது தெருக்

கோடியில், பாகீரதி வீணை வைத்துக்கொண்டு ஆனந்தமாகப் பாடுவது காதில் விழும். அந்தச் சங்கீத சாகரத்தில் முழுகியவண்ணம் வந்து தெருவாயிற்படியில் பட்டென்று அடி வைத்தானோ இல்லையோ, அந்தச் சங்கீதம் பெரிதொரு முட்டுக்கட்டையுடன் நின்றுவிடும். ராமனுதன் தினம் மாலையில் நல்ல கதம்பமாக வாங்கிக்கொண்டு வருவான். அத்தையிடம் தருவான். அத்தை அதை அன்புடன் வாங்கிப் பாகீரதியின் அலைசொரியும் கூந்தலை வாரிப் பின்னி அதில் சூட்டுவாள். பாகீரதி ராமனுதன் வாங்கி வந்த கதம்பஹாரம் தன் கூந்தலில் துலங்க வேண்டுமென்றே நிஜமாகத் தானே, நாலைந்து தரம் உள்ளுக்கும் வெளிக்குமாக ஏதோ பிரமாத வேலையில் ஈடுபட்டவள்போல், அன்ன நடை நடந்து தன் கால் சதங்கைகள் கல்கல் என்று ஒலிக்கச் செல்வாள். ராமனுதன் அவளையே ஆனந்தமாக நோக்குவான். அவன் மனம் பத்து வருஷத்துக்கு முந்திய பாகீரதி எங்கே? இந்த அற்புத சௌந்தரிய பாகீரதி எங்கே! என்று பூரித்துப் போகும்.

அப்பொழுது ராமனுதனது மாமா பென்ஷன் பெற்ருர். அவர் ராமனுதனை மேலே டாக்டர் வேலைக்குப் படிக்க வைத்துப் பாகீரதியை மணம் செய்து வைத்துவிட வேண்டுமென்று பெரிய மனக்கோட்டை கட்டிக்கொண் டிருந்தார்.

ராமனுதனையும் பாகீரதியையும் பார்த்துப் பார்த்து ஆனந்தமடைவார்.

ஆனல் தெய்வச் சோதனை பொல்லாததல்லவா ?

ஒருநாள் திடீரென்று ராமனுதனுக்கு அவன் தந்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ராமனுதன் அதைப் பிரித்துப் படித்தான். படித்தவன் அப்படியே ஸ்தம்பித்து விட்டான். அவன் முகம் வேறுப்பட்டது. கடிதத்தில்,

'ராமனுதனுக்கு உன் தந்தை எழுதுவது நான் உனக்கு விவாகம் செய்ய உத்தேசித்திருக்கிறேன். என் நண்பர் சொக்கலிங்கம் பிள்ளையின் மகளை நிச்சயித்திருக்கிறேன். உடனே கலியாணம் முடிந்தாக வேண்டும். படித்தது போதும் உடனே வந்து சேரவும்' என்றிருந்தது.

அதற்கு ராமனுதன் உடனே, 'அன்புள்ள தந்தைக்கு,

நான் என்னை இதுவரை ஆதரித்து வளர்த்துக் கல்வி பயில்வித்த மாமாவுக்குத் துரோகம் செய்ய மாட்டேன். மணம்செய்துகொண்டால் மாமாவின் பெண் பாகீரதியைத்தான் செய்துகொள்வேன். இல்லையேல் என் வாழ்நாளை மணமின்றிக் கழிப்பேன். இது சத்தியம் தங்கள் ராமனுதன்' என்று எழுதிவிட்டான்.

அன்றுமுதல் ராமனுதன் உற்சாக மிழந்தவனுய்க் காணப் பட்டான்.

சிலநாட்கள் கழிந்தன. ஒரு நாள் மாலை ராமனுதன் வீடு திரும்புகையில் வீட்டில் அதிக இறைச்சலாகக் கிடந்தது. அவனது தந்தை மாமாவுடன் கடாமுடா என்று ஏதேதோ சண்டை போட்டுக் கொண்டிருந்தார். ராமனுதன் திடுக்கிட்டுத் தெரு ஹாலில் ஸ்தம்பம்போல் நின்று விட்டான். அப்பொழுது அவன் தந்தை, 'ஏய், பணக்காரனு யிருந்தால் உம்முடன் இருக்கட்டும். என் பையனை வீணுய்க் கெடுத்தீரே. உம்மாலல்லவா அவனுக்கு என் வார்த்தையைத் தட்டும் தைரியம் வந்தது. உம்முகத்தில் விழித் தாலும் பொடிக்குப் புகையிலை அகப்படாது. உம் பெண்ணை அவன் கட்டிக் கொள்வதைப் பார்ப்போம்' என்று சப்தம் போட்டுக் கொண்டே திபுதிபு வென்று வெளியே வந்தார். ராமனுதன் நெருப்பில் நிற்பவன்போல் துடித்து, 'அப்பா, அப்பா இதென்ன இறைச்சல்? எப்பொழுது வந்தீர்கள்?' என்று கேட்டான்.

'தூ, மானங் கெட்டவனே, படிப்புச் செய்த வேலையா? மாமாவின் துணிச்சலால் என் பேச்சையும் தட்டினுயே, என் பேச்சைத் தள்ள அவ்வளவு தைரியமா உனக்கு? இப்பொழுதாவது உன் பிடிவாதத்தைவிட்டு என் பின்னே வந்து சொக்கலிங்கம் பிள்ளையின் மகளைக் கலியாணம் செய்து கொள்' என்றுர் படபடப்புடன்.

ராமனுதனுக்குப் பொறுக்க முடியவில்லை. அவன் மனம் கல்லாயிற்று. 'அப்பா, அது என்னுல் முடியாத காரியம். மாமாவின் மகள் பாகீரதியைத்தான் கலியாணம் செய்து கொள்வேன். இது சத்தியம்....' என்றுன் தொண்டைவிக்க.

அவ்வளவுதான். 'அட பாவி, மறுமுறை அந்த மாமாவின் வீட்டில் அடிவைத்தால் என்னை இரண்டாகக் கிழித்து என் ஈறலைத் தின்ற பாபத்திற்காளாவாய். எங்கேயாவது தொலைந்துபோ, சண்டாளனே....' என்று உரக்கக் கூவித், தம் கையிலிருந்த கைத் தடியால் ராமனுதனது மண்டையில் ஓங்கி அடித்துவிட்டுத் தடதட வென்று எங்கோ நடந்தார்.

ராமனுதன் தலையில் இடிவிழுந்ததைப் போலிருந்தது. தலை கிர் என்று சுழன்றது. உதிரம் பீறிட்டு முகத்தில் வழிந்தது. எங்கோ தன் கால் போன போக்கில் நடந்தான். கடற்கரையை அடைந் தான். கடலில் விழுந்து உயிரைவிட்டு விடலாமா என்று ஒரு கணம் எண்ணினுன். 'ஆ அருமை மாமா, அத்தை, அந்தப் பாகீரதி.... இவர்களை விட்டு விட்டா?' என்று அவன் மனத்தில் ஏதோ ஒன்று இறைந்தது. தபதப வென்று ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடினுன். அப்பொழுதுதான் புறப்படத் தயாரா யிருந்த வண்டியில் ஏறி

உட்கார்ந்தான். வண்டி கடகட தடதட வென்று புறப்பட்டது. ராமனுதனது மூளை வரவர அதிகக் குழப்பமடைந்தது. அப்படியே உருண்டு வண்டியினுள் ஜனங்கள் நடக்கும் இடத்தில் விழுந்து விட்டான்.

* * *

தன் சுயநிலை வரக் கண் விழித்தான். தன் ஆத்ம நண்பர் டாக்டர் ராகவன் தன் அருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். 'டாக்டர் நான் இப்பொழுது எங்கிருக்கிறேன்? இது விழுப்புரம் ரயில்வே ஆஸ்பத்திரியல்லவா?....நான் எப்படி இங்கு வந்தேன்?' என்று மெல்லிய குரலில் கேட்டான்.

'அப்பா, ராமனுதா அதிகமாகப் பேசி உடம்பை அலட்டிக் கொள்ளாதே. உன்னை 2 மாதங்களுக்கு முன் ஒரு நாள் அலங்கோலமாகப் பிளாட் பாரத்தில் வண்டியினின்றும் இறக்கினர். நான் அப்பொழுது உன்னைக் கண்டேன். முதல் உனக்குச் சிகிச்சை செய்யும் பாக்கியத்தைப் பெற்றேன். அப்பா.... நீ என் இந்தக் கதிக்கு ஆளானுய்? மாமாவின் வீட்டிற்கு ஏன் போகவில்லை?' என்று கேட்டார் டாக்டர்.

அதற்கு ராமனுதன், 'டாக்டர், மாமாவின் வீடு, அத்தை, பாகீரதி, நான் போகமாட்டேன். போயின் என் தந்தைக்குப் பெரிய துரோகம் செய்தவனுவேன்....' என்று பிதற்றினுன்.

ராமனுதனுக்கு வரவர உடல் குணமடைந்தது. அவனது மனம் மாமா, அத்தை, பாகீரதி இவர்களை மறக்கச் சக்தியற்றதாயிருந்தது. அவர்களை நினைத்து அடிக்கடி கண்ணீர் விடுவான்.

அந்த டாக்டர் ராமனுதனைத் தம் ஆஸ்பத்திரிலேயே வைத்து வேலை கற்பித்தார். அவனும் ஜாக்கிரதையாக வேலை கற்றுக் கொண்டான்.

ஒரு நாள் ராமனுதன் ஆஸ்பத்திரியில் இருக்கையில் சென்னை சென்றிருந்த டாக்டர் துக்கம் மிகுதியாய் ராமனுதனிடம் வந்து, 'ராமனுதா, உன் மாமா 4 மாதங்களுக்கு முன் இறந்து விட்டாராம் அப்பா....' என்றுர்.

'ஆ....என் மாமா இறந்து விட்டாரா? ஐயோ....ஈசா இதுவும் உன் சோதனையா?.... அப்படியென்றுல் அவர்கள் என்ன ஆனுர்கள்? அத்தையும்....பாகீரதியும்....?' என்றுன் கண்களில் கண்ணீர் உதிர.

'அவர்களிருவரும் உடனே தங்கள் சொத்துடன் கிராமத்திற்குக் குடி போய்விட்டார்களாம்' என்றுர் டாக்டர்.

ராமனுதன் 4 வருடங்களில் டாக்டர் வேலையை நன்றுய்க் கற்றுக்கொண்டு விட்டான். அடிக்கடி மாமாவை நினைத்துக் கண்ணீர் விடுவான். பாகீரதியை மறக்க அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வீணுயின. அவளது அழகிய முகம் அவன் மனக் கண்

முன் அடிக்கடி தோன்றி நிற்கும். அவன் பெண்களை வெறுக்க ஆரம்பித்தான். அவன் மனம் தேச சேவையை நாடியது. சுதேசி மருந்துகளைக் கணக்கின்றி வாங்கினன். டாக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு மாயவரத்திற்கு வந்து தனது வைத்திய சாலையைத் திறந்தான். அதற்கு 'அகில பாரத ஆயுர்வேத வைத்திய சாலை' என்று பெயரிட்டான்.

ஏழைகளுக்குத் தரும வைத்தியம் செய்தான். சேரிகளுக்குச் சென்று அங்கே நோயால் வருந்தும் ஏழை மக்களுக்குச் சிகிச்சை செய்தான். அது அவனுக்குப் பெரிதும் மன அமைதியை அளித்தது. சொற்ப நாட்களில் கணக்கற்ற ஏழை மக்களின் அன்பிற்குப் பாத்திரனுனன். அவன் வைத்திய சாலையில் காலை முதல் மாலை வரை, கணக்கற்ற ஏழை மக்கள் மருந்துக்காகவும், சிகிச்சைக்காகவும் காத்து நிற்பார்கள். ராமனுதன் அவர்களுக்கு அன்புடன் சிகிச்சை செய்தும், மருந்து கொடுத்தும் அனுப்புவான்.

*　　　*　　　*

பெரியவருக்கு மருந்து போட்டு அனுப்பிய ராமனுதனுக்கு மேற்படி நினைவுகள் ஒன்றன்பின் ஒன்ருய்த் தோன்றின. அவன் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. 'சே, பாகிரதியா மாடியில் நின்ற அந்தப் பெண்? இல்லை....அவள் ஏன் இப்படி இளைக்க வேண்டும்? யாரா யிருந்தாலென்ன? என் மனம் ஏன் பாகிரதியை மறக்கச் சக்தியற்றதா யிருக்கிறது?....அப்பா....அப்படிச் சப்தம் செய்தாரே' என்று அவன் மனம் குமுறிற்று. அப்பொழுது இரவு மணி 9 இருக்கலாம். யாரோ ஒரு சிறுவன் ஓடிவந்து, 'டாக்டர், டாக்டர் எதிர்வீட்டு அம்மாவுக்கு ஏதோ இருந்தாற் போலிருந்து உடம்பு சரிப்படவில்லையாம். உங்களைக் கூப்பிட்டு வரச் சொன்னுர்கள்' என்ருன்.

ராமனுதன் திடுக்கிட்டு விறைந் தெழுந்தான். சில மருந்துகளையும் சோதனைக் கருவியையும் எடுத்துக்கொண்டு அந்த மாடி வீட்டினுள் சென்ருன்.

அங்கோர் அறையில் ஒரு கட்டிலில் ஓர் அழகிய பெண் மெலிந்த சரீரத்தினளாய்க் கிடத்தப்பட் டிருந்தாள். அன்று மாலை தான் மாடியில் கண்ட நவநாவரீக மங்கை அவள்தான் என்று அறிந்து கொள்வதற்கு ராமனுதனுக்கு மிகக கடினமா யிருந்தது. அவன் அப்பெண்ணுக்கு கைபார்த்து மருந்து கொடுத்தான். பெண்ணின் பக்கத்தில் கண்ணீருடன் உட்கார்ந்திருந்த அவள் தாய், 'டாக்டர் குழந்தையைத் தாங்கள்தான் காப்பாற்ற வேண்டும்' என்ருள்.

'அம்மா, தாங்கள் கவலைப்பட வேண்டாம். மனோவேதனையின் அதிர்ச்சியால் மூளை குழம்பி யிருக்கிறது. நாளடைவில் குணம் அடையும்' என்ருன் ராமனுதன்.

தினம் இருமுறை போய்ப் பார்த்து மருந்து கொடுத்தான். வரவர அப்பெண்ணுக்கு உடம்பு சௌகரியமடைந்தது. இப்பொழுது ராமனுதனது மனம் அதிக சஞ்சலமடைந்தது.

இரவு 8 மணி இருக்கலாம். ராமனுதன் அப்பெண்ணின் அருகில் உட்கார்ந்துகொண்டு ஏதோ மருந்து கலந்துகொண் டிருந்தான். அச்சமயம் பெண்ணின் தாய் அங்கு இல்லை. ராமனுதனது மனம் துடித்தது. அவன் 'அம்மா உன் பெயர் என்ன?' என்று கேட்டான்.

'என் பெயரா? என் பெயர் பாகீரதி.......' என்றுள் அவ்வனிதை.

'ஆ.......யார்.......பாகீரதியா? என்று தன்னை யறியாமலே வாய்விட்டு அலறினன் ராமனுதன். அவன் கண்களைக் கண்ணீர் மறைத்தது. சுவரின் பக்கம் திரும்பினன். அங்கே சுவரில் ஓர் புகைப்படம் புத்தம் புதிய ரோஜாமாலைகளால் திகழ்ந்தது. உற்று நோக்கினன். ஓடி அப்படத்தை எடுத்தான். அவன் கைகள் நடுங்கின. கண்ணீர் தாரை தாரையாய் ஓடிற்று. அப்படம் ராமனுதன் கலாசாலையில் படித்தபோது எடுத்தது. 'பாகீரதி' என்றுன் தொண்டைவிக்க. வனிதை பாகீரதிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏனே அவளது கண்களினின்று பொலபொலவென்று கண்ணீர் உதிர்ந்தது. அவள் மருண்ட விழிகளுடன் டாக்டரை நோக்கினுள்.

அச்சமயம் பெண்ணின் தாய் அங்கு வந்தாள். டாக்டர் படத்தைக் கையில் வைத்துக்கொண்டு அழுவதைக்கண்டு திடுக்கிட்டாள். அவளைக் கண்ட டாக்டர் 'அம்மா தாங்கள் யார்? என்று கேட்டான் தொண்டைவிக்க.

'இவள் என் புத்திரிதான்.......' என்றுள் அவள்.

அவ்வளவுதான் 'அத்தை அத்தை' என்னைத் தங்களுக்குத் தெரியவில்லையா? நான் பாபி. நான் ராமனுதனல்லவா?' என்றுன்.

'ஆ.......யார்....... ராமனுதனு? ராமனுதா.......ஐயோ' என்று தன் முகத்தை மூடிக்கொண்டு கோவென்று கதறி அழுதாள் ராமனுதனது அத்தை லட்சுமி அம்மாள்.

பாகீரதியின் கண்களில் கண்ணீர் தாரைதாரையாய் வழிந்தது. அவள் ராமனுதனைக் கண் கொட்டாமல் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதாள்.

அச்சமயம் தெருக் கதவை, யாரோ 'அம்மா லட்சுமி' என்று இடித்துக் கூப்பிட்டனர்.

லட்சுமி அம்மாள் 'ராமனுதா அப்பா வருகின்றுர் என்று சொல்லிப்போய்க் கதவைத் திறந்தாள். உடல் திரைந்து உருமாறிபிருந்த ராமனுதனது தந்தை சந்தோஷத்துடன் 'நம் பக்கம் ஜயம்'

என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார். ராமனுதன் 'அப்பா அப்பா' வென்றலறித் தந்தையின் கால்களில் விழுந்தான். அவர் திடுக்கிட்டு ஸ்தம்பமாய் நின்ருர். மறுகணம் ஓடி ராமனுதனைக் கட்டி அணைத்துக்கொண்டு 'அப்பா ராமனுதா, எங்கே இவ்வளவு நாளிருந்தாய்? நான் செய்த தீமைகளைப் பொறுத்து என்னை மன்னி........' என்ருர் கதறியவண்ணம்.

'அப்பா........அப்பா வேண்டாம்........எல்லாம் கடவுள் சோதனை' என்ருன் ராமனுதன்.

'ராமனுதா உனக்காகவே பிறந்த உன் மாமன் மகள் பாகிரதி உனக்காகக் காத்திருக்கிருள். உன் மாமாவின் மனோரதமும் ஈடேறிற்று. உன் மாமா இறக்கும் தறுவாயில் 'என் அருமை ராமனுதனை எங்கிருந்தாலும் கண்டு பிடித்து அவனுக்குப் பாகீரதியை மணம் செய்வித்து என் சொத்து யாவற்றையும் அவனிடம் ஒப்புவித்து விடுங்கள்' என்று என்னிடம் சொன்னுரப்பா ஈசனும் அருள்கூர்ந்தான்' என்ருர்.

எல்லோரும் ஒருவாறு சாந்தி அடைந்தனர்.

நல்ல சுபமுகூர்த்தத்தில் ராமனுதனுக்கும் பாகீரதிக்கும் கலியாணம் செய்துவைத்து இன்பக் கடலில் ஆழ்ந்தனர் கிழவரும் லட்சுமி அம்மாளும்.

கோபம்

கோபம் என்பது லோபம் முதலிய
அறுவகைக் குணங்களில் முதன்மை யுறுவது
ஆழ்ந்த அறிவுகள் அடைந்து மென்ன
சூழ்ந்தே கோபம் தோன்று மாயின்
அத்தனை யறிவும் அன்றே யழியும்
இத்தரை தன்னில் யாவரும் தூற்றுவர்
மூங்கிலிற் பிறந்த தீயே முற்றும்
ஓங்கிய பண்ணையை ஒழித்தல் போல்நாம்
வளர்க்கும் கோபம் வாழ்வைத் தகிக்கும்
சுடுநெருப் பென்பதைச் சொல்லவும் மேண்டுமோ?
பொறுமை கடலினும் பெரிதே என்பதே
அறிவு நிறைந்த ஆன்ருேர் வாக்காம்
ஆதலின் கோபச் செயலைப்
பூதலந் தன்னில் பொள்ளெனத் தவிர்ப்பிரே.

—புதுவை - டி. ஏ. சாமி

சங்கீத வித்வானோடு

[பாரதிதாசன்]

நமது நாட்டில் உள்ள சங்கீத வித்வான்களில் பெரும்பான்மையோரிடம் உள்ள மனோபாவத்தை விளக்கும் முறையில் இந்தச் சம்பாஷணை எழுதப்பட்டதாகும்.

* * *

கேள்வி:—நீங்கள் நாகரீகம் உடையவராகக் காணப் படுகிறீர்கள். உங்கள் வார்த்தைகள் கம்பீரமாகவும் உங்கள் சுதந்தர புத்தியை விளக்குவன வாகவும் இருக்கின்றன. செல்வ மில்லாதவர்களுக்கு இந்த உலகம் பயங்கரமானது. நீங்கள் நிர்ப்பயமாக ஆடம்பர வாழ்க்கை நடத்துவது அறிய எனக்கு மிகவும் சந்தோஷம். நீங்கள் தமிழர் ஆதலால், அந்தச் சந்தோஷம் மிக அதிகரிக்கிறது.

பதில்:—ஆம் நான் ஒரு தமிழன், ஏறக்குறைய நீங்கள் சொல்லிய அனைத்தும் என் விஷயத்தில் உண்மைதான். நான் ஓர் சங்கீத வித்வான்.

கேள்வி:—அதிக சந்தோஷம். சங்கீதத்தின் உபயோகம் என்ன?

பதில்:—அறிஞர், கவிஞர், பக்தர் இவர்களின் உயரிய எண்ணங்களை உலக மக்களுக்கு உரை நடையில் எடுத்துக் காட்டுவது சாதாரண வழி.

அந்த எண்ணங்களைக் கவிதையால் மக்களுக்கு விளக்குவது மிக்க பயன் விளைக்கக் கூடியதாகும். அந்தக் கவிதையும், இசை

யோடு கூடியதா யிருந்துவிட்டால் பொன்மலர் மணத்தையும் அடைந்து விட்டது போலாகும். அந்த இசைக்கவிக்குப் பக்க வாத்தியங்களையும் அமைத்து விட்டால் என்ன ஆகும் தெரியுமா? எந்த எண்ணத்தை மக்களிடம் புகுத்த வேண்டுமோ, அந்த எண்ணமே அந்த மக்களின் எண்ணமாக ஆகிவிடும்.

அது மாத்திரமல்ல. 'சுவர்க்க இன்பம் மேலானது. ஆங்கே, கற்பகவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி, ஹரிசந்தனம், பாரிஜாதம் என்பன உண்டு. அங்குள்ள வானவர் இளமையோடு இருப்பார்கள். அவர்கட்குப் பசியும் இல்லை, தாகமும் இல்லை. கண் கொள்ளாக் காட்சிகள். இளம் பெண்கள், மலர் மணம், இனிய கானம், உண்ண அமுதம், உடுக்கக் காற்றினும் மெல்லிய தங்க மயமான உடைகள், உடம்பை உறுத்தாத மின்னும் பூஷணங்கள்—இவை எதேஷ்டம். நீ சம்பாதித்தாக வேண்டும் என்பதில்லை. அவை உன்னைச் சம்பாதித்துக் கொள்ளத் தவம்புரியும்.

இப்படிப்பட்ட பதவியை—மேலுலகத்தை நீ பெற ஏற்பாடு செய். அதற்காக நீ தர்மம் செய், அதருமம் நீக்கு; பெருமாள் அருள் உனக்குக் கிடைக்கும். அந்த அருளின் ஒரு துளிபோதும் அத்தனை பெரிய தேவலோகம் சொந்தமாகி விடும்'

என்று உரை நடைக்காரன் சொல்லுவான்.

இதையே ஒரு கவிஞன்,

'ஆண்டவன் அருளினை வேண்டு—புவி
அவதியை நொடியினில் தாண்டு
தூண்டா விளக்கினில் மாணிக்கச் சோதியில்
தோன்றிடும் சுவர்க்க மாராச வீதியில்
மாண்புறு மங்கையர் தேவரின் சாதியில்
வலிய அணைப்பர்நீ சென்ற தேதியில்'

என்று துவக்கி வர்ணிப்பான்.

உரை நடக்காரன் சொன்னதிலும் கவிஞன் சொன்னதிலும், ஆண்டவன் அருளின் திறம், தேவலோகத்தின் சிறப்பு ஒருவாறு விளங்கும். ஆனால், பக்க வாத்தியங்கள் சகிதம் சங்கீத வித்வான் தனது ராக பாவத்தில் இக் கருத்தைக் குழைத்து மக்கள் செவியில் ஊற்றினால், கேட்போர் வான லோகத்தில் இன்ப மனுபவித்துக் கிடப்போர் ஆவார்! வேறு பேச்சில்லை.

சங்கீதம் மிக்க உபயோகமுடையது.

கே:—நீங்கள் சங்கீதத்தின் உபயோகத்தை நன்றாகக் கூறிவிட்டீர்கள். எனவே, சங்கீதத்தால் உருகாத ரேடியம் இன்னும் கண்டு பிடிக்கவில்லை என்பதும், அர்த்த புஷ்டியுள்ள ஒரு கருத்

தமைந்த ஒரு கவிதையைச் சங்கீதமானது மனிதனின் உயிரிற் புகுந்து அவனை அந்தக் கருத்தின்படி அகண்டாகாரப் படுத்தி விடுகிறது என்பதும் விளங்கிற்று.

இதுமாத்திர மல்ல. அதே சங்கதி பொய்யாக இருந்தாலும், நம்ப வைத்து விடும் சக்தி சங்கீதத்திற்கு உண்டு. அவ்வளவுதானே? ஆம்! தடையில்லை.

அப்படியானால் சங்கீத வித்வானாகிய தாங்கள் மக்களிடம் பாடும் பாட்டுக்கள் நல்லனவாக, நாட்டின் முன்னேற்றத்திற் குரியனவாக, அல்லது பக்தியின் வித்தாக, கண்ணாடிபோல் மக்களுக்குச் சன்மார்க்கத்தை விளக்கிக் காட்டுவனவாக இருக்க வேண்டும். ஒரு நாட்டை முன்னேற்றமுறச் செய்யும், சக்தியைக் கையில் அடக்கிக் கொண்டிருக்கும் பெரியார்களின் கூட்டத்தில் இப்படிப்பட்ட சங்கீத வித்வான்களும் சேர்ந்தவர்கள் என்று கூறத் தடையில்லை.

பதில்:—தடையேது? நன்றாய்ச் சொன்னீர்கள்.

கே:—ஆயிர மக்கள் கூடிக்கொண்டு தங்கள் வாயினின்று அமுத கானத்தின்மீது ஏறிவரும் கவிதைகளை எதிர் பார்த்திருக் கையில், 'நீங்கள் பொடி போடுவது நல்லது; அது மூளையை வெகு பெரிதாக்கி விடும்; என்று அழகாக, இனிமையாக, பாவத்துடன் பாடி விடுகிறீர்கள். என்று வைத்துக் கொள்வோம். என்ன ஆகும்? கேட்போர் அனைவரும் பொடி போட ஆரம்பித்து விடுவார்கள்

பதில்:—வேறென்ன? உலகம் கெட வேண்டியதுதான்.

கே:—நல்லெண்ணம், கல்வி, அறிவு, ஒழுக்கம் அனைத்தும் சங்கீத வித்வான்களிடம் குடிகொண்டிருக்க வேண்டும்.

ப:—ஓ! அதற்கென்ன சந்தேகம்?

கே:—நீங்கள் தமிழ் நாட்டினர். பேஷான தமிழர். தமிழ் நாட் டின் முன்னேற்றத்திற்கு உரியவர்களில் நீங்கள் ஒருவர்-தமிழ் படித் திருக்கிறீர்களா? தமிழ்க் கவிகளை ஏராளமாகப் பொருளுடன் பார்த்திருக்கிறீர்களா? கவிதை ரசிக்கத் தெரியுமா? தமிழ் இலக் கணமும், கவிதை செய்யும் திறமும் உண்டா? நாட்டின் நிலை, தேவை, நாட்டில் எழுந்துள்ள அபிப்பிராய பேதங்கள் இவைகளைப் பரிசீலனை செய்து நீங்கள் ஒரு முடிவுக்கு வந்ததுண்டா? என்ன பேசாதிருக்கிறீர்களே?

ப:—ஒழிவில்லை. தமிழ் படிக்க வேண்டும். பத்திரிகை படித் தால் பொதுவிஷய ஞானம் வரும் என்று கேள்வி.

கே:—நான் ஏமாற்ற மடைந்தேன். ஆச்சரியப்படுகிறேன் இனிமேலா படித்தாக வேண்டும்? சரி நீங்கள் கச்சேரியில் பாடும் பாட்டுக்கள் என்னென்ன?

(தொடரும்)

சங்கீதத்தைத் தமிழரே கண்டு பிடித்தனர்

[சங்கீத விஞ்ஞானி திரு. மா. நாதமுனி]

சங்கீதத்தைச் சூரிய கதியி லிருந்தும், சூரியனால் உண்டாக் கப்பட்ட உலகப் பொருள்களி லிருந்தும், மனிதர் முதலிய சீவராசிகளி லிருந்தும் தமிழர்களே முதன் முதல் கண்டு பிடித் தார்கள். இச்சங்கீதம் ஓர் ஒலி பாஷையாகும். இயற்கையானதும், பூரணமானதும், பழமையானதும், இலக்கண முடையதுமான இதில் ஒன்றைக் கூட்டவோ, குறைக்கவோ எவராலும் முடியாது. இவ்வொலி பாஷையிலுள்ள ஒவ்வொரு ஒலி அல்லது ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் நேர்மையான தமிழ் எழுத்துக்கள்தான் அமைந் திருக்கின்றன. இந்த ஒலி பாஷையின் எழுத்துக்களை எழுதுவதற் குத் தமிழ் எழுத்துக்கள் தவிர வேறு எந்த பாஷையின் எழுத்து களும் இடந்தரா.

இசையிலே தமிழ் பொருந்தி யிருப்பதினாற்றான் சங்கீதத்தை 'இசைத் தமிழ்' என்று அறிஞர்கள் கூறினார்கள். மேலும், இனி மையாகிய சங்கீதமும் தமிழும் ஒரே இலக்கணமாய் ஒன்றுபட்டு அமைந்திருப்பதினாற்றான் தமிழைத் 'தமிழிசை' என்றும் 'தமிழினிமை' என்றும் கூறினர். எனின் இசையே தமிழாகவும், தமிழே இசையாகவும் இருக்கின்றன. அதாவது இசை இலக்கண மும் தமிழ் இலக்கணமும் ஒரே விதமாக விருப்பதால் அதனை 'இசைத் தமிழ்' என்றும், சுரத் தமிழ் என்றும் கூறினர். இசைத் தமிழ் என்பது ஒரு நூல் அன்று. இவற்றால் தமிழி லிருந்து இசை யும் இசையிலிருந்து தமிழும் வந்தன வென்று பெறப்படும். எனில் தமிழுக்குச் சரியாக இசையைப் பாடவும், இசைக்கு நேராகத் தமிழைச் சொல்லவுங் கூடும்.

முதன் முதல் தமிழரே பேரிசையைக் (மார்க்க சங்கீதத்தை) கையாண்டு வந்தனர். அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் 'பெரு நாரை' 'இசை நுணுக்கம்' முதலியவையாகும். இவைகளே 369 ஸ்வரங்கள் உள்ள நூல்கள். பின்னர் தமிழரே அந்தந்தத் தேச மக்களின் அறிவுக்குத் தக்கபடி சங்கீதத்தை அவர்களுக்கு வழங்கினர். சங்கீதப் பிக்ஷையைப் பெற்றவர்களில் ஆரியரும் ஒருவர். ஆரியர் இசையைத் தங்கள் பாஷைக்குத் தக்கபடி சொற்களை யுண்டாக்கிக்கொண்டு இசை நூல்களை எழுதிவைத்துக் கொண்டார்கள்.

இன்னும் தமிழரின் பேரிசையைக் கற்றுக்கொண்டவர்கள், காலஞ்சென்ற திரு. முத்துசாமி தீக்ஷதர், திரு. தியாகராஜ ஐயர், திரு. சியாமா சாஸ்திரியார் முதலியவர்க ளாவர்.

திரு. முத்துசாமி தீக்ஷிதரவர்களால் ஆக்கப்பட்ட சம்ஸ்கிருத சாஹித்தியங்கள் இணைந்துள்ள சங்கீத விஸ்தாரமும், திரு. தியாக ராஜ ஐயரால் ஆக்கப்பட்ட தெலுங்கு சாஹித்தியங்கள் இணைந் துள்ள ஸ்வர நிறைவல்களும், திரு. சியாமா சாஸ்திரியாரால் ஆக்கப்பட்ட தெலுங்கு சாஹித்தியங்கள் இணைந்துள்ள சங்கீதங் களும் தமிழே. அதாவது அந்த ஸ்வரங்களுக்கு நேராக தமிழ் எழுத் துக்களை அமைக்கக் கூடியனவாம்.

மேலும், மற்றதேசத்தார் கையாண்டு வருகிற சங்கீதங்களும் தமிழ்ச் சங்கீதத்தில் அடங்கியதே. பறவைகள் பாடும் ஒலிகளும் கூட தமிழர் சங்கீதத்தில் அடங்கியதே. அவை தமிழுக்கே ஒவ்வும். சுருங்கச் சொன்னால் உலகத்தின் ஒலிகளெல்லாம் தமிழ் எழுத்து களுக்கு நேராகவும் ஸ்வரங்களுக்கு நேராகவும் பொருந்தும்.

மேல் குறித்தவைகளால் சங்கீதத்திற்கு உரியவர்கள் தமிழரே யென்று பெறப்படும். எனின் இசைக்குத் தமிழே பொருந்தும். தமிழர்களே பொருத்தமானவர்கள் என்பதாம்.

தமிழரின் பேரிசை நூல்கள் பல காரணங்களால் அழிந்து விட்டன. இருந்தாலும் நமக்குக் கிடைத்துள்ள 'சிலப்பதிகாரம்', 'சீவக சிந்தாமணி' முதலிய பழைய காவியங்களில் சங்கீத விஷயங்கள் சில குறிக்கப்பட் டிருக்கின்றன. இப்போதும் மறைந் தன போக இசை யிலக்கியங்களான தேவாரம் முதலியவையும், இயல் (தாளம்) இலக்கியங்களான திருப்புகழ் முதலியவையும் இருக்கின்றன. தமிழருக்குரிய பேரிசையைத் (மார்க்க சங்கீதத்தை) தமிழ் நாட்டார் நெறி தவறாமல் கையாண்டுகொண்டு வருகிறார்கள். இப்படி யிருந்த போதிலும் தமிழருக்கு அப்படிப்பட்ட நூல் இல்லாதது மிகக் குறைவே யாகும்.

இதை நான் எண்ணி வருந்தினேன். எப்படியாகிலும் அந்தப் பூரண விஷயங்களைக் கண்டு பிடித்து அதை அச்சிட்டு வெளிப் படுத்தித் தமிழரின் குறைகளை நீக்கி அவர்களுக்குப் பழைய பெருமையை உண்டாக்க வேண்டுமென்று சுமார் 25 ஆண்டுகளாக சங்கீதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டு வருகிறேன். இது விரைவில் முடிந்துவிடும்.

பந்து விளையாடுபவன்:—(பலத்த காயமடைந்தவரைப் பார்த்து) தாங்கள் விளையாடுவது இதுதான் முதல் தடவையா?

காயமடைந்தவர்:—இல்லை, இதுதான் கடைசித் தடவையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

—ப. சுந்திரவேலு

மான் வேட்டையும் மனமாற்றமும்

[சி. குழந்தைசாமி முதலியார்]

தடாரென்று கதவு திறந்தது. கையிலிருந்த எழுது கோலை மேசையின்மேல் வைத்துவிட்டு கதவுப் பக்கம் திரும்பிப் பார்த்தேன். 'முதலியார்வாள்! என்ன எழுதிக்கொண் டிருக்கிறீர்?' என்ற கேள்வியுடன் எனது நண்பன் துரைசாமி ஐயங்கார் உள்ளே நுழைந்தார். 'இல்லை; ஒரு சிறு கதை எழுதிக்கொண் டிருக்கிறேன்' என்று சொல்லி முடிப்பதற்குள்ளாக நான் எழுதி வைத்திருந்த சிறுகதையை எடுத்து வாசிக்கலானார் மிஸ்டர் துரைசாமி ஐயங்கார். கதையில் இரண்டு மூன்று பக்கங்கள் வாசித்துப் பார்த்துவிட்டு அவர் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார், நான் அவருடைய வாயிலிருந்து வரப்போகும் அபிப்பிராயத்தை எதிர் பார்த்தவண்ணம் அவருடையே முகத்தையே கூர்ந்து நோக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி:—

'நீங்கள் தான், கிறிஸ்து மதத்தினர் நித்திய நரகம் உண்டென்று சொல்லுவது தவறு என்றும், ஹிந்து மதப் புராணங்களில் வெறுக்கத்தக்கப் பல ஆபாசங்களிருப்பதாகவும், புனர் ஜென்மமில்லை யென்று மகமதியர்கள் கூறுவது சரியில்லை என்றும், புத்த மதத்தினர்கள் கூறுவதுபோல் எவ்வுயிருக்கும் எவ்விதத் தீங்கும் செய்யாதிருத்தல் அசாத்தியமென்றும், நாஸ்திகர்களை ஒழித்துவிட வேண்டுமென்றும், நாட்டிற்கு நலந் தருவது பொதுவுடைமையே என்றும் இப்படி எல்லாம் அநேக தத்துவங்களை உம்முடைய வீட்டிலிருந்து கொண்டுதானே முணுமுணுத்துக் கொண்டிருக்கிறீர் உம்முடைய சிறு கதைகளின் வாயிலாக அவைகளைப் பொது ஜனங்களுக்குக் கூறக்கூடாதோ?' என்று கேட்டார். அதற்கு நான்:—

'இதெல்லாம் உலகத்தாருக்குத் தெரியாதென்று நினைக்கிறீரா? கல்வி யறிவற்ற பாமரர்களைத் தவிர மற்றெல்லா அறிஞர்களுக்கும் மேற்கூறிய விஷயங்களெல்லாம் நன்றாகத் தெரியும். ஜாதிமத பேதமின்றி எல்லோரும் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதுதான் சரியென்று எல்லோருந்தான் சொல்லுகிறார்கள். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, ஜாதி வேற்றுமைகளையும் சமய வேற்றுமைகளையும் அறவே ஒழித்துவிட்டு இவ்வுலக ஜீவியத்தை இன்பமாகக் கழிப்பதற்கு அவர்கள் அதைரியப் படுகிறார்கள். எல்லா மதத்தினரும், கடவுள் ஒருவர் உண்டு, அவரே சகலத்திற்கும் ஆதிகாரணம், அவரை நாம் வழிபட வேண்டும், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யலாகாது, அறிவின்மை, அசுத்தம், சிறுமை, நோய், வறுமை, கொடுமை, பிரிவு அநீதி, பொய் என்ற

குற்றங்களை அறவே நீக்கி, கல்வி, அறிவு, தூய்மை, பெருமை, இன்பம், செல்வம், நேர்மை, ஒற்றுமை, நீதி உண்மை என்ற ஒளிகளெல்லாம் உலகத்தின் எத்திசையிலும் பரவச் செய்யவேண்டும், என்றுதான் சொல்லுகிறார்கள். ஆனால், அவ்வாறு ஒன்றுமே நடக்கவில்லை என்பதைப் பார்க்கும் பொழுதுதான் தாங்க முடியாத துக்கமுண்டாகிறது. இப்பொழுது உலகத்தில் எல்லா இடங்களிலும் யுத்தம், கொலை, களவு, சூதாடுதல், மதுவருந்துதல் முதலிய தீச் செயல்கள் தாண்டவமாடுகின்றன. இதைச் சொல்லுவானேன், கடவுளை அறிவதற்காக உதவும் மதத்தின் பெயரால் சண்டைகள் ஏற்பட்டு அதன் காரணமாகப் பலர் மடிவாரானால் இதைவிடக் கேவலம் வேறு என்ன வேண்டும்?' என்றேன்.

'உண்மைதான் முதலியாரே! நாம் எப்படிப் பார்த்தபோதிலும் உலக முள்ளளவும் மனிதர்களினிடையில் இவ்வித இன்னல்கள் இருக்குமென்றே நான் எண்ணுகிறேன். ஆனால், ஒன்று; ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார் சொல்லுவதில் எனக்கு ஒருவித நம்பிக்கையுண்டு. அவர் சொல்லுவது என்னவென்றால் :—'மானுடரே நம்முடைய இஷ்டப்படி உலகம் நடக்கவில்லை. தெய்வத்தின் இஷ்டப்படி உலகம் நடக்கிறது. 'தெய்வமே சரண்' என்று நம்பி எவன் தொழில் செய்கிறானோ, அவன் என்ன தொழில் செய்த போதிலும் அது நிச்சயமாகப் பயன் பெறும். மனிதன் தன் உள்ளத்தை தெய்வத்துக்குப் பலியாகக் கொடுத்து விடவேண்டும். அதுவே யாகம். அந்த யாகத்தை நடத்துவோருக்கு தெய்வம் வலிமை, விடுதலை, செல்வம், ஆயுள் புகழ் முதலிய எல்லாவிதமான மேன்மைகளும் கொடுக்கும். இந்தக் கொள்கை நமது பகவத் கீதையில் சொல்லப் படுகிறது. இதனை அறிந்தால், பயமில்லை. ஹிந்துக்களுக்குத்தான் இவ்விதமான தெய்வ பக்தி சுலபம். ஆதலால் ஹிந்துக்கள் தெய்வத்தை நம்பி எப்போதும் நியாயத்தைப் பயமில்லாமல் செய்து மேன்மைபெற்று மற்றத் தேசத்தாரையும் கைதூக்கி விட்டாலொழிய இந்தப் பூமண்டலத்துக்கு நன்மை ஏற்படாது. உலகத்தார் அகங்காரம் என்ற அசுரனுடைய வசப்பட்டுச் சகல தேசங்களிலும் நரகத் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். அகங்காரத்தை வெட்டி எறிந்து விட்டால் மனித ஜாதி அமரர் நிலையடையும். தன்னை மற. தெய்வத்தை நம்பு. உண்மை பேசு. நியாயத்தை எப்போதும் செய். எல்லா இன்பங்களையும் பெறுவாய். இப்போது பழைய யுகம் தெய்வ பக்தியையே மூலாதாரமாகக் கொண்டு நடைபெறப் போகிறது. ஆதலால் அதில் ஹிந்துக்கள் தலைமை பெறுவார்கள். இது சத்தியம். இதை எட்டுத் திசைகளிலும் முரசு கொண்டடியும். இதுவே யான் சொல்லக்கூடிய விஷயம்' என்பதே. சரி, அதிருக்கட்டும் உங்களுக்கு ஒரு கடிதம் கொண்டு

வந்திருக்கிறேன். அதைத் தருவதற்கு மறந்து விட்டேன்' என்று சொல்லிக்கொண்டே துரைசாமி ஐயங்கார் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து என் கையில் கொடுத்தார்.

நான் அதை வாங்கிப் பார்த்துவிட்டு 'ஏது ஐயங்கார்! நீங்களும் ஜமீன்தாரோடு (மான்கோட்டை ஜமீன்தார் கருணாகர பிரபு) வேட்டைக்குப் போக ஆரம்பித்து விட்டீர்களா? நாளைக்குக் கொஞ்சம் வேலை யிருக்கிறதே' என்றேன்.

'ஐயையோ! நாளைக்கு ஏதோ ஒரு வெள்ளைக்காரன் வரப் போகிறானாம். அவனோடு ஆங்கிலத்தில் பேசுவதற்கு நீங்கள்தான் வர வேண்டுமென்று, உங்களை ஜமீன்தார் அவசியம் வரச் சொல்லி யிருக்கிறார்' என்றார் துரைசாமி ஐயங்கார்.

'சரி, அப்படியானால் வருகிறேன். ஆனால் வேட்டையில் அவர்கள் மிருகங்களைக் கொல்லும்போது எனக்கு ரொம்பவும் சங்கடமா யிருக்குமே' என்று நான் கூறியதும் 'என்ன சார் செய்வது? சோறு போடுகிறவன் சொல்லைக் கேட்டுத்தான் ஆகவேண்டி யிருக்கிறது. நாளைய சூரியோதையத்திற்கு முன்னதாகவே அரண்மனைக்கு வந்து விடுங்கள். நான் போய் வருகிறேன்' என்று விடைபெற்றுக் கொண்டு துரைசாமி ஐயங்கார் வெளியே போய்விட்டார்.

மான்கோட்டை ஜமீன்தார் கருணாகர பிரபு மிகவும் நல்லவர். அவருக்கு சுமார் நாற்பது வயதுக்கு மேலிருக்கும். சீரிய அறிவும் உயர்ந்த நோக்கமுமுடையவர். ஆங்கிலப் படிப்பு அதிகம் கிடையாது. வேட்டையாடுவதென்றால் அவருக்கு அதிகப் பிரியம். அதிலும் அவருடைய ஜமீனில் மான்கள் அதிகம். அதனாலேதான் அதற்கு மான்கோட்டை எனப் பெயர் வந்ததுபோலும். மான் வேட்டையாட வேண்டுமென்ற ஒரே காரணத்தினாலேதான் சென்னையிலிருந்து மிஸ்டர் வில்லியம்ஸ் (Mr. Williams) என்னும் வெள்ளைக்காரன் மான்கோட்டைக்கு வந்திருந்தது.

மறுநாள் வேட்டையில் இரண்டு கலைமான்கள் பட்டன. அவைகளை நானும் துரைசாமி ஐயங்காரும் தங்கியிருந்த இடத்திற்குச் சில வேடர்கள் தூக்கிக்கொண்டு வந்து போட்டார்கள். அவ்விரண்டு மான்களில் ஒன்று அரைவுயிற்றோடு தரையில் அசைவற்றுக் கிடந்தது. அதனுடைய கண்களிலிருந்து கண்ணீர் ஒவ்வொரு துளியாகக் கீழே விழுந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் என்னை யறியாமலே என்னுடைய கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வடியலாயிற்று. அந்த மான் உயிர் விடுவதைப் பார்த்துக்கொண் டிருப்பதே பாவமென்று நினைத்துச் சற்று விலகி ஒரு தனிமையான இடத்தில் போய் நின்றேன். துரைசாமி ஐயங்

காரும் என் பக்கத்தில் வந்து நின்ருர். அப்பொழுது அவர் என்னைப் பார்த்து 'என்ன முதலியார்! சிறு குழந்தை மாதிரி அழுகிறீரே!' என்ருர். நான் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு 'இல்லை சார்; அந்த மான் உயிர் விடுவதைப் பார்த்தால் என் மனம் சகிக்காது' என்றேன். அப்போது அவர் என் கையைப் பிடித்துக் கொண்டு 'அது கிடக்கட்டும் சார். உட்காருங்கள் வெற்றிலே பாக்குப் போட்டுக் கொள்வோம்' என்ருர். இருவரும் உட்கார்ந்து வெற்றிலே போட்டுக் கொண்டோம். அப்பொழுது நான் அவரைப் பார்த்து:—

'இன்று இவர்கள் (ஜமீன்தாரும், மிஸ்டர் வில்லியம்ஸனும்) இவ்விரண்டு மான்களையும் கொன்ருர்களே, அது பெரிய பாவ மல்லவா? ஆஹா! என்ன நேர்த்தியான மிருகங்கள்! ஆஹா! எத்தனை அழகு, எத்தனை ஆண்மை, எத்தனை சாந்தம், எத்தனை பெருந்தன்மை. அவற்றைக் கொன்று விட்டார்களே. அது பெரிய பாவ மல்லவா' என்று கேட்டேன்.

'அதற்கு அவர் 'அவைகளைக் கொல்லுவது மாத்திரந்தான பாவம்? அவர்கள் ஆடு, மாடு கோழிகளைத் தின்கிருர்களே அது பாவமில்லையா?' என்று கேட்டார்.

'ஆம்' என்று நான் என் தலையை அசைத்தேன். பிறகு அவர் என்னைப் பார்த்து 'மாமிச போஜனம் ஜந்துக்களுடைய இயற்கை. மனிதன் மாத்திரமல்ல. மனிதனைப் புலி தின்னவில்லையா? சிங்கம், கரடி, புலி முதலிய துஷ்டமிருகங்களுக்கெல்லாம் அஹிம்சை என்ருல் என்னவென்று தெரியுமா? கொக்கு மீனைத் தின்ன வில்லையா? பெரிய மீன் சிறிய மீனை விழுங்கவில்லையா?' என்ருர்.

'இல்லை; மாமிச போஜனம் ஜந்துக்களின் இயற்கை என்று சொல்லுவது தவறு. மான் மாமிசம் தின்னுது, மாடு தின்னுது, ஆடு தின்னுது, குதிரை தின்னுது' என்று நான் சொன்னேன். அதற்கு அவர் நகைத்துக்கொண்டு 'அநேக ஜந்துக்கள் பிறவுயிர் களைக் கொன்றுதான் ஜீவிக்கின்றன. ஆனல் மனிதர்களெல்லோரும் மாமிசம் தின்பதை நிறுத்தினர்களானல் பிறகு கிளி, காக்கை, நாய் பூனை முதலிய அநேக ஜந்துக்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்தி விடலாமென்று தோன்றுகிறது. போதிய தானியங்களும் பழங்களும் கிடைத்தால் காக்கை, குருவி, கிளி—இவைகள் பூச்சி களைப் புசிக்காதவண்ணம் பழக்கலாம். மனிதன் மற்றெல்லா ஜந்துக் களுக்கும் இராஜன். அவன் பிற வுயிர்களிடத்து அன்பா யிருப்பா னுனல் அவைகளும் மற்ற மிருகங்களை வதைப்பதைக் கைவிடும்' என்ருர்.

'மனிதர்களிடையிலேயே கருணை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. யுத்தத்தில் மனிதர்கள் ஒருவரை யொருவர் கொல்லவில்லையா? ஆடு மாடு முதலியவற்றைக் கொன்றாலும் தின்ன உபயோகப்படுமென்று சொல்லலாம். மனிதரை மனிதர் தின்னும் வழக்கம் இல்லை. பிறகு ஏன் ஒருவரை யொருவர் கொல்ல வேண்டும்? மேலும் மனிதர்களை மனிதர்கள் அடிமைகளாக வைத்திருக்கிறார்கள். ஒரு சிங்கத்தின் கீழே இன்னொரு சிங்கம் அடிமையாக வாழுகின்றதோ? இல்லவே யில்லை. மனிதன் மனிதனையே அடிமைப் படுத்துவதுடன் ஆடு, மாடு, குதிரை, கழுதை, யானை, ஒட்டகை முதலிய மிருகங்களையும் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான். அது மட்டுமா? ஆணுக்குப் பெண் அடிமை. ஆண்களைவிடப் பெண்களுக்கு இயற்கையாகவே பலம் குறைவுதான். அதற்காக அவளை அடிமைப்படுத்தலாமோ. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே மனமொத்த அன்பும், கருணையும், இரக்கமும், காதலும் இருத்தல் வேண்டும்' என்றேன்.

'ஒரு பெண்ணை ஒருவன் அடிமையாக நடத்துவதும், மாட்டை மனிதன் தின்பதும், மானைப் புலி தின்பதும், எஜமானன் வேலையாட்களை அடிமைப் படுத்துவதும், அரசன் சொற்ப கோபத்தால் ஒருவனைக் கொல்லுவதும் இவை அத்தனைக்கும் நாம் என்ன செய்ய முடியும். மிருகங்களில் ஒன்றையொன்று துன்பப்படுத்தாமல் தடுப்பது நம்மால் முடியாத காரியம். ஒருவேளை நாய், பூனை, ஆடு மாடு முதலிய மிருகங்களைத் திருத்தினாலும் திருத்தலாம். ஆனால் துஷ்டமிருகங்களையும் கடலிலுள்ள மீன்களையும் தடுக்க மனிதனால் ஆகாது. ஆனால் மனிதர்கள் பிறவுயிர்களைத் தின்னாதபடி செய்யும் வழியுண்டு' என்று கூறிய ஐயங்கார் சிறிது தாழ்ந்த குரலில் 'நம்முடைய ஜமீன்தார் இருக்கிறாரே அவர் மிகவும் நல்ல மனுஷர்தான். அவர்மட்டும் அவருடைய ஜமீனிலுள்ள பெண்களையும் மற்ற மனிதர்களையும் அடிமைகளாகக் கருதாமலிருந்தால் இங்கே சமத்துவமும் சமாதானமும் உண்டாகும், சமத்துவமும் சமாதானமும் ஒரு நாட்டில் நிலையுற்றால் எல்லா நாடுகளிலும் சீக்கிரத்தில் பரவி விடும். ஜனங்களில் ஒருவரை யொருவர் கண்டறிந்து அதன்படி நடப்பது உலக இயல்பு. நாட்டில் அரசன் எவ்விதமான ஆகாரம் உண்கிறானோ அது போன்ற ஆகாரமே சகல ஜனங்களுக்கும் என்ற ஏற்பாடு இருக்க வேண்டும். அரசனுடைய மகனுக்கும் உழவனின் மகனுக்கும் ஒரே விதப்படிப்பு ஜீவிதமும் ஏற்பட வேண்டும். அப்படிச் செய்தால் எல்லாக் கஷ்டங்களும் நீங்கிப் போகும். வேண்டுமானால் நம்முடைய ஜமீன்தார் அப்படிச் செய்யட்டும் பார்ப்போம். அவருக்கு அவ்வளவுதூரம் புத்தி வந்துவிடுமா?' என்று கூறினார்.

அதே சமயத்தில் எங்களுக்கு எதிரே ஒரு புதரிலிருந்து 'நீங்களே புத்திமான்கள். எனதறியாமையை அகற்றியவர்களும் நீங்களே' என்று கத்திக்கொண்டே எங்கள் அருகாமையில் வந்த கருணாகர பிரபு கண்ணீர் வடித்துக்கொண்டே 'அதோ அந்தப் புதரிலிருந்துகொண்டு உங்களுடைய சம்பாஷணையை உற்றுக் கேட்டுக்கொண் டிருந்தேன். நான் தீர்மானம் செய்துவிட்டேன். மரணம் கள்ளனைப்போல் வரும். எனக்கு முன் எத்தனையோ ஆயிரம் ஜமீன்தார்களும் அரசர்களும் உலகத்தில் பிறந்து மாண்டு போயினர். என்னுடைய ஜமீனில் ஒரு புதிய தர்மம் நிலைப்படும்படி செய்வேன். இது என்னுடைய ஜமீனல்ல. இங்கு விளையும் சகல வஸ்துக்களையும் எல்லோருக்கும் சரியாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். வேலை செய்யத் திறனுள்ளவர்கள் எல்லோரும் கைத் தொழில் விவசாயம் முதலிய தொழில்களைச் செய்யவேண்டும். எல்லோருக்கும் சம போகம். என் குடும்பத்தில் என்ன என்ன சௌகரியங்களுண்டோ அவை ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டும். இனிமேல் இங்கு எஜமானனில்லை. இங்கு அடிமையில்லை. இங்கு அன்பே ஆட்சி புரியும். இறைவன் தன் அருளே பெருகும். அடிமைத்தனம் ஒழியும். அவ்வாறே நான் செய்வேன். சத்தியம், சத்தியம், மும்முறையும் சத்தியம். பெரியவர்களே இனிமேல் நமது ஜமீனில் நடக்க வேண்டிய காரியங்களை இப்பொழுதே ஆரம்பிப் போம். தாய் நாட்டை வணங்குவோம்' என்று கூறினர்.

நாங்களும் 'சரி' என்று சம்மதித்தோம். அன்று முதற் கொண்டே மான்கோட்டை ஜமீனில் அரிய சீர்திருத்தங்களெல் லாம் நடைபெறலாயிற்று. குடிகளும் சமாதானத்துடனும் சந்தோ ஷத்துடனும், வறுமையின்றிப் பயமின்றி வாழ்ந்து வருகின்றார்கள். கருணாகர பிரபுவின் மான்வேட்டையையும் அதனால் அவனுக்கேற் பட்ட மனமாற்றத்தையும் பொது ஜனங்கள் ஒருநாளும் மறக்க மாட்டார்கள்.

உபாத்தியாயர்:—மாதவா நான் கொடுத்த கணக்கை செய்து விட்டாயா ?

மாதவன்:—இல்லிங்....க....சா....ர்.

உபாத்தியாயர்:—ஏன் ?

மாதவன்:—உங்களுக்குத்தான் ஆன்ஸர் தெரியுமே.

—ப. சுந்திரவேலு

வனிதா அல்லது கொலையுண்ட காரிகை

[A. வாசிமலை]

(All rights reserved with the author)

[முன் கதைச் சுருக்கம் :—காதலர்களான ராமகிருஷ்ணனும் வனிதாவும் கடற்கரையில் வார்த்தையாடிக் கொண்டிருக்கிருர்கள். காதலன் மறுநாள் பக்கத்தூரிலுள்ள தன் நண்பன் வீட்டுக்கு விருந்துக்குப் போவதாகவும் அதற்குக் காதலி வருவதற்காக 8 மணிக்குக் கார் அனுப்புவதாகவும் சொல்கிறன். வேலையில்லாது இராமகிருஷ்ணனின் உதவியால் ஜீவித்து வரும் கோவிந்தனும் ரங்கநாதனும் வனிதாவை ஏமாற்றி நகைகளை அபகரிக்க எண்ணினர். மறுநாள் தாங்கள் திருவனந்தபுரம் போவதாக நண்பனுக்குக் கடிதம் அனுப்பினர். டிரைவருக்குப் பதிலாக கோவிந்தனல் ஓட்டப்பெற்ற கார் வனிதாவை ஏற்றிக்கொண்டு சென்றது. வழியில் ரங்கநாதனும் சேர்ந்தான். சாகசமாக அவள் பக்கம் அமர்ந்து, மயக்க மருந்தை முகத்தில் காட்ட மயக்கமுற்று அவன் கையிலே சாய்ந்தாள். கார் போய்க் கொண்டிருக்கிறது.]

அத்தியாயம் 4.

பள்ளிக்கூடத்தில் கூட்டம் (Meeting) கலைந்தவுடன் ராமகிருஷ்ணன் வெளியில்வந்து, தன் கார் வழக்கம்போல் நிற்குமிடத்தை யடைந்து பார்த்தான். கார் வந்திருக்கவில்லை. சிறிது நேரம் அதன் வரவிற்காகத் தாமதித்தும் பார்த்தான். கார் வந்தபாடில்லை. அதற்குப் பதிலாக டிரைவர் ராமன் மிகவும் பரபரப்புடன் ஓடிவருவதைக் கண்டான். ராமகிருஷ்ணன் அவனைப் பார்த்து, 'ஏன், ராமு! எதற்காக இப்படி ஓடி வருகிறுய்? கார் எங்கே?' என்றுன்.

ராமன் :—'எஜமானே! அதைத் தானே இப்பொழுது சொல்ல வருகிறேன். நான் காரைக் கொண்டுபோய் 'ஸ்டாண்டில்' நிறுத்திவிட்டு, வீட்டில்போய் உணவருந்திவிட்டு வந்துவிடலாமென்று போனேன். போய்விட்டுத் திரும்பிவந்து 7¼ மணிக்கு கார் ஸ்டாண்டைத் திறந்து பார்த்தேன். என்ன சொல்லுவேன், எஜமானே! அங்குக் காரைக் காணும். உடனே இங்கு ஓடிவந்து பார்த்தேன். இங்கும் காரைக் காணும். மறுபடியும் அங்கே சென்று அண்டை வீட்டார், மற்றவர்கள் எல்லோரையும் விசாரித்துப் பார்த்தேன். ஒரு சிலர் தங்களுக்கு ஒன்றுமே தெரியாதென்றும், மற்றும் சிலர் கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் கார் அவ்விடத்தைவிட்டுக் கிளம்பிச் சென்றதைத் தங்களுடைய கண்ணுரக் கண்டதாகவும் தெரிவித்தனர். டிரைவர் யாரென்று

தெரியுமா என்று கேட்டதற்கு, யாரோ ஒருவன் தலையில் முக்கா டிட்டுக் கொண்டுவந்து ஸ்டாண்டின் கதவைத் திறந்ததாகவும், அவனை அவர்கள் நான்தானென்று நினைத்துக்கொண்டு கவனியாம லிருந்து விட்டதாகவும் தெரிவித்தனர். உடனே இங்கோடி வந்தேன்' என்று சொல்லி முடித்தான்.

ராமகிருஷ்ணனுக்கு இதையெல்லாம் கேட்கவே, முதலில் ஒன்றும் விளங்கவில்லை. மறுபடியும் விஷயத்தை அவனிடமிருந்து கேட்டுத் தெளிவாக அறிந்து கொண்டவுடன், டிரைவரையும் தன்னேடு அழைத்துக்கொண்டு வீடுநோக்கிப் புறப்பட்டான். வீடுசென்று அவனும் பலரை விசாரித்துப் பார்த்தான். எல்லோரும் டிரைவர் சொன்ன பிரகாரமே சொல்லவே, ராமகிருஷ்ணனுடைய மனம் மிகவும் குழப்பமடைந்து விட்டது. அவன் இவ்வாறெல்லாம் காரியங்கள் நடக்குமென்று தன் கனவில்கூட எண்ணியதில்லை. எனவே, அவன் நேராகச் சென்று வனிதாவின் வீட்டை யடைந் தான். சென்றவன் வீட்டு வாசற்படியி லேறும்பொழுதே 'வனிதா! வனிதா !!' என்று அழைத்துக்கொண்டே சென்ருன். அவன் அவ்வாறு கூப்பிட்டுக்கொண்டே வருவதைக் கண்ட வனிதாவின் மாதா பிதாக்கள், மிகவும் கலவரப்பட்டவர்களாய்த் தாங்கள் இருந்த இடத்தை விட்டெழுந்து தாழ்வாரத்தை நோக்கி ஓடி வரவும், ராமகிருஷ்ணன் அவர்களைப் பார்த்து 'வனிதா எங்கே?' என்று கேட்டான்.

'என்ன ராமகிருஷ்ணு எங்களிடமே வனிதா எங்கே என்று கேட்கிருய்? அவள் கொஞ்ச நேரத்திற்கு முன்புதானே உன் காரில் ஏறிக்கொண்டு உன் வீட்டிற்கு வந்தாள்' என்ருர் கோபால் முதலியார்.

ரா-கி:—அப்படியானல், நீங்கள் சொல்வது உண்மைதான? வீட்டில் இப்பொழுது வனிதா இல்லையா!

கோ-முதலியார்:—ஆம், கிருஷ்ணு! வாஸ்தவமாகத்தான் சொல்லுகிறேம். என், நடந்த சங்கதியென்ன?

ரா-கி:—மாமா! நாம் மோசம் போனேம். யாரோ ஒருவன் என் காரையே திருடிக் கொண்டுவந்து வனிதாவை அழைத்துக் கொண்டு போய்விட்டான்.

உடனே அவன் மாமி 'அப்படியானல் அவளை உண்மையில் நீ அழைத்துக்கொண்டு போகவில்லையா! ஆ! வனிதா! வனிதா!!' என்று கூறிக்கொண்டே நிலையற்ற மரம்போல் நிலத்தில் சாய்ந்தாள். பின்பு அவருக்கு மூர்ச்சை தெளிவிக்க வேண்டிச் சில பரிகாரங்கள் செய்த பிறகு, ராமகிருஷ்ணன் தன் மாமனைப் பார்த்து, 'மாமா! நீங்கள் அக்காரைப் பார்த்தீர்களா? அதை ஓட்டிக்கொண்டு வந்தவன் யாரென்று தெரியுமா?' என்ருன்.

கோ-மு:— கிருஷ்ணு ! நான் வீட்டினுள்ளிருந்து பத்திரிகை படித்துக்கொண் டிருந்ததால், அக்காரைப் பார்க்கவில்லை. ஆனல், என் காதில் விழுந்த அதன் ஊதுகுழல் சத்தத்திலிருந்து, அது உன்னுடைய கார்தானென்று என்னல் நிச்சயமாய்க் கூறமுடியும்.

அதற்குள் அங்கு நடந்த சங்கதியைக் கேள்வியுற்று வந்த பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர், 'உன் கார் இங்கு வரும்போதெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்று திடீரென்று கார் வரவே நான் பத்திரிகை வாசிப்பதையும் நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அது உன்னுடைய காராகவே யிருந்தது. அது மட்டும் நிச்சயம்'

'அதில் வந்த டிரைவரை நீங்கள் பார்த்தீர்களா ?'

'வந்தது உன் கார்தானென்று தெரிந்தவுடன், மறுபடியும் பத்திரிகை வாசிப்பதில் என் கவனத்தைச் செலுத்திக்கொண் டிருந்தேன். அதில் வந்த டிரைவரை நான் முதலில் கார் வந்த பொழுது பார்த்தேனே, அவ்வளவுதான். அதன் பின்பு பார்க்கவே யில்லை. அவன் தலையில் ஏறக்குறைய முகத்தில் நிழல் படும்படியாக, ஒரு சிறு வேஷ்டித்துண்டை, ஓர் ஆடு மாடு மேய்ப்பவன் தலையில் சுற்றி யிருப்பதுபோல் சுற்றி யிருந்தான். பின்பு வனிதா அவனேடு வந்து ஏதோ சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்தாள்போல் தெரிகிறது. அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து நான் ஒன்றும் அறிந்துகொள்ள ஏதுவில்லை. அதில் வனிதா அவனைப் பார்த்து, 'கார் டிரைவ ரெங்கே, நீ வந்திருக்கிருய் ?' என்று ஒரு வாக்கியம் சொன்னது நன்ருய் என் மனதிலிருக்கிறது. அதற்கவன் ஏதோ ஒரு பதிலை மிகவும் சிறுத்த குரலில் சொன்னன். பின்பு கடைசியாக, 'என் வல்லமையை நீ இன்று பரிசோதித்துப் பார்க்கலாம். உம்; நேரமாகிறது. அங்கு ராமகிருஷ்ணன் உனக்காகக் காத்துக்கொண் டிருக்கிருன்' என்று யாரோ சொன்னது போலிருந்தது. கொஞ்ச நேரம் கழிந்தவுடன் காரும் நகர்ந்து சென்றுவிட்டது. அவ்வளவு தான் எனக்குத் தெரியும்' என்ருர் அண்டை வீட்டுக்காரர்.

ரா-கி:—நான் மேலும் அவளை 8 மணிக்குத்தானே தயாரா யிருக்கச் சொன்னேன். இப்பொழுதுதான் மணி 8 ஆகிறது. அதற்குள் எவ்வாறு அவள் புறப்படத் துணிந்தாள் ?

கோ-மு:—என்ன! அவள் சரியாக 8 மணிக்கே இவ்விடத்தை விட்டகன்ருள்.

ரா-கி:—அப்படியானல், உங்கள் கடிகாரத்தில் இப்பொழுது மணி யென்ன ஒன்பதா ஆகிறது ?

கோ-மு:—ஆம்; அதோ பார்; மணி ஒன்பது ஆகிறது.

ரா-கி:—ஒரு கடிகாரம் ஒரு மணி நேர வித்தியாசத்தி லிருப்பதைப் பார்த்தால், அதிலும் ஏதோ கைவேலைகள் நடந்திருக்கு

மென்றே நினைக்கிறேன். இன்று காலையில்கூட நான் என் கைக் கடிகாரத்தையும் தங்கள் வீட்டுக் கடிகாரத்தையும் ஒத்திட்டுப் பார்த்ததில், இரண்டும் ஒரே நேரத்தையே காட்டிற்று. எனவே எனக்கு இதிலும் சந்தேகமாகவே யிருக்கிறது. இன்று யார் யார் இங்கு வந்து போனவர்கள்?

'கோவிந்தனைத் தவிர மற்றவர்கள் ஒருவரும் வரவேயில்லை. ஆனால், அவனென்ன இப்படிப்பட்ட காரியமெல்லாம் செய்யக் கூடிய பையனா? தங்கமான பையனாச்சே! மேலும் கள்ளத்தன மான காரியம் செய்ய வருபவன் சகலரும் அறியும்படியாகவா வருவான்?' என்றாள் வனிதாவின் தாயார்.

ரா-கி:—ஆக இப்பொழுது நடந்திருக்கும் விஷயத்தைப் பார்த்தால், யாரோ ஒருவன் கடிகாரத்தைத் திருப்பி வைத்து, குறித்த நேரத்திற்கு முன்னதாகவே வந்து நான் அழைத்துக்கொண்டு வரச் சொன்னதாகவே சொல்லி வனிதாவை ஏமாற்றி அழைத்துப் போயிருக்கிறான் போல் தோன்றுகிறது.

அவன் மாமனார் 'ஆ! வனிதா!' என்று பெரு மூச்செறிந்தார்.

ராமகிருஷ்ணன், 'சரி, மாமா! இனி இங்கு நாம் வருந்தி நிற்பதிற் பயனில்லை. நீங்கள் உடனே புறப்பட்டுச் சென்று நடந்த விஷயத்தைப் போலீஸ் அதிகாரிகளிடம் தெரிவியுங்கள். நான் உதயபுரம் சென்றுவிட்டு இன்னும் கொஞ்ச நாழிகையில் திரும்பி வந்து விடுகிறேன்' என்று சொல்லிப் போய்விட்டான். சென்ற வனிதா அங்கு வந்தாளா என்று விசாரித்துப் பார்த்தான். அங்கு அவள் வரவில்லை என்ற பதில் கிடைக்கவே ஒருவரிடமும் ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல் திரும்பி வந்துவிட்டான். நிற்க,

வனிதாவின் வீடு துக்கமென்னும் தேவதையால் முற்றுகை யிடப்பட்டது. ஒரு பக்கம் வனிதாவின் தம்பி, சீனிவாசன் 'அக்கா! அக்கா!!' என்று கூக்குரலிட்டு அழும் ஒலி சதா ஒலித்துக் கொண்டே யிருந்தது. மற்றொரு பக்கம் வனிதாவின் தாயார் விசனத்தில் மூழ்கி, அன்னாகாரம்கூட உட்கொள்ளாது படுத்திருந்தாள். வனிதாவின் தகப்பனார் போலீஸாருக்குச் சமாச்சாரம் தெரிவித்துவிட்டு வந்து வீட்டிலிருந்து, ராமகிருஷ்ணன் வரவை அதி ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமிருந்தார். திரும்பிவந்த ராமகிருஷ்ணனும் திருப்திகரமான விடையளிக்காமற் போகவே, அவரும் துக்கமென்னும் வியாதியால் பீடிக்கப்பட்டார். சுருங்கச் சொல்லின், சந்தோஷமான வாழ்க்கை நடத்திக்கொண் டிருந்த ஒரு குடும்பமானது சதா துக்கத்தால் பீடிக்கப்பட்டு ஊணுறக்க மின்றி, ஒரு நல்ல செய்தி எங்கிருந்தாவது கிடைக்காதா என்று எதிர்பார்த்திருந்தது.

(தொடரும்)

முதல் தரமான
உயர்ந்த சந்தனக் கட்டை

எங்களிடம் முதல்தரமான உயர்ந்த சந்தனக்கட்டையும், சந்தனத் தூளும், சந்தனச் சக்கையும், வேரும் கிடைக்கும். உலகத்திலேயே வாசனையில் சிறந்த முதல்தர சந்தனக் கட்டையை நாங்கள் வர வழைத்து வியாபாரம் செய்வதால், உயர்தர சந்தனக்கட்டை வேண்டியவர்கள் எங்களிடம் வந்து பார்த்து வாங்கவும். சில்லரையிலும் மொத்தத்திலும் கிடைக்கும்.

சந்தனத் தூள்	1	பவுன் பெட்டி	0—9—0.
,,	½	,,	0—5—0.
,,	¼	,,	0—3—0.

பழனியாண்டவர் கம்பெனி,
சந்தன வியாபாரம்,
126c. ஆதியப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

தாசிகளும் தாசிகாந்தர்களும்
(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப் புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப்புத்தகத்தின் விலை எட்டணா தான். தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கிடைக்குமிடம் :

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

கோல்டனுல்

நண்பர்களே! இந்த மருந்தானது தங்கம் முதலான விலை யுயர்ந்த வஸ்துக்களினுல் தயார் செய்யப்பட்டது. இதனை அநேகர் உபயோகித்து வருகின்றனர். இதன் உயர்ந்த குணத்தைப் பலரும் புகழ்கின்றனர். சிறுவர்கள் முதல் வயோதிகர் வரையில் நிர்ப் பயமாய் உபயோகிக்கலாம். தாது விருத்திக்கு நல்ல மருந்து. மலேரியா என்னும் விஷ சுரத்தினுலாவது அல்லது வேறு எந்த சுரத்தினுலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே சொல்ல வேண்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசி யின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி அதிகரிக்கும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்தபாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்க ளாவார்கள். திடகாத்திர புத்திரர் களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதிகர் வரை ஆண் பெண் இரு பாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

இம் மருந்தை ஒரு மாதம் சாப்பிட்டால் பலசாலிகளான புத்திரர்களைப் பெறலாம் புத்திர சந்தானம் உண்டாவதற்கு இம் மருந்தை ஆண் பெண் இருபாலர்களும் சாப்பிட வேண்டும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0.

கர்ணபிந்து

சகலவிதமான காது நோய்களுக்கும் இலேசாக அனல் காட்டி காதில் 3 துளி விட்டு, பஞ்சு வைக்கவும். மருந்து உபயோகிக்கும் போது, காதில் சீழ்வடிந்தால் சுத்தம் செய்த பிறகு உபயோகிக்கவும்.

தீரும் வியாதிகள்:—காது குத்தல், சீழ்வடிதல், ஆராத இரணங்களுக்கு முக்கியமானது.

புட்டி 1-க்கு விலை அணு 8.

கார்டோலின்

(ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்)

அநேக மருந்துகளால் தீராதெனக் கைவிட்ட நோயைத் தீர்த்திருக்கிறது. ஈளை இருமல், சுவாசகாசம், காச இருமல், மந்தாரகாசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

மக்கள் சுவாசக் குழாயிலுண்டாகும் வீக்கத்தினலும், இரணத்தாலும், சுவாசம் விடுவதற்கு ஆயாசப்பட்டும், இழுப்பு இருமலினல் துன்பப்பட்டும் வாடி வருந்துகிறார்கள். ஆங்கிலர்கள் இவ்வியாதியை இரண்டு விதமாகக் கொள்கின்றார்கள். அவையாவையெனில் பிரான்கயடிஸ், ஆஸ்தமா என்பவையாம். இந்தியர்கள் இதை எட்டுவிதமாகப் பிரிக்கிறார்கள். ஈளை இருமல், காச இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம் என்பனவாகிய பெயர்களால் நோயைக் கணிக்கின்றார்கள். இந்நோயானது மழைக் காலங்களில் பெரும்பான்மையும், துன்பத்தை உண்டுபண்ணுகின்றது. சிற்சிலருக்கு அதிக வெப்பமான காலத்திலும் துன்பம் தருகின்றது.

இந்த நோயால் துன்பமடைவோர்கள் எத்தனையோவிதமான மருந்துகளை சாப்பிட்டும் நோய் நிவர்த்தி ஆகாமையால் மருந்துகளில் நம்பிக்கை இழக்கின்றார்கள்.

வைத்தியர்கள் தங்களால் இயன்ற மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் குணமடையாமையைக் கண்டு இந்நோயானது கர்மத்தால் வந்ததெனக் கூறிவிடுகின்றார்கள்.

இத்தகையர்களின் மனதை மாற்றுவான் வேண்டியே நமது கார்டோலின் என்னும் மருந்து வெளிவந்திருக்கிறது. இம்மருந்தால் சுமார் 30, 40 வருடங்களாகக் கஷ்டப்பட்டிருந்த காசநோய் இருந்த அநேகர் சுகப்பட்டிருக்கின்றனர். அஸ்தமா இருமலானது எந்த நிலைமையில் இருந்தாலும் இம் மருந்தானது குணப்படுத்திவிடும். ஆஸ்தமா என்னும் சுவாச ரோகத்தால் துன்பப்படுபவர்கள் அவநம்பிக்கையன்றி இம் மருந்தை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

அன்புள்ள, டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தாங்கள் எனது குமாரனுக்கு ஏற்பட்டிருந்த அஸ்தமா வியாதிக்குக் கொடுத்த கார்டோலினல் என்னும் மருந்தை உபயோகித்ததிலிருந்து இழுப்பு இருமல் நின்றுவிட்டது. இப்பொழுது என்னுடைய மகன் சுகமா இருக்கின்றான்.

சென்னை பெரியமெட்டு கண்டிராக்டர் நா. கணபதி முதலியார்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 10.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவு பகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையை வைத்து நமை நீங்க சொரிந்து கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்கு கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்து கொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக் கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கரை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானாலும் போக்கக் கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் உங்களுக்கு இதன் பெருமையைச் சொல்லுவார்கள்.

வேண்டுவோர் **6** அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

நற்சாட்சி பத்திரம்

வைத்திய ஆசிரியர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என் குடும்பத்தில் ஒருவருக்கு சரீரம் முழுதும் 'எச்சிற் றழும்பு'போல் ஒருவித படை உண்டாகி இருந்தது. அதற்கு வேண்டிய வைத்தியங்கள் செய்தோம். ஒன்றும் குணப்பட்டு வரவில்லை. இறுதியில் அவர் கஷ்டம் தாங்க முடியாது பாயும் படுக்கையுமானார்.

இப்படி யிருக்கையில் சென்னை சென்று வந்த என் நண்ப ரொருவர் தன்னிடம் தங்களால் தயாரிக்கப்பட்ட 'காஸ்டோலின்' என்ற படை மருந்து இருக்கிறதென்றும், ஒரு சமயம் இந்த மருந் தினல் மேற் கூறப்பட்டவரின் படை வியாதி நீங்கினலும் நீங்கக் கூடும் என்றும் கூறி என்னிடம் மேற்படி மருந்தைக் கொடுத்தார்.

அதைப் பாயும் படுக்கையுமாகக் கிடந்த படை வியாதியினருக்கு நான் அதில் கூறிய முறைப்படி போட்டதில் மிகுந்த ஆச்சர்யமான குணத்தைக் கொடுத்தது. அவர் உங்களை வாழ்த்தாத நேரமில்லை. இப்போது அவருக்கு 3, 4, மாதங்களாக தேகத்தில் ஒருவித வியாதியும் இல்லாமல் இருந்து வருகிறது. நமது இந்தியர்கள் தங்களின் 'காஸ்டோலின்' மருந்தை வாங்கி உபயோகிப்பார்களா னல் எவ்வளவோ நன்மை யடைவார்கள். வேறு மருந்துகளுக்குப் பணத்தை வீணில் கொடுத்து தேகத்தையும் அனியாயமாகக் கெடுத்துக் கொள்வதினின்றும் காக்கப்படுவார்கள். தங்களின் 'காஸ்டோலின்' ஒரு சிறந்த ஔடதம் என்பதை மனமுழு உண்மை யுடன் கூறுகிறேன். தங்களின் வைத்தியம் சிறப்பதாக !

அன்புள்ள,

G. M. அலிஹுஸைன் M. H. A.,

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிஸ்ட் நாகூர் 26–12–34.

ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

ஹெட்மாஸ்டர் D. S. ரங்கா ராவ் வணக்கமாய் எழுதிக் கொண்டது. இப்பவும் நான் இரண்டு வருஷகாலமாகத் தங்கள் மருந்து (காஸ்டோலின்) வரவழைத்து என் சிநேகிதர்கள் படை சௌக்கியமா யிருப்பதைக் காண எனக்கு கணக்கில்லாத ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறதை இக்கடித மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் அநுபோகத்தில் இம்மருந்தை மிகவும் சிலாக்யமாய்க் கருதுகிறேன். எனக்குப் படை ஏற்பட்ட இடத்தின் அடையாளமே இல்லாமல் வேறு தோல் வளர்ந்தது. ஆகையால் தாங்கள் தயவு செய்து இந்த லெட்டர் கண்டவுடன் இதில் அனுப் பிய 7 அணு ஸ்டாம்பைப் பெற்றுக்கொண்டு உடனே இன்னு மொரு காஸ்டோலின் மருந்து பாட்டிலை அடியில் கண்ட விலா சத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

இப்படிக்கு,

D. S. ரங்கா ராவ், ஹெட்மாஸ்டர்.

பசுபதிபாளையம், எலிமெண்டரி ஸ்கூல்,

மேலபாளையம் போஸ்டு, வையா கரூர்

கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேகியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச் சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத் தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித் திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட் டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற் படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண் டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

R. சடகோபாச்சாரியார், B. A. B. L. ஐகோர்ட் வக்கீல்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கிறேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேகியத்தினால்தான், என் குழந்தைபெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A. B. L.

District Munsiff, Tanuku.

ஒரு பவுன் புட்டி விலை ரூ. 2.

காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜகட்டிகள் (சைன்ஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துகொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது இதை உபயோகித்துப் பாருங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும், இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறுமுறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும், எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேர்த்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்ப முதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி

தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய்விட்டன. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தியடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜகட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துகொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டன. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய்க் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார். கொஞ்சம் வலி குறைவாயிருந்தது. அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்தக் கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானல் பட்டணம் அனுப்பலாம், இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம், என் மகன் இந்த வியாதியால் இறந்து போனுன் என்று சொன்னதைக் கேட்டபின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தைப் போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது. என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக்கொண்டு ஏழைகளுக்குக் கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு :—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இரண்டு மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

எமது விலாசம்:

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

M21, N30TA N39·10·1
207673

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் இயற்றிய

அரிய நூல்கள்

அனுபவ வைத்திய நூல்

(2 - ஆம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவேயிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

இதன் விலை ரூபா 2. தபால் சார்ஜ் வேறு.

ஜீவ இரகசியம்

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறி[illegible] களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட வி[illegible] யங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெ[illegible] [illegible] பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வா[illegible] [illegible]ான சுகத்தை—தேகம் சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந் நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1. தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

எது? எது?

LUK

பீடி

ரிஜிஸ்டர்ட்

உலகில் எத்தனையோ பீடிகள் இருந்தாலும் அவற்றுள் எங்கள் பீடி தலை சிறந்தது என்பதற்கு ஒருமுறை வாங்கி உபயோகித்தால் தெரியும். இந்த பீடியை உபயோகித்தால் அதிக பசியை உண்டாக்கும், இருமலைப் போக்கும், சளியைக் கரைக்கும், போதுமான காரம் இருக்கும், கசப்பு இராது, சிகரெட்டுக்குள்ள மணம் இருக்கும் இதைப்போல் வேறு எந்த பீடியும் இருக்காது. பீடியைப் பிடித்தபின் மற்ற பீடிகளைப்போல் வாயில் ஏற்படும் கெட்ட வாசனை (புகையிலை வாசனை) இதில் இராது. 24 பீடிகள் ஒரு அழகிய பெட்டியில் பாக் செய்து விற்கப்படுகிறது. இந்த பீடி சட்டைப் பையில் வைத்தால் புகையிலைத் தூள் கொட்டி சொக்காய் கரை பிடித்துப் போவதைத் தடுத்து நாகரீக முறை ...ல் சொக்காய்ப் பையில் வைத்துக்கொள்ள அநுகூலமாய் ...க்கும். இதனை லக்ஷக் கணக்கில் மக்கள் ...த்த விலை விபரம் கொண்டாடுக... வேண்டுவோர் ... எழுதி தெரிந்து கொள்ளவும். ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:—

லக் பீடி ஆபீஸ்,

LUK TOBACCO CO.,

30, VAITHIYANATHA MUDALI STREET, MADRAS.

தந்தி விலாசம் :—வாசனை, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 3... Vaithiyanatha Mudali Street, Madras.